# பொற்கிழி.

4287

கோவி. மணிசேகரன்.

வானதி பதிப்பகம்
தி. நகர் · சென்னை-17

முதற் பதிப்பு : டிசம்பர், 1979
உரிமை பதிவு

திருநாவுக்கரசு தயாரிப்பு

அச்சிட்டோர் : லீப்ஸிக் பிரிண்டர்ஸ், சென்னை-600 014

# பதிப்புரை

புகழ்பெற்ற சரித்திரக் கதை ஆசிரியரான திரு. கோவி. மணிசேகரன் அவர்களின் பன்னிரண்டு முத்தான கதைகளின் தொகுப்பு இந்நூல்.

'பொற்கிழி' என்னும் முதற் கதை 'குமுதம்' 'சவரன்' பரிசு பெற்றது. பொற்கிழி சித்ராவின் சித்திரத்திற்கு மட்டுமல்ல, ஆசிரியருக்கும்தான்.

விளம்பரப் பெருந்தலைகள் விளம்பரமற்ற உண்மைகளை எப்படி இருட்டிப்புச் செய்கின்றன என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுவதே, கவி ராட்சசன், பாவம் ஒட்டக்கூத்தர்!

'நாயக்கரின்' 'தமிழ்ப்' பண்பையும், அஞ்சா நெஞ்சையும், புத்தி சாமர்த்தியத்தையும் விளக்கும் 'பாதுஷாவின் பாதுகை' மிகச் சிறந்த படைப்பு.

இந்தத் தொகுப்பு மிகச் சிறந்த சரித்திரக் கதைகளின் கோவை. தமிழ் மணக்கும் இந்நூலை மக்களுக்கு வழங்குவதில் வானதி பெருமை கொள்கிறது. வாய்ப்பளித்த நாவலாசிரியர் திரு. கோவி. மணிசேகரன் அவர்களுக்கு நன்றி.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்.

4287

## இதிலுள்ள கதைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பொற் கிழி | 5 |
| 2. | கவி ராட்சசன் | 16 |
| 3. | சிறைக்கோட்டம் | 28 |
| 4. | பாதுஷாவின் பாதுகை | 35 |
| 5. | அழகின் அடிமை | 47 |
| 6. | அந்தரங்கம் | 50 |
| 7. | குருவின் ஆணை | 69 |
| 8. | முதலும் வட்டியும் | 80 |
| 9. | உயர்ந்த மனிதன் | 89 |
| 10. | கணையாழி | 97 |
| 11. | தாது கோபுரம் | 111 |
| 12. | தாய் | 176 |


4287

# பொற் கிழி

காதல் மலர்ந்து கனத்தில் நெகடித்துச் சீதள நிலவின் முன் ஜீவ வீணையில் சுருதி சேர்த்துப் பாடிய ராகங்கள் ஒன்றா இரண்டா...

எத்தனையோ...

ஒரு நூறு இரவுகளின் ஓராயிரம் கனவுகள் காவியமாய்ப் பதிந்து ஓவியமாய்ப் பரிணமித்த துன்பியலின் வண்ணக் கோலமாயிற்றே அது!

இதயச் சிமிழ் திறக்கிறது; நகையொளி மங்கி விகசிப்பல் மெல்லிதாக எழுந்து கேட்கிறது. செவ்வரி படர்ந்த சேலனைய வேல் விழிகள் பனிக்கின்றன.

''சித்ரா...சித்ரா!''

எங்கோ, எங்கோ கேட்கிறது அந்தக் குரல். வருந்தரங்கனைத் தாண்டி மலை முகடுகளிலிருந்து எதிரொலித்துக் காற்றில் தேய்ந்து தேய்ந்து சன்னமாகக் காதுகளில் நுழைகிறது.

கவனம் கனவை மருவுகிறது; கனவு கடந்த காலத்தைப் புணருகிறது. நிகழ்ச்சிகள் மழலையாய்ச் சொட்டுகின்றன!

வேழம் நிகர்த்தவனுல் வெட்டப் பெற்ற சோழகங்கம் ஏரி (பொன்னேரி) சலனமற்று நிலாவழியில் தரைக் கண்ணாடியாய்க் காட்சி தருகிறது.

'களுக்' 'களுக்' என்ற சிரிப்பொலி மட்டும் கரையோரத்தில் கேட்கிறது. புன்னை மரத்தடியில் மெல்லிதான காற்றை நுகர்ந்த வண்ணம் சித்ராவும் ராசேந்திரனும் முத்திரை பதித்து முறுவலித்துத் தயங்கும் முயங்கத்துக்குத் தாலாட்டுப் பாடுகின்றனர்.

''சித்திரா!'' - எத்தனை முறைதான் இப்படியழைப்பான் ராசேந்திரன்! ''உன் பெயருக்குப் பொருத்தமானவள் நீ!''

குண்டலம் செவியிலாட, மார்பில் குலமணியாரம் மின்ன, அன்று விண் புகழ் கொண்டோன் பெயர் கொண்டோனான ராசேந்திரன், சித்திரமனையாளை - சித்திரத்துக் கலையினளை - உற்று உற்றுக் கவனிக்கிறான். உச்சி மோந்து துய்க்கின்றான்.

''போதும் விடுங்கள்!'' சிணுங்குகிறாள் சித்திரா.

''ஏன் சித்திரா?''

''என்றைக்கும் இல்லாத புது மாதிரியான வேடிக்கை.''

''என்றைக்காவது இந்த வேடிக்கை நிகழ்ந்துதானே ஆகவேண்டும்?''

சேலுண்ட விழி நிமிர்த்திச் செயல் மறந்து நோக்குகிறாள் சித்திரா.

'வேண்டும்; இப்போதே வேண்டும்;' என்பது போல நயனத்தால் மொழி பகர்ந்து, நாணத்தால் தலை குனித்தவளை மன்மத பாணத்தால் முடிவு கூற மார்புறத் தழுவுகிறான். அவள் தடுக்கவில்லை; தடுக்கவும் விரும்பவில்லை. இட்ட கோலம் எழில் விளக்கு ஏற்றத்தானே? காதல் சுட்டு விடுமா? அது சுடாத நெருப்பாயிற்றே!

முதல் தடவையாக மோகராகத்தின் சுருதி சேருகிறது; ஆலாபனை முடிகிறது; பாடல் எழுகிறது; கரங்கள் பூவாய் மணந்து உதிர்கின்றன.



நேரம் நிலவில் ஈரமாய்க் கரைகிறது. மேலாடை அழுக்கேற மேடையில் இளைப்பாறிய இருவரும் எழுந்து கொண்டனர்.

என்ன வந்துவிட்டது இந்த ராசேந்திரனுக்கு? எதற்காகக் கண்கள் நனையச் சித்திராவை நோக்கவேண்டும்?

அவளுக்குப் புரியவில்லை.

''கலங்க வேண்டியவள் நான்! இளவரசே! உங்கள் கண்ணில் சோகங்கள் ஏன் தெரிவானேன்?''

எத்துணை பொருத்தமாகச் சொல்லிவிட்டாள் இவள்! விதி இவள் நாவில் அமர்ந்து பேசுகிறதோ?

இடுப்பில் செருகி வைத்திருந்த ஓலைச் சுருளை எடுத்து நீட்டினான் ராசேந்திரன். ''சித்திரா! இதை வீட்டுக்குக் கொண்டு போய் நமது காதல் போல எரிந்து கொண்டிருக்கும் அகல் விளக்கில் படி; அந்த விளக்கிலேயே எரித்து விடவும் மறந்து விடாதே!''

இன்னும் அவளுக்குப் புரியவில்லை.

புரியும்படி அவன் சொல்லவில்லையே. அவள் விடை பெற்றாள்.

வீட்டுக்கு வந்தாள்; விளக்கொளியில் படித்தாள். அதிலிருந்த வரிகள்.

''நான் மாவீர ராசேந்திர மகாசக்கரவர்த்தியின் பேரன் தான். ஆனால் காதலைப் பொறுத்த வரையில் நேர்மை. என்னைத் தொடர விரும்பினால் தொடர்ந்து வா. கட்டாயமில்லை; கட்டாயப்படுத்தவும் நான் விரும்பவில்லை.''

அவளுக்குப் புரியவே இல்லை. எங்கே தொடருவது? எப்போது தொடருவது? எதற்குத் தொடருவது?

மறுநாள் —

அலைகளை வான் விளிம்பை முத்தமிடுகிறபோது -

அவலமான செய்தியொன்று பரவியது. அது ;

'இளவரசர் ராசேந்திரன் சோழகங்கம் ஏரியில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டார்!'

புரிந்து விட்ட நிலையில் புழுவாய்த் துடித்தாள்; புனலாய் அழுதாள்: பூவாய்க் கருகினாள் சித்திரா.

பதினோராம் நூற்றாண்டின் இடைப் பகுதி -

கங்கை கொண்ட சோழ மகா சக்கரவர்த்தி ராசேந்தி சோழர் இறந்து பட்டதும், கம்பிலிப் போருக்கடுத்து பூண்டூர் யுத்தம் மூண்டது. சாளுக்கியர் அழிந்து பட்டனர்

கிருஷ்ணையாற்றின் இடக்கரையில் ரத்தம் கரை புரண் டது. சனகமணி மாளிகைகள் துகளாகிக் கழுதைக மேயலாயின. நகரமே தீயில் குளித்தது; அரண்மனை பெண்டிர் முதல் அனைவரையும் சிறைப்பிடித்து வெற்றி தூண் நிறுவித் திரும்பின சோழப் படைகள். சிறைப்படா தப்பியவள் பூண்டூர் நகரின் புகழ் மிக்க ஓவியக் கலைஞ ஜயமல்லன் புதல்வி சித்திரா. அவள்தான் அந்த யுத் காலத்தில் இளவரசன் ராசேந்திரனுடைய இதயச் சிறை பட்டு விட்டாளே!

கங்கை கொண்ட சோழபுரத்தின் தென் பகுதியில் ஒ சின்னஞ் சிறு கிராமம். அங்கே குடி வைக்கப்பட்டா சித்திரா. புரவி சகிதமாக ஒரு போர் வீரனைப் போ ராசேந்திரன் வருவான் - காதல் தருவான் - நேரமானது விரைவான்.

சோழ மன்னர் ராசாதி ராசர் காதுகளில் தொட்டு தொடாமலும் சில செய்திகள் விழுந்தன. யார் எவ என்று அறியத் தொடங்குகிறபோது சோழகங்க ஏரிக் அணித்தேயுள்ள ஒரு சிற்றூருக்குக் குடிமாற்றப்பட்டா சித்திரா!



அரண்மனையில் திருமண ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெறலாயின. அப்போதுதான் மகனுக்கும் தந்தைக் கும் மாளாத சச்சரவுகள் மூண்டு வெடித்தன. அதன் பயன்?

இதோ, கையில் ஓலையுடன் கலங்கிக் காணப்படுகிறார் சோழ மன்னர் ராசாதி ராசர்.

மகன் எழுதிவைத்துச் சென்ற மரண ஓலை -

'காதலைவிட உலகம் மிகவும் சிறியது! மணிமுடி துறக்க லாம் - அது தியாகமாகத் தெரியவில்லை; காதல் சுயநல மாகிப் போகும். மரணத்தை வரவேற்பது ஒரு பாடமாக அமையலாம் அல்லவா? மன்னியுங்கள். - ராசேந்திரன்.'

கசக்கிய கண்களும் கருகிய நெஞ்சமுமாக எத்தனை முறைதான் இந்த ஓலை நறுக்கைப் படிப்பாரோ ராசாதி ராச சோழ மன்னர்!

ஓ...மரபுக்கு ஒரு வழித் தோன்றல் மாண்டு விட்டதே!

யார் அந்தக் காதலி?

கண்களை அக்கினி முத்தமிட ஆணைகள் பிறந்தன. ஆயினும் கண்டுபிடிக்க முடியவில்லை. பூண்டூர் நகரின் புகழ் மிக்க ஓவியனின் மகள்—அவளும் ஓர் ஓவியர் என்பது தெரியவந்தது. கலந்தாலோசித்ததில் ஒரு முடிவும் பிறந்தது.

பொழுது பலபலவென்று புன்னகையாய் விடிந்து கொண்டிருந்தது. ஓவியத்தை வரைந்து முடித்த அலுப்பு சித்திராவுக்கு. மனத்திரையில் பதிந்த காதலனை அப்படியே மரத் திரையில் தீட்டி விட்டாள்.

அப்போது—

வீதியில் பறையறிவிக்கப்படும் ஓசை கேட்டுச் சாள ரத்து வழியாக எட்டிப் பார்த்தாள். அறிவிப்பு செவிகளில் நுழைந்தது.

'இறந்து விட்ட இளவரசர் ராசேந்திர சோழரைப் போல் ஓவியம் தீட்டி, வருகிற சித்திரைத் திருநாளன்று தருகிறவர்களுக்கு ஆயிரம் பொற் காசுகள் அடங்கிய பொற் கிழி தரப்படும் என்பது சோழ மாமன்னரின் ஆணை'—

செய்தி கேட்டுச் சிணுங்கினாள்—பின்னர் சிரித்தாள்—சித்திரா.

ஓவியத்தை நெடு நேரமாக வைத்த விழி வாங்காமல் கூர்ந்தும் நோக்கினாள். தொடரு முன் அவள் ஆற்றிய ராசப் பணியாக இருக்கட்டுமே என்றுதான் வரைந்தாள். அதற்கு இப்படி ஓர் ஆணை பிறக்கும் என்று அவள் எதிர் பார்த்தாளில்லை!

சித்திரைத் திங்கள் மலர்ந்த செல்வத் திருநாள்.

சோழர் திருவோலக்கமான அத்தாணி மண்டபம் நிறைந்து காணப்பட்டது. புத்தம் புதிய சிம்மாசனத்தில் இரண்டாம் வாரிசாக அமர்ந்து காணப்பட்டார் சோழ மன்னர் ராசாதி ராசர். பக்கத்தில் பட்டத்தரசி திரைலோக்கியமுடைய பிராட்டியார் பதவிசாக அமர்ந்திருந்தார்.

சோழநாட்டு ஓவியர்களில் மிகச் சிலரே சித்திரங்களைக் கொண்டுவந்திருந்தனர். அவ்வப்போது இளவரசனைக் கண்டு தெளிந்தவர்களும் எப்போதோ கண்ட நினைவில் வரைந்தவர்களும் தத்தம் சித்திரங்களைத் திறந்து காட்டிய வண்ணமிருந்தனர். ஒன்றுகூட உயிர்த் துடிப்பு நிறைந்ததாகவும் உருவ அமைப்புக் கொண்டதாகவும் இல்லை. கடைசியாக ஓர் ஒல்லியான உருவம் வந்து நின்று தான் கொண்டு வந்த ஓவியத்தைத் திறந்து காட்டியது.

அந்த உருவத்தை—ஏறத் தாழ இருபத்தைந்து ஆண்டுகள் நிரம்பிய மங்கையை—கண்டதும் மருண்டுவிட்டார் மன்னர் ராசாதி ராசர். 'இவளையா என் மகன் காதலித்தான்?'



''பெண்ணே, உன் பெயர்?'' சோழமன்னர் கேட்டார்

''கமலம்'' உருவத்தின் மறுமொழி

''நீதான் இந்த ஓவியத்தை வரைந்தாயா?''

''ஆமாம்.''

''உனக்கென்ன வெகுமதி தெரியுமா?''

''தெரியும்; பொற் கிழி.''

''இல்லை; மரண தண்டனை.''

அதிர்ந்து போனாள் கமலம். திருதிருவென்று சுற்று முற்றும் கவனித்தாள். தொலைவில் சித்திரா வேடிக்கை பார்ப்பவர்களுடன் நின்று கொண்டிருந்தாள்.

''ஏன் பெண்ணே விழிக்கிறாய்?''

''எனக்கேன் மரண தண்டனை?''

''நீ பொய் சொன்னதற்காக!''

''சோழ மன்னா! நான் உண்மையைச் சொல்லுகிறேன். என் வீட்டுக்கு எதிரில் குடியிருக்கும் சித்திராம்மா வரைந்த ஓவியம் இது. நான் அந்த அம்மாளுக்கு உதவி புரிவது வழக்கம். அந்த நன்றிக்காக என் வறுமையைப் போக்க இந்தச் சித்திரத்தைக் கொடுத்தனுப்பினார்கள்.''

பயத்தின் உலுக்கலால் உண்மை வெளிப்பட்டு விட்டது.

சோழ மன்னர் குரலொலித்தது.

''யார் அந்தப் பெண்?''

அப்போது—

சற்றும் தயங்காமல் மறு குரலொலித்தது.

''நான் தான்!''

கூட்டத்திலிருந்து சித்திரா நிமிர்ந்த நெஞ்சுடன் முன்னேறி நடந்து வந்தாள்.

லைக்கமண்டபமே ஒருக்கணித்து நோக்கியது. நெடு நேரமாகவே வைத்த விழிகளை எடுக்காமல் மன்னரும் பட்டத்தரசியும் கவனித்தனர். ஆகா! என்ன அழகு. கொள்ளையழகு! சதிப் புனல் பொய்கையிலே ரகசியமாய்க் குளித்து, அழகு ஒளிக் கலம் பரப்பி வந்த நித்திலச் சிலை போலக் காணப்படுகிறாளே!

"நான்தான்!" மீண்டும் குரல் விடுத்தாள் சித்திரா. "சோழ நாட்டில் பொய் பேசினாலே மரண தண்டனை தானே!"

நம் நிலையடைந்த தார்வேந்தர் ராசாதிராசர். "சில சமயங்களில்! அது போகட்டும். உன் பெயர்?"—என்று கேட்டார்.

"சித்திரா!"

"ஊர்?"

"அவசியமில்லை."

"பெயரும் பேச்சும் உன்னை ஒரு சாளுக்கிய நாட்டவள் என்பதைக் காட்டிக் கொடுக்கின்றனவே!"

"தமிழகத்திலும் தமிழைச் சரியாகப் பேசத் தெரியாதவர்கள் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது மன்னர் அவர்களே! ராசாதிராசர் தமிழ்ப் பெயரல்லவே?"

"நன்றாகப் பேசுகிறாய்!"

"என் ஓவியம் நன்றாக இருந்தால் பொற்கிழி தாருங்கள்."

"தத்ரூபமாக இருக்கிறது. நீ வரைந்ததுதானே?"

"நானே வரைந்ததுதான்!"

"ஓகோ! உனக்கு இளவரசன் ராசேந்திரனைத் தெரியுமா?"

"தெரியாது."

"பார்த்திருக்கிறாயா?"



"இல்லை."

அவை வியந்து முனகியது.

"ஆச்சரியம்!"

"ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?" அவள் புரிந்து முழக்கினாள்.

"இந்த உருவத்தை உன்னால் எப்படி வரைய முடிந்தது?"

"என் காதலரை நான் வரைந்தேன். இந்தக் கமலம், 'இளவரசர் போலவே இது இருக்கிறது. கொடுத்தால் பொற்கிழி கிடைக்கும்,' என்றாள். 'தந்தால் பெற்றுக் கொள்' என்று கொடுத்து அனுப்பினாள்."

"நீயும் பொய் சொல்கிறாய்?"

"ஆனால் மரண தண்டனை கொடுக்க முடியாது!"

"முடியும்!"

"அது எப்படி?"

"நீ இளவரசனைக் காதலித்த குற்றத்துக்காக!"

"இளவரசரைக் காதலித்தேனா? யார் அந்த இளவரசர்? எனக்குத் தெரிந்த ஒரே அரசன்—அந்த ஓவிய அரசன்—என் காதல் அரசன்!"

"இவன்தான் இந்த நாட்டின் இளவரசன்!"

"இப்போது நீங்களே பொய் சொல்லுகிறீர்கள்! இந்த ஓவியத்தில் இருப்பவர்தான் இளவரசர் என்பதற்கு என்ன ஆதாரம்? கொண்டுவாருங்கள் அந்த இளவரசரை!"

"அவன்தான் உன்னால் தற்கொலை செய்து கொண்டானே!"

"ஓ...சோழகங்கம் ஏரியில் விழுந்து மாண்ட இளவரசரைச் சொல்கிறீர்களா? இந்த ஓவியத்தில் இருப்பவர் இளவரசரல்ல; இதயமிக்க மனிதர்."

# கவி ராட்சசன்

பொல்லென விடிந்த பொழுதைக் கண்டு கொல்லெனக் குரல் கொடுத்துச் சிறகடித்தன புள்ளினங்கள்.

வைகறையின் ஞானக்கண்ணன் புலரி கீதம் பாடிப் புறப் பட்டான். விண் விழிக்கக் கண்டு மண் விழித்து மகிழ்ந்தது.

மாசறு பொன்னி நதியாள் வலம்புரிச் சுழிப்புடன் காசறு விரைகளையும் கனிகளையும் தேனையும் வழி நெடுக அள்ளியவண்ணம் தமிழ்நடை பயின்று வளைய வந்து கொண்டிருந்தாள்.

கங்கை கொண்ட சோழ புரத்துக் கொலு மண்டபம் அன்று கலகலப்புடன் காணப்பட்டது. புதிய கவிஞன் ஒருவன் புதுமைக் காவியம் ஒன்றினை அரங்கேற்றப் போகிறு னும். பொழுதை உணவாக்கி, இரவை உறக்கமாக்கி, மன்னர் தரும் விருதைத் தமதாக்கி, பொருளை வீணுக்கும் ஒருசில புலவர்களுக்கு அன்று உண்மையில் எதும்பில் காய்ச்சல் கண்டிருந்தது. தாம் செய்ய மறந்த அல்லது முடியாத பணியை எங்கிருந்தோ வந்த எவனே ஒருவன் செய்யப் போகிறுனுமே!

அனுமதிக்கக் கூடாது என்று எவ்வளவு ஆற்றிப் பார்த்தும் மன்னர் குலோத்துங்கர் மனத்தைக் கவர்ந்து விட்டானே அந்த இளைஞன். புலவர் பெருந்தகை ஒட்டக்



கூத்தருக்கு இது இரண்டாம் முறையாகப் போடப்பட்ட இரட்டைத் தாழ்ப்பாள்! எல்லாம் பட்டத்தரசி தியாகவல்லி தேவியாரால் வந்த வினை! அனுமதித்தவள் அவள்தானே!

வெட்டுதற்கோர் ஒட்டக் கூத்தனில்லை என்ற மாப் புகழ் பெற்ற ஒட்டக்கூத்தர் அலங்காரம் முடித்து அரச சபைக்குப் புறப்பட ஆயத்தமானுர்.

"நானும் ஓலக்கமண்டபம் வந்து அந்த அரங்கேற்றக் காட்சியைக் காணலாமா?"

அதுவரை அமைதியாக நின்று கவிஞர் பெருமானின், அலங்காரத்தைக் கவனித்துக் கொண்டிருந்த அலங்காரவல்லி மெல்லக் குரல் கொடுத்தாள். அந்தக் குரலில் சகோடயாழின் மேல் நிலை நரம்பு தெறித்தது.

உருட்டி மருட்டும் கண்களை, ஒருநிலைப் படுத்தி அலங்கார வல்லியைக் கவனித்தார் ஒட்டக்கூத்தர். "நீயும் வருகிருயா அலங்காரவல்லி? தனியாகவா, அல்லது என்னுடனு?"

"ஏன்? தங்களுடன் வரத் தகுதியில்லையா எனக்கு?"

கூர்ந்து மட்டுமா கவனித்தார் கூத்தர்? அந்தக் கூடமே அதிரும்படியாகவும் கலகலவென்று பெருநகை புரிந்தார்.

"ஏனிந்த ஏளனச் சிரிப்பு?"

"அலங்காரவல்லி! உன்னுடன் இருப்பவன் இன்பத்துக்கு அடிமையான ஒட்டக்கூத்தன். அவை நோக்கிச் செல்பவனே, கவிஞர்களை அடிமையாக்கும் கவிராட்ஸன் ஒட்டக்கூத்தன்!"

அவள் சுநாதமாய்ச் சிரிப்பை உதிர்த்தாள்.

"உன் நகைப்புக்குக் காரணம்?"

"உங்கள் காவியத் திறனுக்கு அடிமையான சாதாரண அலங்காரவல்லியை நீங்கள் இங்கு பார்க்கிறீர்கள். ஆனல் அலங்காரவல்லியை நீங்கள் இங்கு பார்க்கிறீர்கள். ஆனல் உங்களுடன் வரவிருக்கும் அலங்காரவல்லியோ, அழகு ராட்சஸி! அவள் அழகுக்காகத் தவமிருக்கும் அரசர்கள் அனந்தம்! சொன்னவர் வாயினிக்கும்! கேட்டவர் செவி

வியக்கும்! கண்டவர் கண் மயங்கும்! படித்து வருவது புலமையாகலாம்; ஆனால் இயற்கையாக அமைவது அழகு! இப்போது சொல்லுங்கள்; உங்களுடன் வரத் தகுதியுடையவள் தானே?"

"ராட்சஸி அழகாக இருப்பதில்லையே?"

"ராட்சசன் மாகவியாக மாற முடியும் என்றால், பேரழகும் ஒரு 'ராட்ஸம்' நிறைந்தது தான்!"

எப்படி வென்று விட்டாள் இந்த எழிலரசி! கூத்தரின் கூர்த்த மதியே கூனிக் குறுகிவிட்டது. அவர் மலைத்துச் சிலை போல் நின்றார்.

"பெருமானே! அடியாளைப் பொறுத்தருளுங்கள். என்னுடலில் கவி ராட்சஸரின் குருதியோடுகிறது. அதனால் தான் விளையாட்டாகத் தங்களிடம் காவிய வாதம் புரிந்து விட்டேன். நான் ஏன் உங்களுடன் வரப் போகிறேன்? போய் வாருங்கள்!"

அலங்காரவல்லி அமுதமாய்ச் சிரித்தாள். அந்த அமுதக் களிப்பில் கூத்தரும் தம்மை மறந்து காவியநகை புரிந்தார்.

பொதுவாகச் சொல்லப் போனால் இருவருமே பொன்னுக்குச் சிரிப்பவர்கள் தாமே!

திருவோலக்கம் இரண்டு காணப்பட்டது. பொன்னும் மணியாலும் அலங்கரிக்கப் பெற்ற அரசு கட்டிலில், மாமன்னர் குலோத்துங்க சோழர், வீறார்ந்த கோலத்துடன் வீற்றிருந்தார். எதிரே புலமை சான்ற புலவர் குழு புடைசூழ அமர்ந்திருந்தது. நடுநாயகமாக அறிவின் செருக்கார்ந்த கோலத்துடன், தமிழ் நிறைந்த செம்மாப்பு திமிருடன் அமர்ந்திருந்தார் கவிராட்சஸர் ஒட்டக்கூத்தர். அது கம்பர் அவையிலில்லாத காலம். அவர்தான் வருத்தம் தெளிய வட திசை நோக்கிச் சென்று விட்டாரே! கூத்தர் இட்டதுதான் அப்போது ஆர்த்த புகழ் கொண்ட அருந்தமிழுக்குச்சட்டம்!



மங்கலக் கருவிகள் மகிழ்ச்சிக் குரல் எழுப்ப, அரங்கேற்றத்துக்கு வந்திருந்த புலவனை அழைத்து வந்தனர். வாழ்வுக்கு எலும்பைத் தந்து, வான்புகழ் தமிழுக்கு உயிரைத் தந்து கொண்டிருந்த அந்த ஏழைப் புலவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. முறைப்படி அவனைப்பற்றிய அறிமுகம் நடந்தது. புலவனின் வணக்கத்தை ஓலக்கம் ஏற்றது.

"தொண்டை மண்டலத்துத் தமிழ்வண்ணரே! உங்கள் இனம்?"

ஒட்டக்கூத்தரின் இந்தக் கேள்வி, குலோத்துங்க சோழ மாமன்னருக்கு என்னவோ போலிருந்தது. செங்குந்தர் வகுப்பைச் சார்ந்த ஒட்டக்கூத்தருக்குத்தான் எத்தனை சாதி வெறி...?

புலவன் புகன்றான், "தொழுத வேளாளன்!"

"எழுதிய நூலின் தலைப்பு?"

முரசு முழங்கியது. புலவன் தமிழ்வண்ணன் சொன்னான்: "அமைதிக்காவியம்!"

கவிராட்சசர் ஒட்டக்கூத்தரின் கண்கள் நெற்றி மேட்டுக்கு ஏறுவானேன்? இயற்கையாகவே சினமும், பெருமையும் கொண்ட ஒட்டக் கூத்தர், இந்த அரங்கேற்றத்தில் தம்முடைய பரந்த மனப்பான்மையைப் பல்லோர் வியக்கக் காட்ட வேண்டும் என்று தான் நேற்று வரை எண்ணிவந்தார். ஏனென்றால், 'எப்பேர்ப்பட்ட காவியங்களையெல்லாம் ஏற்க மறுத்த கவி ராட்சசர், போயும் போயும் இந்த இளைய...எளிய...வறிய கவிஞனுடைய காவியத்தைத்தானா ஏற்கப் போகிறார்?' என்று பலரும் பேசத் தொடங்கியதை அவர் கேள்விப்பட்டார். 'இந்த எண்ணத்தை, மாற்றிப் புதிய ஒட்டக்கூத்தனைக் காட்ட வேண்டும்!' என்று அவருடைய புலமை நெஞ்சம் முனைந்துகொண்டது.

ஆனால் அந்த எண்ணம் செயல்படத் தொடங்கியவிதம்...

புறப்படும் போதே அவரை வெகுவாக அலங்காரவல்லி சோதித்து விட்டாள் என்பது ஒருபுறமிருக்க, அவருடைய புலமையில் குத்திய முள்ளின் கூர்மைக்கான வேற்றுக்காரணமும் இருக்கத்தான் செய்தது. முன்னால் குத்தப்பெற்ற அந்தப் புலமை நெஞ்சம் ஒரு முறை 'அமைதிக் காவியம்' என்று முனகிக் கொண்டது.

அரங்கேற்றம் ஆரம்பமானது.

வறுமையையே அதுவரை பரிசாகப் பெற்று வந்த வண்டமிழ்ப் புலவன் தமிழ் வண்ணன், வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வாய் திறந்தான். அந்த எலும்புக் கூட்டுக்குள்ளேயும் எத்துணை இனிமை வாய்ந்த சாரீரம் குடி கொண்டிருக்கிறது! ஆகா...!

குரலைக் கேட்டு வியந்தவர் காவியத்தின் குரலைக்கேட்டு மேலும் வியந்தனர். என்னே வியப்பு! என்னே துணிவு!

எல்லாரையும் போல அவன் இறைவணக்கம்பாடவில்லை. எல்லாரையும் போல் அவையடக்கமும் கூறவில்லை. அவையடக்கமின்றிப் பாடும் தகுதி ஒட்டக்கூத்தரன்றி வேறு யாருக்கும் இல்லையே! இவன் யார் அப்படிப் பாட? இவன் இறை வணக்கத்தையே நீக்கிவிட்டானே...!

தேனிலே தோய்த்தெடுத்த பலாச்சுளை போலக் காவியம் அமைவு பெற்றிருந்தது. சந்தமும், நயமும் சிந்தையை மயக்கின; பாப்புனைவிலும், யாப்பமைதியிலும் புதிய கோணங்கள்! எல்லாவற்றுக்கும் மேலாகக் காவியத்தின் மையக் கருத்து புதுமை நிரம்பியது; புரட்சி நிரம்பியது! இந்தக் கருத்துத்தானே கவிகேசரி ஒட்டக்கூத்தர் பெருமானுக்கு முள்ளாக அமைந்துவிட்டது!

அப்படியென்ன புதுமையும் புரட்சியும் கலந்த கருத்து என்கிறீர்களா? அக்கால நோக்குப்படி அது மாபெரும்



புரட்சிக் கருத்துத்தான். போர் என்பதைப் பெரும் நாகரிகமாகக் கருதிய காலத்தைச் சாடி, அதுவே அநாகரிகத்தின் தலைவாசல் என்று பாடத் தொடங்கினான் தமிழ்வண்ணன்; உலகுக்கு அமைதி தேவை; ஒற்றுமை தேவை; ஒரே நிறை தேவை என்று அழுத்தம் திருத்தமாகப்பாடினான். பரந்து கிடக்கும் ஏக உலக ஆட்சிதான் மனிதர்களை எலும்புக்கூடாக்காத வாழ்வுக்கு அழைத்துச் செல்லும்! எண்ணற்ற மதங்கள்; எத்தனையோ கொடி போட்ட ஆட்சி, தேவையற்ற நாடு பிடிக்கும் வெறி, மொழிப் போராட்டம் இவையாவும் நீங்குமானால்...

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற நிலை தலை தூக்கும். அப்போது ஏற்றத்தாழ்வான நிலை ஒழிந்து அமைதி நிலவும்!

எத்துணை துணிவாகப் பாடுகின்றான் இந்த இளங் கவிஞன்!

வருங்கால மனித இனத்துக்கு வாழ்த்துத் தெரிவிப்பதுடன் காவியம் முற்றுப்பெற்றது. பின்னர் விவாதம் தொடங்க வேண்டும்.

கவிராட்சஸர் ஒட்டக் கூத்தரின் நெஞ்சு கனன்று கொண்டிருந்தது. கம்பராலும், புகழேந்தியாலும் கனன்றது போதாதென்று இந்தச் சிறு புலவனாலும் சுடுபடவேண்டுமா? மனம் என்னவோ அந்த இளங்கவிஞனுடைய அந்தத் திறம் வாய்ந்த கற்பனையைப் பாராட்டத்தான் செய்தது. நலம் செய்து சொற்களைப் பெற்று அவற்றைக் கழைக்கூத்தாடச் செய்த தமிழ்வண்ணனைக் கண்டு அஞ்சவும் செய்தார்; ஆயினும் மறுத்துவிட வேண்டும் என்கிற மாபாவமான எண்ணம் உதயமாவானேன்?

சூழ்ந்திருந்த புலவர்கள் தத்தம் கருத்தினை வழங்கினர், பெரும்பான்மையானவர்கள் நெஞ்சுக்குத் திரை போட்டுத்தான் மாறுபட்ட கருத்தினை வழங்கினர். ஒட்டக்கூத்தரே

இப்படி வழங்கப் போகிறீர் என்றால், இவர்களைச் சொல்லிக் குற்றமில்லை.

வறிய புலவனுடைய தலையெழுத்தை ஒட்டக்கூத்தர் கணித்து விட்டால், அதுவே முடிவானது.

“அமைதியைப் பற்றிப் பேசும் இந்தக் காவியத்தில், காவிய அமைதியைக் காணோம்!”

இளம் புலவன் தமிழ்வண்ணன் மருண்டான். “எடுத்துரைக்கலாம் கவிராட்சஸப் பெருமானே!”

“இறைவணக்கம் எங்கே?”

“காவியத்துக்குப் பொதுவாகத் தேவைப்படும் ஓர் அணி இறைவணக்கம். என் காவியத்துக்கு அது தேவையில்லை என்பதை உணர்ந்து நீக்கினேன்!”

“காரணம்!”

“மனிதர்களை ஒரே நிறைவாக நோக்கியவன் நான்! உலகம் என் காப்பியம். எந்தத் தெய்வத்துக்கு வணக்கம் கூறுவேன்?”

“ஓகோ...! அவையடக்கம்...?”

“அவையை ஏமாற்றப் புலவன் எழுதும் அந்த நான்கு வரிகளில் எனக்கே நம்பிக்கையில்லை. ஏனென்றால், என் புலமையில் எனக்கு நிறைவான நம்பிக்கையுண்டு. அத்துடன் நான் உலகிற்கே ஒரு பொது அவையைக் கேட்டு இருக்கிறேன். அப்படித் தோன்றுங்காலை வேண்டுமானால் அடக்கம் ஆயிரம் பெறுவதாக அமையும்! எனவேதான் காவியத்தின் இறுதியில் வருங்கால உலக மக்களுக்கே வாழ்த்தைத் தெரிவித்திருக்கிறேன்.”

அரிமா போல கர்ஜனை எழுப்பினார் ஒட்டக்கூத்தர். அந்தக் கர்ஜனையில் சீற்றம் புயலாக எதிரொலித்தது- “தமிழ்வண்ணரே! செருக்கைக் காட்டுகிறீர்களா?”



“இல்லை. செம்மையைச் சொல்லுகிறேன்!”

“இந்த முடிவுடன் எந்தக் காவியமும் அரங்கேறுது என்பதனை மறந்தீர்களோ?”

“நான் வயிற்றுக்கு வேண்டுமென்றிருந்தால் யாசித்து இருப்பேன். புலமைக்கு ஆசி கேட்கிறேன். உண்மையும் உறுதியும் நாகரிகம் பெறவில்லையென்றால், அக்காவியம் என் பிணத்தை எரிக்கப் பயன்படட்டும் என்ற உறுதி, இந்த வறிய உயிர்க் கூட்டில் இமயம் போல் இருக்கிறது.”

“காவியத்துக்குப் பாயிரம்?”

“கவி ராட்சஸர் ஒட்டக்கூத்தரையன்றி வேறு எவர்க்கும் பாயிரம் தரும் தகுதியில்லை என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் உங்கள் முன் கொண்டு வந்திருக்கிறேன்!”

“மன்னர்களையும், போர் நெறி நாகரிகத்தையும் இழிவு படுத்தி, நிகழ முடியாத வெறும் கற்பனைக்கு நான் பாயிரம் வழங்குவதா? கருக்குற்றம் அமைந்த இக்காவியத்தை நான் மறுக்கிறேன்!”

சுழன்று வரும் முகிற்கூட்டத்திடையே எழும் இடியோசைபோல எழுந்தது ஒட்டக்கூத்தரின் ஓங்காரக் குரல்!

அவையில் பல கணங்கள் அமைதி.

இளம் புலவன் தமிழ் வண்ணன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. உலகு உலகு என்று ஒரே வரியுடன் தமிழ்க் காவியங்களை தொடங்கப் பெற்றதுடன் நாகரிகம் நின்றுவிட்டதா? உலகையே திரட்டி எழுதுவதன் பயன்?

மறுப்பு, மறுப்பு, மறுப்பு!

புலவன் எழுந்தான்; அப்போது -

''நான் இந்தக் காவியத்தை ஆதரிக்கின்றேன்!'' - கணீரென்று [illegible] ஒலித்தது ஒரு குரல். அனைவரும் அருண்டு மருண்டு அண்ணாந்து நோக்கினர். அரசாணி மாடத்தில் அமர்ந்திருந்த சோழமாதேவி தியாகவல்லி தேவியார் தான் ஆதரவுக் குரல் எழுப்பினர்:

''கூத்தர் பெருமானே! கருவில் என்ன குற்றம் கண்டீர்கள்? இதுவரை எழுதியவர்கள் என்ன கண்டார்கள்? அரசர்களைப் புகழ்ந்து பாடி நிரப்பினார்கள்; தெய்வங்களின் வாழ்க்கைச் சரிதங்களை எழுதினார்கள். உலகிற்காக ஏதோ சொல்ல வந்த இரண்டாம் தமிழனை நிராகரிக்கிறீர்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடிய கணியன் பூங்குன்றனாருக்குப் பிறகு தமிழ்த் தாய் இரண்டாம் முறையாக ஒரு நல்ல மகனை ஈன்றிருக்கிறாள். ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

''முடியாது சோழமாதேவி; அது என்னால் முடியாது.'' எரியும் தீயில் நெய் வார்த்ததுபோல் இருந்தது கவிராட்சஸரின் மறுமொழி.

''இதோ நான் ஏற்றுக்கொண்டேன், மன்னரும் ஏற்றுக் கொண்டால், பின் மறுப்புக்கே இடமில்லை என்பதையாவது ஏற்றுக் கொள்வீரா?''

''ஏற்க முடியாது சோழமாதேவி!''

குலோத்துங்க சோழ மாமன்னர் குரல் கொடுத்தார்.

சோழமாதேவி கவலை நிறைந்த நோக்குடன் மன்னர் பெருமானை நோக்கினாள். மாமன்னர் குலோத்துங்க சோழர், கவிராட்சஸர் ஒட்டக்கூத்தரைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. அரியணையை விட்டெழுந்து சென்றுவிட்டார். அவையும் கலைந்தது.



அழுத கண்ணீரும், புலம்பிய நெஞ்சமுமாக வெளியே வந்த இளங்கவிஞன் தமிழ் வண்ணன், அரண்மனை வாயிலில் அந்த அமைதிக் காவியத்தை மனம் நொந்து தீக்கிரையாக்கினான். அதனைக் கண்ணுற்றவண்ணம் முத்துப் பல்லக்கில் சென்று கொண்டிருந்த ஒட்டக்கூத்தரின் மனமும் எரியத்தான் செய்தது! அந்த மனத்துக்கு இப்போது பேராறுதல் தேவை. அதற்கான அருமருந்து அலங்காரவல்லியின் திருமாளிகையில் கிடைக்கும் என்பதை உணர்ந்து பல்லக்கை முந்நூற்றுவர் சாலை நோக்கிச் செல்லப் பணித்தார்.

பாதிக்கு மேல் கரைந்துவிட்ட பகற்போது.

கூத்தர் பெருமான், நேரம் கடந்துவிட்ட காரணத்தால் நேரே தம்முடைய மாளிகை நோக்கிச் சென்றிருப்பார் என்றெண்ணி உண்டு முடித்து, ஓய்வு கொள்ள மஞ்சத்தை நாடி நடந்தாள் முகிலனைய கூந்தலும், முழுமதி வெட்கும் முகமும், மைத்தடங்கண்ணும் உடையவளான அலங்கார வல்லி. அப்போது வெளிவாயிலில் அரவம் கேட்டுச் சாளரத்து வழியாக எட்டிப் பார்த்தாள். கவிராட்சஸர் ஒட்டக்கூத்தர், சாம்பிய முகத்துடன் சோர்விய நடை பயின்று மாளிகையில் நுழைந்துகொண்டிருந்தார்.

அன்பாக வரவேற்று ஆறுதலாக அமரச் செய்தாள் அலங்கார வல்லி.

''பெருமானே! காவியம் அரங்கேற்றம் கண்டதா?''

''..............''

''ஏன் பேசாமலிருக்கிறீர்கள்?''

''என் மனத்தில் தீப்பிடித்துவிட்டது அலங்காரவல்லி!''

''ஏன்? அரங்கேற்றத்தில் ஏதேனும் குழப்பம் விளைந்ததா?''

"குழப்பத்தை விளைவித்தவனே நான்தான்!"

"சற்று விரிவாகத்தான் சொல்லுங்களேன்!"

"உண்மையைச் சொன்னால்தான் இப்போதைக்கு என் மனத்தீ அடங்கும் என்று நினைக்கிறேன். அலங்காரவல்லி! நல்ல ஒரு காவியத்தை அரங்கேற விடாமல் தடுத்துவிட்டேன். அதனால் அந்தக் காவியமே தீக்கிரையாகித் தமிழுக்கே நட்டமாய்விட்டது."

"இந்த இடத்திலாவது நல்ல பெயரை வாங்கியிருக்கலாமே!"

"என்ன செய்ய; நானும் அப்படித்தான் நினைத்தேன்? ஆனால் அவன் பாடிய மையக் கருத்து நான் பல நாட்களாக பாட வேண்டும் என்று சிந்தித்து வைத்திருந்த கருத்தாய்ப் போய்விட்டது. சொந்த சிந்தையுடன் ஒரு காவியத்தைப் பாடுவதன் மூலம் கம்பனை நிகர்த்துவிடலாம் என்று கனவு கண்டு வந்தேன். என் கனவும், கருத்தும் எப்படித்தான் அந்த ஏழைப் புலவன் நெஞ்சில் உதயம் கண்டதோ? ஆனாலும் அதியற்புதமாகப் பாடி வைத்திருந்தான். நான்கூட அப்படிப்பாட முடியுமா என்பது ஐயத்துக்குரியதுதான்."

"பின் ஏன் அரங்கேற்ற மறுத்தீர்கள்?"

"நான் பாடவேண்டும் என்று நினைத்த ஒன்றல்லவா?"

"பெரும் பிழை புரிந்துவிட்டீர்கள் பெருமானே! ஏதோ இருவர் கற்பனையும் ஒரே நேரத்தில் உதயம் கண்டுவிட்டது. ஆனால் அவன் முதலில் பாடிவிட்டான். நீங்களே விலக்கப் பாடிய அந்தக் காவியத்தை ஏற்று நீங்கள் நினைத்த நினைவையும், அது இப்போது நிறைவாக வேற்றுப் புலவனிடம் வந்ததால் ஆதரித்துவிட்ட பெருந்தன்மையையும் டயரியாக எழுதிக் கொடுத்திருந்தால், உலகம்



உங்களைப் போற்றிப் புகழ்ந்திருக்கும்! இதனைத் தவற விட்டு விட்டீர்கள்!"

அலங்காரவல்லியின் விளக்கம் ஒட்டக்கூத்தரை அசையாப் பதுமையாக்கிவிட்டது. அவள் கூறியது முற்றிலும் உண்மை. இனி என்ன செய்ய முடியும்?

தீயில் வெந்த அந்தக் காவியம் மீண்டும் கூத்தர் கற்பனையில் உதயம் கண்டால்...

திருட்டுச் சிந்தையென்ற பட்டத்துடன் கவிராட்சசப் புகழுக்கே தீ வைத்துவிடுவார்களே!

1968

# சிறைக்கோட்டம்

கழனி பற்றியதில்—

பொன்னி நதிக் கிணையான கன்னி நதியுண்டோ?

களம் பற்றியதில் -

பல்லாறு ஓடினும் தெள்ளாறு ஆகுமோ?

இரண்டுமே -

சொல்லாறு பெருக்கெடுக்கும் சுந்தரக் காவியங்கள் கண்டன.

ஒன்று :

பசிக்குரியது.

இன்னொன்று :

பாரம்பரியத்துக்குரியது :

தெள்ளாறு பாடிய முதல் கலம்பகம் -

காவியத்தால் மாண்ட கதாநாயகன் மூன்றாம் நந்திவர்மனுடையது. இதோ...

இரண்டாம் பரணி கண்டு விட்டான் சேந்தமங்கலத்து சிங்கம் கோப் பெருஞ்சிங்கன்.

அது ஒன்பதாம் நூற்றாண்டு.

இது பதிமூன்றாம் நூற்றாண்டு.



அது மானத்தோடு கூடிய செங்களம்.

இது : ஆவேசத்தால் கண்ட செருக்களம்.

ஓ.........

கடுமுக வாத்தியம் ஒலித்துவிட்டது!

நந்திக் கொடியின் வெற்றி முழக்கம்.

தெள்ளாறு மகிழ்ந்தது.

காவிரியாள்?

கண்ணீரால் குடகு முகம் சோர்ந்தாள்.

புலி வீழ்ந்தது : கூண்டுள் அடைபட்டது.

சேந்தமங்கலம் என்பது திருநாவலூர்க்கு அண்மையில் உள்ளது.

அதனை ஆண்டவன் பல்லவத்தின் கடைசித் தோன்றல் -

கோப்பெருஞ்சிங்கன் கடகடவெனக் கருவநகை புரிந்தான்.

"பெரும, கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!" பல்லவ தேவியின் உள்ளத்திலொரு பதற்றம்.

"சிந்திக்க என்ன இருக்கிறது தேவி?"

சிங்கத்தின் கர்ஜனை!

"சோழ அரசர் மூன்றாம் இராசராசரைச் சிறையில் அடைத்துவிட்டீர்கள்."

"ஆம்; அடைத்துவிட்டேன். ஆ...எத்தனை ஆண்டுகள் எதிர்பார்த்த வெறியான சந்தர்ப்பம்!"

"வெறி அடங்கி விட்டதல்லவா?"

"அடங்கிவிட்டது."

"விடுதலை செய்யலாமே?"

"தேவி......!"

அண்ட சராசரங்கள் நடுநடுங்கின!

"கோபத்தை அடக்குவது கோமகர்க்கு அழகு!"

"விவேகம் படிக்கிறீயா?"

"வேந்தர்க்கு அணிகலன் விவேகமல்லவா?"

"உன் நோக்கம்?"

"ஏதோ, சினத்தின் கொழுந்தாலோ, சிந்தனையின் தடுமாற்றத்தாலோ இந்தப் போர் நிகழ்ந்துவிட்டது."

இராசராசரை வென்றடக்கி இழுத்து வந்து சிறை வைத்துச் சினந்தீர்த்தீர்கள். இப்போது விடுதலை செய்து விடலாம் அல்லவா?"

"பழிவாங்க வேண்டும்."

"அதுதான் தீர்ந்துவிட்டதே."

"மேலும்...மேலும்..."

"பிரபோ! இந்த வெற்றி முழக்கத்தோடு நாம் சோழரை விடுதலை செய்துவிட்டால் நிலைத்த பரணி நீடிக்கும். காரணம் சொல்லட்டுமா?"

"செவிகள் மூடிவிடவில்லை."

"ஹொய்சள நரசிம்மன் பற்றி எண்ணிப் பாருங்கள்."

"என்ன இருக்கிறது, எண்ணிப் பார்க்க?"

"பெரும, துவார சமுத்திரத்து அரசர் நரசிம்மன், தன் தண்டநாயகர்களான அப்பண்ணன், சமுத்திரகொப்பையன் என்பவர்களுடன் படை திரட்டி வருகிறாராம்."

"அறிவேன்!"

"அறிந்துமா?"

"அவனையும் ஒரு கை பார்க்கலாம் என்றுதான் எதிர்பார்க்கிறேன்."

"பிரபோ..." நினைத்துப் பின்னர் மயங்கி மரம்போலச் சாய்ந்தாள் பல்லவதேவி!



விளக்கில் ஒளி முத்தமிட்டு விரைந்தன ஏழு நாழிகைகள்!

கொள்ளிவாய்ப் பேயெனும் நள்ளிரவு!

கிசுக்கிசுக்கென்ற சிறைக் கதவங்களின் ஓசை!

விர்விர் என்ற காற்றின் சத்தம்.

சலங்சலங்கென்ற சதங்கையின் நாதம் எங்கிருந்து வருகின்றது?

சிறைக்கோட்டம் திறந்தது. அதிகாரிகள் வாய் பொத்தி நின்றனர். காதோடு காதாகச் சிலர் இரகசியத்தைக் கிசுகிசுத்தனர். பெரிய இடத்து உத்தரவு. மூச்!

சோழன் இராசராசன் அடைபட்டிருந்த சிறையறை—

சலங்கொலி நின்றது.

"சோழரே!" பல்லவ தேவியின் பரிதாபக் குரலில்.

"பல்லவ தேவியா?"—புலியின் அலட்சிய உறுமல்!

"வியக்கிறீர்களா?"

"வேடிக்கை பார்க்கிறேன்!"

"பார்க்க வேண்டிய காலம் பறந்துவிட்டது!"

"அதைப்பற்றி இன்றளவும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவன் உன் கணவன்!"

"நா காக்க!"

"அதுதான் சிறைப்பட்டு விட்டதே!"

"மனம் யாருக்கும் சிறைபடுவதில்லை. அதன் காவலன் நாக்கு!"

"காரியம் கண்டது சொல்லு! எனக்கு உன் அறிவுரை தேவையில்லை."

"உதவி தேவையா?"

"உன்னால் முடியாது!"

"சொன்னால் முடியும்!"

"ஒரு சின்னம் தருக தேவி!"

"ஒரு துளி போதுமே! பாவம், காவியம்! போகட்டும். இந்த நிலையில் உங்களைப் பார்க்க நான் விரும்பவில்லை! தப்பிச் செல்ல வழி வகுக்கிறேன். தயவு செய்து சென்று விடுங்கள்..."

"உன் கருணைக்குக் காரணம்?"

"உங்கள் காவிரியின் மேல் ஆணை! தென்னாற்றுக் களங்கத்தை நான் விரும்பவில்லை!"!

"இப்போதே தப்பிக்க வழியுண்டா?"

"ஏற்பாடுகளை இரகசியமாக கவனிக்க வேண்டும். நாளை இந்த நேரத்தில் வீரன் ஒருவன் உங்களைச் சந்திப்பான். அவனோடு சுரங்கப் பாதை வழியாகத் தப்பிச் செல்லலாம்!"

மீண்டும் சலங்கை ஒலித்தது!

சிறைக்கோட்டக் கதவுகள் மூடின!

பல்லவதேவி அரண்மனையை அடைந்தாள்.

"யார் அங்கே!"—

ஓங்கிக் குரல் விடுத்தாள் சேந்தமங்கலத்து அரசி பல்லவ தேவி!

"அன்னை வாழ்க, அரசி வாழ்க!"

"வீரனே, இப்படி வா. இது இரகசியம். சிறையில் அடைபட்டிருக்கும் சோழ அரசர் இன்னும் ஒரு நாழிகைப் போதில் தப்பிச் செல்ல வேண்டும். சிறைக்கோட்ட அதிகாரியிடம் இந்த இலச்சினையைக் காட்டி, தப்பிச் செல்லச் சொல்."

விரலிலிருந்த நந்தியிலச்சினை கழன்றது. அதனைச் சுமந்துகொண்டு அம்பென விரைந்தான் அன்புக்குப் பாத்திரமான அந்த வீரன்.



செய்தது நியாயமோ, இல்லையோ!

தனக்கே விடுதலை கிடைத்த ஒரு பெருமூச்சு பறந்தது பல்லவதேவிக்கு.

சிறைக்கோட்ட அமைதி.

மயானப் பெருமூச்சு.

இரவின் சூன்யம்; கனவில்லை—கனன்ற கற்பனைகள்!

கடைந்த கால்கள்; கவனத்துடன் கூடிய உடைவாள்—இவற்றின் ஒட்டு மொத்தச் சேர்க்கையாக வந்து நின்றான் அந்த வீரன்!

"சோழநாட்டரசே! புறப்படலாமா?"! என்று வினவிய வண்ணம் கனத்த சாவியை எடுத்துப் பூட்டைத் திறந்தான் அந்த வீரன்.

சிறைக் கதவுகள் திறந்தன.

நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருந்தான் இராசராசன்.

"ஏன் மௌனம்? அரசியின் உத்தரவு. புறப்படலாமா?"

தலையசைத்தான். "புறப்படுவதற்கில்லை."

"ஏன்?"

"விருப்பமில்லை."

"விரும்பிய பிறகுதானே இந்த ஏற்பாடு?"

"நேற்று விரும்பினேன்."

"இன்று என்ன வந்துவிட்டது?"

"மானம் வந்துவிட்டது, மானம்! வீரனே! உன் அரசியிடம் போய்ச் சொல். கேவலம் ஒரு பெண்ணின் கையினாலா நான் விடுதலை பெறுவது? வேண்டாம், வேண்டாம். அதனால் ஏற்படும் அவமானக் கறையைவிட சிறைக்கோட்

டத்தும் சாவது மேல் என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்!"

சொற்கள் ஆழமாகவும் அழுத்தமாகவும் வெடிபட்டன; வீரனின் மனம் துடிபட்டது; பரணி மயக்கம் கடிபட்டது!

அதுவரை சிலைபோல் சமைந்துவிட்ட அந்த வீரன்—

நாணித் தலைகுனிந்து நடந்தான்.

காரணம், அவன் வெறும் வீரனல்ல; புனைவடிவம் தாங்கிவந்த சேந்தமங்கலத்து அரசன்கோப் பெருஞ்சிங்கன். ஆம்; நாட்டின் நலனைக் கருதி, தானே சோழனை விடுவிக்கத் துணிந்துவிட்டாள் அரசி என்பதை அறிந்திருந்தான் அவன். அரசியின் நம்பிக்கைக்குகந்த வீரன்போல் மாறுவேடம் புனைந்து சோழனை விடுவிக்கத் திட்டமிட்டான், சிறைக் கதவுகளைத் திறக்கையில், 'பெண்ணின் கையால் விடுதலை பெறும் கோழைச் சோழனே!' என்று சுடச் சுடக் கேட்க ஆசை கொண்டிருந்தான்.

ஆனால், நடந்தது...?

—1969

# பாதுஷாவின் பாதுகை

இளங் காலைப்போதில் உதய ரேகைகள் கசிந்து கொண்டிருந்தன. பாதுஷா ஔரங்கசீப்பின் அவசர அழைப்புக் கிணங்கி அதிகாரிகள் அரண்மனை நோக்கிப் பறந்து கொண்டிருந்தனர். தில்லி மாநகர் வீதியே திகைத்தது.

பொன்னாலும் மணிகளாலும் அலங்கரிக்கப்பெற்ற அழகுமிகு அரண்மனைக் கூடத்தில், பாதுஷா ஔரங்கசீப், பெரிதான ஆலோசனையில் மூழ்கித் தம்மை மறந்திருந்தார். அந்த உருவத்துக்கே ஓர் அலாதிப் பொலிவு! அந்த ஊருக்கே ஒரு தனியான மதிப்பு!

எதிரே சின்னஞ்சிறு மர மேடையின் மீது பொன் வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டுத் துணி விரித்து, அதன் மேல் இரண்டு அலங்காரச் செருப்புகள் - பாதுகைகள் வைக்கப் பெற்றிருந்தன. ஏன், எதற்கு என்பன போன்ற கேள்விக் குறிகள் தாம் எத்தனை எத்தனை முகங்களில்!

அரசியல் அதிகாரிகள் அனைவரும் குழுமிவிட்டனர். பாதுஷா ஔரங்கசீப்பின் செக்கச்சிவந்த கண்கள் வலம் வந்தன. கொடூரம் நிரம்பிய முகத்தில் பொருளார்ந்த புத்தம் புதிய தெளிவு! கொக்கரிப்பு நிறைந்த அந்த உதடுகளில் சித்தம் செறிந்த தெளிவு!

"ஷா இன்ஷா அவர்கள் என்னை அவசரமாக அழைத்த தன் காரணத்தைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்!" அதுவரையில் நிலவியிருந்த அமைதியை மெல்லக் கலைத்தார் முதலமைச்சர்.

பாதுஷா ஔரங்கசீப்பின் சிரிப்பொலி புகைந்தது. "தென்னாட்டவர் பணி கப்பம் செலுத்தாமல் ஏமாற்றி வருகின்றனர். அவர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்...!"

"எப்படி என்பதை நாங்கள் அறியலாமா, பாதுஷா?"

"அறிவிக்கத்தானே உங்களை அழைத்தேன்! இதோ இருக்கும் பாதுகைகளில் ஒன்றை யானையின் மீது வைத்து ஊர்வலமாக அழைத்துச் செல்லுங்கள். தென்னாட்டு மன்னர்கள் இதற்குத் தலைவணங்கித் திறை செலுத்த வேண்டும். தலைநிமிர்பவர்களை நான் படைகொண்டு சிறைப்பிடிப்பேன்.

"பாதுஷா!"

"ஏன் இந்த வியப்பு?"

"அறம் பற்றியதிலும், கலை பற்றியதிலும் முன்பே அநீதியான பெயர்கள் தங்களைப் பற்றி அடிபட்டு வருகின்றன. இதனால் கொந்தளிப்பே ஏற்படும்!"

"இல்லை; ஔரங்கசீப்பின் இதயம் இமயத்தை வெல்லும்!"

"யானை இந்துக்களின் புனித ஜீவன்!"

"அதனால் என்ன?"

"பாதுகையை அதன்மீது ஏற்றி, இந்துக்களைத் தலைவணங்கச் செய்வது அறமாகாது."

"இந்துக்களின் இராமாயணத்தில் பரதன் இப்படிச் செய்யவில்லையா?"



"அவர் தம் தலை மீது அதைச் சுமந்தார்!"

"இவை என் அண்ணனின் பாதுகைகள் அல்ல, என்னுடையவை; வீண் வாதங்களை நான் விரும்பவில்லை. முடிந்த முடிபாகத்தான் இதனைச் செய்கிறேன். ஔரங்கசீப் ஒரு புதிய சரித்திரத்தை எழுதுகிறான்! நாளையே இந்தப் பாதுகை ஊர்வலம் நடைபெற வேண்டும்!"

இனி பாதுஷா ஔரங்கசீப்பின் கட்டளையை மீற யாருக்குத் துணிவு உண்டு.

அந்நாளையத் தென்னகமே அரட்டி கண்டது. ஆவேசம் கொண்டது. என்ன கண்டு யாது பயன்?

வழிநெடுகத் தலைகள் வணங்கின. வழிபட்டுக் கரங்கள் காணிக்கை செலுத்தின. பெருநில மன்னர்களும், குறுநிலச் சிற்றரசர்களும் வருநிலை உணர்ந்து வாய் பொத்தி, பாதுஷாவின் பாதுகைக்கு, வழிவிட்டனர். பாதுகைப் பயணம் தமிழக எல்லையைத் தாண்டியது.

வெருண்டெழுந்தனர் வீர மிகு தமிழர்கள்! ஆயினும் என்ன செய்ய முடியும்? அவர்களையே அப்போது ஆண்டது நாயக்கர் மரபுதானே?

வெறிச்சோடிய வீதிகளில்தான் பயணம் சென்றது. ஆயிரமாயிரம் இஸ்லாமிய வீரர்களுக்கே அது ஆச்சரியத்தை விளைவித்தது. இந்தத் தமிழர்களே விசித்திர நாகரிகப் போக்குடையவர்கள் தாம்! எதிர்க்க முடியாத நிலை என்று தெரிந்து, மசிக்க முன்வராமல் இருப்பது அவர்களுடைய நாகரிக முதிர்ச்சிதான்!

பொன்கமழ் உருவன் பூதநாயகன், நால்வேதமும் பொருள்களும் அருளி, அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் அழகர்வாழ் அழகுமிகு மாமதுரையைத் தலைமைப் பீடமாகக் கொண்டு, அப்போது ஆண்டு வந்தவர், மூன்றும் முத்து வீரப்ப நாயக்கர்,

டில்லி பாதுஷா ஔரங்கசீப்பின் இந்தப் புதிய ஏற்பாட்டைக் கேள்விப்பட்டு வெட்டுண்ட அரவின் வால்போல் துடிதுடித்தார் முத்துவீரப்ப நாயக்கர்.

அங்கயற்கண்ணியாம் மீனாட்சியாம் ஆலவாய் மதுரையில், ஔரங்கசீப்பின் பாதுகையை யானை மீது சுமந்து வர விரும்பாத முத்துவீரப்ப நாயக்கர், திருச்சிராப்பள்ளிக்குப் பயணமானார். அப்படிப் பயணமாகும் போது அன்னை மீனாட்சியை வழிபட்டார்.

மதுரையை விட்டுச் சிராப்பள்ளி நாடி வந்த மறைவு பலருக்குப் புரியாத புதிராக இருந்தது. அரசர் முத்துவீரப்ப நாயக்கர் யாரிடமும் எந்தவிதப் பேச்சையும் வைத்துக் கொள்ளவில்லை. பாதுகையின் மர்மம் எதாக இருக்கமுடியும் என்பதிலேயே அவருடைய சிந்தனை சுழன்றது.

ஒரு வாரம் கழிந்தது. பாதுகைப் பயணம் திருச்சிராப்பள்ளி எல்லையுள் நுழைந்தது. நாயக்கரின் முன்னறிவிப்புப்படி அந்தப் பயணத்துக்கு மக்கள் எவ்வித எதிர்ப்பையும் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் தாங்க முடியாத அவமானம் என்ற பொருமல் மட்டும் அனைவருடைய உள்ளத்திலும் பொங்கி எழுந்தது.

அரசர் மாளிகையின் தலைவாயிலை அடைந்து நின்றது யானை. காவல் நின்ற வீரர்கள் வெளியாததுபோல் வாளாய் நின்றனர். முகமதியர்கள் முகங்களில் சீற்றம் வெடித்தது. அவர்களைச் சாந்தப்படுத்தினான் தளபதி நஸீர்கான்.

தங்கத் தாம்பாளத்தில் வைக்கப்பெற்றிருந்த அந்தப் பாதுகையைச் சுமந்துகொண்டு மாளிகையுள் நுழைந்தான் நஸீர்கான். அரியாசனத்தில் வீற்றிருந்த அரசர் முத்துவீரப்ப நாயக்கர் ஒரு விருந்தினரை வரவேற்பதுபோல் வரவேற்றார்:—

"வாருங்கள் தளபதி! உங்கள் வருகை மனிதர்மனை மதிப்பதாக இருக்கட்டும்!"



நஸீர்கான் கலகலவென்று நகைத்தான். "மதுரை நாயக்கரே! இந்தப் பாதுகையை நீங்கள், மதிப்பீர்களேயானால், எங்கள் பாதுஷாவும் உங்களை மதிப்பவராவார்!"

"இது என்ன பாதுகை? புரியும்படி சொல்லுங்கள்!"

தளபதி நஸீர்கான் விளக்கினான்.

அரசர் முத்து வீரப்பநாயக்கர் இப்போது கடகடத்த சிரிப்பொலியை எழுப்பினார்.

"அப்படியா? வெகுநேரமாக அதனைச் சுமக்க வேண்டாம்; தரையில் வையுங்கள் அதற்குரிய மதிப்பை நான் தருவேன்!"

முத்து வீரப்ப நாயகரின் பேச்சின் உள்ளடக்கத்தை நஸீர்கான் புரிந்துகொள்ள வேண்டுமோ? அவன் மிக்க மரியாதையுடன் தரையில் தாம்பாளத்தை வைத்தான்.

அரியணையை விட்டு எழுந்து வந்த அரசர் முத்துவீரப்ப நாயக்கர், யாரும் நினைத்துப் பாராத ஒன்றைச் செய்து விட்டார். தம்முடைய இடக்காலுக்கு அந்தப் பாதுகையை அணிசெய்து, வலக்காலை நீட்டி, "எங்கே இன்னொரு பாதுகை நஸீர்கான்? உங்கள் பாதுஷா ஒரு காலில்தான் பாதுகை அணிவாரோ?" என்று கூறி, வேதனையும், வேகச்சுழிப்பும் கலந்து ஆவேசப் பெருநகை புரிந்தார். அந்தப் பெருநகையின் எதிரொலிபோல் முகம்மதிய வீரர்களின் வாட்கள் உருவப்பட்டன. தொடர்ந்து தமிழ் மக்களின் வீரவாட்கள் கர்ஜனை செய்தன.

அரசர் முத்து வீரப்ப நாயக்கரின் குரல் கணீரென்று ஒலித்தது. "நஸீர்கான்! நீங்கள் இருப்பது திருச்சிராப்பள்ளி! இங்கு ஒரு சிறு தப்பும் முடியாது. அமைதியாக விடைபெறலாம்! விரும்பினால் இன்னொரு பாதுகையுடன் உங்கள் பாதுஷாவைச் சந்திக்கச் சொல்லுங்கள்!"

அரண்டு மருண்ட டில்லிப் படைகள் திரண்டு நடந்து வடக்கு நோக்கின. முத்து வீரப்பரின் துணிவை அறிந்த

தென்னகமே வியந்தது; பயந்தது! ராணி மங்கம்மாவின் திருமகனாயிற்றே முத்து வீரப்ப நாயக்கர்!

டில்லி பாதுஷா ஔரங்கசீப்பின் சினச்சீற்றத்தில் தெறிக்கும் தீப்பொறிகளால், தமிழகமே சாம்பலாகப் போகிறது என்று பலரும் கருதினர்! கணித்தனர். முத்து வீரப்ப நாயக்கரின் கரங்களில் விலங்கிட்டு, ஒரு சொறி நாயைப் போல வீதிக்கு வீதி இழுத்து வரப்போகிறார்கள் என்று காதுக்குக் காது வைத்தது போல முணு முணுக்கத் தொடங்கினர். பாதுஷா அனுப்பிய பாதுகையைக் காலில் அணிவதா? என்ன செருக்கு?

கொலு மண்டபத்தில் அமர்ந்திருந்த டில்லி முகலாயக் கொற்றவர் ஔரங்கசீப், செய்தியைக் கேள்விப்பட்டு, சிங்கத்தின் பிடரிச் சிலிர்ப்பு போலெழுந்து, யானையின் மதர்த்த நிலையில் அசைந்து, புலியின் உறுமலைப் போல் குரல் விடுத்துப் பகபக என்று பெருநகை எழுப்பினார். அந்தக் கடகடத்த சிரிப்பொலி கேட்டு மாளிகை அதிர்ந்தது. மந்திரிகள் விதிர்த்தனர்.

பாதுஷாவின் வாயிலிருந்து ஏதோ பயங்கரக் கட்டளை வெளிவரப் போகிறது! தென்னாடு கண்டிராத போர்ப் பயணம் தொடங்கப்போகிறது.

ஔரங்கசீப்பின் நாவசைந்தது; சொற்கள் வெடித்தன. "பிரதானியரே! அதோ அந்த மற்றுமொரு பாதுகையை யானை முதுகில்—இல்லை, நவரத்தினப் பல்லக்கில் வைத்துப் படைப் பயணத்துக்கு ஆவன செய்யுங்கள். படையென்றும் சாதாரணப் படையல்ல; பெரும்படை அதன் நடையதிர்ச்சியிலேயே தென்னகம் நடுங்கிப் பொடிந்துவிட வேண்டும். படைக்குத் தலைமை தாங்கப் போகிறவன் உங்கள் பாதுஷா!"

எல்லோரும் எல்லாவற்றையுமே எதிர்பார்த்தனர். ஆனால் பாதுஷாவே படைக்குத் தலைமை தாங்கப் போகிறார் என்பது எவரும் எதிர்பாராதது!



மறுநாள் புலர்பொழுதில் ஔரங்கசீப்பின் மாசேனை புறப்பட்டது! முன்னே நவரத்தினப் பல்லக்கு; பின்னே முகலாய நாயகராம் ஔரங்கசீப்பின் அலங்காரப் போர்ப் பயணம்!

தென்னகத்தின் நடுஞ்சாலை முழுதும் 'பொன்னகத்தின் பொலிவே பொலிவு!' என்று வியக்குமளவுக்கு ஒப்பனை! ஔரங்கசீப் என்றால் அந்நாளைய சிம்ம சொப்பனம் அல்லவா?

இடையிடையே இருந்த அரசர் பலர் தங்கள் அரணுக்கும் பாதுஷா எழுந்தருளுவார் என்றுதான் எதிர்பார்த்தனர். ஆனால் பாதுஷாவோ இலக்கை நோக்கிச் செல்லும் அம்பு போல் திருச்சிராப்பள்ளியை நோக்கிச் சென்றார். அதுவே அவருடைய முதல் பயணமுங்கூட.

இடைப்பட்ட அரசர்கள், எதிர்பார்ப்பு தடைபட்ட காரணத்தால், விடைகூட்டி வணங்கினர்; வழிபட்டுப் படை கூட்டியனுப்பினர். இப்படியாகச் சேர்ந்த சேனாசமுத்திரம் நாலு திசைகளையும் திருப்பி, கண்டோரைக் கலக்கியது; விண்டோரை மயக்கியது!

முகலாயப் படைகள் திருச்சி எல்லைக்குள் நுழைந்தன. அங்கே-

அரசர் முத்து வீரப்பரைக் காணவில்லை. அவர் மதுரையில் இருப்பதாகச் செய்தி கிடைத்தது. 'என்ன திமிர் இந்த முத்து வீரப்பனுக்கு' என்று எண்ணிச் சினந்தனர் இஸ்லாமிய வீரர்கள்! ஆனால் பாதுஷா ஔரங்கசீப்...?

ஏனிந்தப் புன்னகை? ஓகோ! எல்லையற்ற சினத்தின் எதிர்நடிப்போ இந்தப் புன்னகை- அல்லது ஏளனப் புன்னகை?

மகா சமுத்திரம் போல திரண்ட படைகள் மதுரை மாநகரை அடைந்தன.

இம்முறை தமிழ் மக்களின் வரவேற்பில் புதிய முறை தென்பட்டது. சென்ற முறை வெறிச்சோடிய வீதிகளில் பாதுகை சென்றதுபோல அல்லாமல், வழி நெடுக மக்கள் நின்று வேடிக்கை பார்த்தனர். அவர்களுக்குப் பின்னால் பயங்கரமான ஆயுதங்கள் மறைந்திருந்தன. திடுமென்று ஏதேனும் ஏற்பட்டால் பாதுகாப்புத் தேவையல்லவா?

ஒற்றர்கள் மூலம் பாதுஷா ஔரங்கசீப்பின் வருகையில் தெரிந்த மாறுதலைக் கேள்விப்பட்டுத்தான், நாயக்க அரசர் மக்களைப் பார்வையிடப் பணித்தார். மேலும், பாரதமே வியந்த பாதுஷாவல்லவா ஔரங்கசீப்!

தமிழகத்தில் பேரெழிலைப் பார்க்கப் பார்க்கத் தார் வேந்தர் ஔரங்கசீப்பின் கண்கள் கனன்று காட்சி தரு கின்றனவா இல்லை பனித்திகின்றனவா என்றே புரியவில்லை பலருக்கு! பயணம் நீடிக்க நீடிக்கப் பலருக்குப் பாதுஷா ஒரு புரியாத புதிராகவே தோற்றமளித்தார்.

வானளாவிய எழுநிலை மாடம் கொண்ட அரண்மனையின் தோற்றம் ஔரங்கசீப்பை வியக்கச் செய்தது. அவரை வரவேற்க அரண்மனை அதிகாரிகள் முன்வந்தனர். களம் காண வருபவராக இருந்தால் எல்லையில் நின்று போர்முரசம் கொட்டுவார்! இதர் காணிக்கை காரணத்தானே வருகிறார்! —எனவே, அதிகாரிகள் முன்வந்து வரவேற்று மாமன்னர் திருமலை நாயக்கர் கட்டிய கலைத்திறன் வாய்ந்த பெருங் கூடத்துக்கு- மகாலுக்கு— அழைத்துச் சென்றனர். அங்கே-

நாயக்க அரசர் முத்து வீரப்பர், வீறார்ந்த கோலத் துடன் நின்றிருந்தார் ஒரு காலில் பாதுஷாவின பாதுகை: மறுகாலில் தம்முடைய பாதுகை! இடுப்பில் வீர வாள்! தலையில் மணி மகுடம்!

அம்பாரியிலிருந்து இறங்கிய பாதுஷா, வீர நடை போட்டு அருகே வந்து நின்றார். அவருக்கு முன்னே முகலாயப் பிரதானி, கையில் தங்கத் தாம்பாளத்தில் ஏந்திய பாதுகை யுடன் நின்றிருந்தார்.



இப்படி எதிரும் புதிருமாக எவ்வளவு நேரம்தான் நிற்க முடியும்? யாராவது ஒருவர் வணங்க வேண்டும், வாய் திறக்க வேண்டுமே; இருவருமே விழிப்பும் சுழிப்புமாக அரண்டு காட்சி தந்தனர்.

ஔரங்கசீப்பின் கண்கள் முத்துவீரப்ப நாயக்கரின் காலை நோக்கின. அங்கே, முன்னம் கப்பத்துக்காக அனுப்பிய பாதுகை காட்சி தந்தது. அடுத்து—

"வணக்கம், தில்லி பாதுஷா!" என்றார் முத்துவீரப்ப நாயக்கர். நாயக்கர் குரல் முதலில் வந்தது சொந்தக்காரர் களுக்கு வியப்பு; அந்நியர்களுக்கோ மகிழ்ச்சி. பாதுஷா ஔரங்கசீப் பொருளார்ந்த குறுநகை புரிந்து, "சலாம்" என்றார். "நாயக்கரே! நீங்களாக வணங்கியதற்கு மகிழ் கிறேன்."

முத்துவீரப்ப நாயக்கர் முத்துநகை புரிந்தார். "இல்லை; நீங்கள் வணங்கிய பிறகு தான், நட்புறவோடு வந்திருக்கிறீர் கள் என்று உணர்ந்து மறு வணக்கம் செலுத்தினேன்!"

"என்ன! நான் வணங்கினேனா?"

"உங்கள் கண்கள் என் பாதத்தைத் தொட்டன."

"என் பாதுகையைப் பார்த்தேன்!"

"அது என் காலில் இருக்கிறது!"

முத்துவீரப்பரின் புத்தி கூர்மையைச் சோதிக்க, இந்தப் பதிலே பெரு வியப்பை அளித்தது ஔரங்கசீப்புக்கு! மேலும் பேசினார்:

"இன்னொரு பாதுகையையும், உங்கள் கட்டளைப்படி கொண்டு வந்திருக்கிறேன்."

"மெத்த மகிழ்ச்சி! கப்பம் கட்ட வேண்டுமா?"

"எதிர்பார்க்கிறேன்!" என்று கூறிய பாதுஷா ஔரங்கசீப், இன்னொரு பாதுகையுள்ள தங்கத் தாம்பாளத்

யைத் தரையில் வைக்குமாறு தம் கண்களால் உத்தரவு பணித்தார்.

தாம்பாளம் தரையில் வைக்கப்பட்டது.

கொஞ்சமும் தாமதியாமல் நாயக்க அரசர் முத்துவீரப்ப நாயக்கர், வலக் காலை எடுத்துப் பாதுகையுள் நுழைத்து அணிந்துகொண்டார்? மறுகணம்—

முகலாய வீர வாட்கள், பேரோசையுடன் உருவப்பட்டன. ஆனால்—

பாதுஷாவின் வணங்காத திருமுடி, வணங்கியது. "நாயக்கரே! உங்கள் துணிவையும், புத்திகூர்மையையும் மெச்சுகிறேன்! இப்போது நீங்கள்தாம் பாதுஷா!"

தமிழ்க் கண்களிலே காவிரிப் பிரவாகம்! தலைகள் யாவும் தாழ்ந்தன. நாயக்கரின் சிரம் நயந்து பணிந்தது. "நன்றி, பாதுஷா! மிக்க நன்றி! நான் எதிர்பாராத ஒன்று இது! வரலாறு எதிர்பாராத ஏடு இது!"

பாதுஷா ஔரங்கசீப்பின் கண்களில் புனித நீர்ப் பிரவாகம்! அவருடைய நயத்தகு நாவு அசைந்தது: "முத்து வீரப்பரே! என்னுடைய இந்த வருகையால் தென்னகமே மண்ணகமாய் விடும் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஏன் நீங்களும் எதிர்பார்த்திருப்பீர்கள். உண்மை அதுவல்ல. ஔரங்கசீப்பைப் பற்றி அநியாயமான விமரிசனங்கள் நாட்டில் பலவாறு பரவின. என் வாழ்நாளில் நான் சரித்திரத்தை மூட ஆசைப்படவில்லை. தொடங்க ஆசைப்பட்டேன். ஔரங்கசீப் இதயமில்லாதவன்—கலைக்கு விரோதி என்பன போன்ற பழிச் சொற்களுள் என்னைச் சமாதி வைக்க நான் விழையவில்லை. ஔரங்கசீப்பின் அரசியல் ஒரு புதிய அத்தியாயம்—இதயம் நிரம்பிய படலம்-என்பதை உருவாக்கி அதன் மேல் அமர ஆசைப்பட்டேன். என்னுடைய இந்தப் புதிய பணிவை-அடக்கம் நிறைந்த அரசியல்



தொடக்கத்தை- எவர் மூலம் தொடங்குவது என்று பல நாட்கள் ஆய்ந்தேன். ஒருவரும் என் கண் முன் தென்படவில்லை. ஆனால் செவிகள் மூலமாக உங்கள் பெயர்தான் கேள்விப்பட்டேன். எனவே இந்தப் பாதுகை யாகம்! இதனால் என்னை எதிர்த்தவர் என் பக்கத்திலே இருந்தனர்; வைதவர் வழிதேடுகக் காணப்பட்டனர். பாவம், அவர்கள்! அவர்களுக்கு உங்களுக்குத் தோன்றியது போன்ற துணிவோ புத்தி கூர்மையோ, தன்மான உணர்வோ ஏற்படவில்லை. காவிரியின் நீர், கங்கையினும் தூய்மையானதுதான்-வாய்மையானதுதான்-ஆண்மை நிறைந்ததுதான்! நான் கேள்விப்பட்டது மிக மிக உண்மை!"

தில்லி பாதுஷா ஔரங்கசீப் அன்பொழுக, பண்பொழுக நாயக்க அரசர் முத்து வீரப்பரை மார்போடு மார்பு தழுவி அணைத்துக்கொண்டார். "ஒழுக்க சீலரான உங்களை அல்லா காப்பாற்றிவிட்டார்!"

ஒருவார விருந்தோம்பலுக்குப் பிறகு, பாதுஷா விடைபெற வேண்டிய கட்டம் வந்தது. நண்பர்கள் இருவரும் மார்போடு மார்பு தழுவி மீண்டனர். பாதுஷா ஔரங்கசீப் மெல்லக் கேட்டார்: "நாயக்கரே! நான் செல்வச் சீமானாக வந்தேன். ஏழையாகத் திரும்புகிறேன்."

பலர் வியந்தனர். நாயக்கர் நளினமாகச் சிரித்தார். "என்னவேண்டும் பாதுஷா? என்ன வேண்டுமானாலும் தந்துவிடுகிறேன்."

"வேண்டாம்; உங்கள் நாட்டு மக்களின் சரித்திரத்தில் நான் நல்லவிதமாக இடம்பெறவேண்டும். எனக்குத் தேவையானவை, அந்த இரண்டு பாதுகைகள்தாம்!"

"அணிந்த பாதுகையை மற்றவருக்கு அளிப்பது எங்கள் மரபல்ல!"

"வேண்டாம்; அவற்றுக்குரிய செல்வத்தைக் கொடுத்தால் உங்கள் நண்பன் செல்வந்தனாகவே திரும்புவான்!"

மீண்டும் அதே நளினமான செப்பு முத்து வீரப்பருடைய பொருள் புதைந்த இதழ்களில்! அடுத்துக் கொஞ்சமும் தாமதியாமல் இடுப்பிலிருந்த குத்துவாளை எடுத்து, பாதுகைகள் இரண்டையும் கழற்றி, தங்கத் தாம்பாளத்துக்கு நேரே பிடித்துத் துண்டு துண்டாகக் கிழிக்கத் தொடங்கினார். என்ன வியப்பான காட்சி அது...!

பலப்பல வாய்களில் வியப்பார்ந்த ஒலிகள்! பலப் பல நாவுகளில் புகழார்ந்த சொற்கள்!

பெரிதும் சிறிதுமான நவரத்தினங்கள் அந்த இரண்டு பாதுகைகளிலிருந்தும் பொலபொலவென்று கொட்டிய வண்ணம் இருந்தன. அடா அடா! வண்ணமான அந்தக் கற்களும், முத்துக்களும் தங்கத் தாம்பாளத்தை நிரப்பிய வண்ணம் இருந்தன! தாம்பாளத்தை மட்டும்தானா அவை நிரப்பின! எத்தனை எத்தனை இதயங்களை அவை நிரப்பி விட்டன!

1968

# அழகின் அடிமை

இருளரக்கியின் கன்னங்கரிய கூந்தல் அவிழ்ந்து கொண்டிருந்தது. ஏழாம் நாள் இரத்தப் பசியடங்கி ஏப்பமிட்டாள் போர் அரக்கி! அஞ்சிய நிலையில் செஞ்சி மண் அமைதிப்பட்டுக் கொண்டிருந்தது.

அரண்மனையில் கனக தீபங்கள் கண் விழித்தன. அங்கு மிங்குமாகப் பாங்கியர் அயர்ச்சியுடன் நடமாடினர். அமளத்தின் மடியில் தலை வைத்துக் கவலையின் காவியத்தைக் கண்ணீரால் எழுதிக் கொண்டிருந்தாள் யசோதரன் தேவி.

இன்னும் போர்க்களம் நோக்கிச் சென்ற கணவனைக் காணோம். என்ன செய்வாள்? செஞ்சோற்றுக் கடனும் வந்த நினைவே அது என்பது அவள் நினைத்ததாயிற்றோ? இல்லையென்றால் அன்னியர் பக்கம் நின்று சொந்த மனிதர்களை எதிர்க்கும் பந்தபுத்தி நிலை இந்த மண்ணுக்கு ஏற்பட்டிருக்க முடியுமா?

திடுமென்று கோட்டைக்குள் சலசலப்புக் கண்டது. அரண்டு மருண்டு எழுந்த யசோதரன் தேவி, செய்தியறிய வெளிப்பட்டாள்.

தளபதி யசோதரன் போர்க்களத்தில் வீழ்த்தப்பட்டான். குற்றுயிரும் குலையுயிருமாக அவனைத் தூக்கிக்கொண்டு அரண்மனையை அடைந்திருந்தனர் போர் வீரர்கள்.

இதயத்தைப் பிளக்கவல்ல செய்தி கேட்டு மயங்கி வீழ்ந்தாள் தேவி. அவளுக்கு மூர்ச்சை தெளிய வெகு நேரம் பிடித்தது.

"தேவி......!"

"..................!"

"தேவி!"

கணவனின் குரல் கேட்டு மெல்ல எழுந்தாள் தேவி. கண்ணீர் மல்க அருகில் வந்து நின்றாள். தொட்ட இடம் கவடுபடும் கட்டுக் கோப்பு நிறைந்த அவளுடைய சந்தனத் திருமேனியையும், சண்பக மலர் போன்ற மென்மை நிறைந்த அழகையும், சந்ததிக்குப் பிஞ்சு காணா இளமையையும் கண்டு மரணப் பெருமூச்சு விட்டான் தளபதி யசோதரன். பின்னர், விக்கித் திணறிப் பேசத் தொடங்கினான்:

"தேவி அழுகிற நேரமல்ல இது! தில்லி பாதுஷாவின் கட்டளையை நிறைவேற்றி வைக்க வேண்டிய நேரம் இது. என்ன செய்ய? கடனில் பெருங்கடன் செஞ்சோற்றுக் கடன்! புரிகிறதா, தேவி?"

"புரிகிறது பிரபோ, நன்றாகப் புரிகிறது."

"மேலும் புரியச் சொல்லுகிறேன், கேள். நீயும் உன் உயிருள்ளவரை கடைசி மூச்சுவரை போராடி, அந்த மகாராஷ்டிர வீரர்களைப் புறமுதுகிடச் செய்ய முனைய வேண்டும். பிஜப்பூர் சுல்தான் நம் இனத்துக்கு அந்நியரானாலும், என்னை வளர்த்த பெருமைக்கு ஆளானவர். எனவேதான் அந்தக் கடமையாற்றும் நன்றியுள்ளவர்களாக நாம் நடந்து கொள்ளவேண்டும். ஒருவிதத்தில் நீ பெருமையடைய வேண்டும். உன் கணவன் ஒரு கோழையின் வாள் வீச்சால் வீர மரணம் அடையவில்லை. மாவீரரான சத்ரபதி சிவாஜியின் வீர வாள் பட்டு வீர சொர்க்க



மடைகிறான். அவரை எதிர்த்த வீரப் பெண்மணியாக நீயும் விளங்கவேண்டும்!"

"நிச்சயம் விளங்குவேன், பிரபோ! இது சத்தியம்!"

தளபதி யசோதரனின் உயிர்ப் பறவை வானோக்கிப் பறந்தது. சுற்றிச் சூழ்ந்திருந்த வீரர்களின் முகத்தில் சோகம் படர்ந்தது. ஆனால் தொலைவில் நின்றிருந்த ஒரு வீரனுடைய கண்களில் மட்டும் நீர் சலசலவென்று வராக நதி போலப் பாய்ந்தது. அந்த வீரன் வேறு யாராக இருக்க முடியும்? சத்ரபதி சிவாஜிதான்! காரண காரியங்களை அறிய ஒரு சாதாரண சிப்பாய் வடிவம் தாங்கிப் பெரிய அமர்க்களத்திற்கிடையே கோட்டைக்குள் நுழைந்தார் சத்ரபதி சிவாஜி! அவர் அங்கே கண்டது?

செஞ்சோற்றுக் கடனாற்றிய ஒரு வீரத் திருமகனை! அடடா! பாரதத்தின் ரத்தமே! உன் பரிசுத்தம்தான் என்னே! வியப்பின் விளிம்பில் வீரத்தின் கூர்மை கண்டார் மகாராஷ்டிர தூய வீரர் சிவாஜி!

ஒற்றை விளக்கின் வெளிச்சத்தின்படியில் ஓயாத சிந்தனைத் தவமியற்றிக் கொண்டிருந்தார் சத்ரபதி சிவாஜி. யசோதரன் ஒரு சுத்த வீரன். அவனுடைய தரும பத்தினியோ கற்பு நிறை காக்கும் காவியத் திலகமாய் விளங்குகிறாள்! இந்தத் தமிழ் மண்ணின் மகத்துவம் தஞ்சமடைந்தவரையும் தன்வயப்படுத்திக்கொள்ளும் போலும்!

"பிரபோ!..."

தளபதி ரகுநாதன் வெகு நேரமாகக் கூடார வாசலில் நின்றான். சத்ரபதியின் கவனம் வேற்றுத் திசையில் பயணமாகிக் கொண்டிருந்ததை அறிந்து மேலும் காத்திருக்க வொண்ணாது குரல் விடுத்தான்.

சிந்தனைத் தவம் கலைந்த சத்ரபதி சிவாஜி, மெல்லத் திரும்பி நோக்கினார். தளபதி ரகுநாதன் நின்று கொண்டி

ருப்பதைக் கவனித்து, "வெகு நேரமாக நின்று கொண்டிருக்கிறீர்களா, தளபதி!" என்று மரியாதையுடன் வினவினார். அவர் அப்படி மரியாதையுடன் வினவக் காரணம் இருந்தது. ரகுநாதன் தளபதியே யொழிய, ஒரு செல்வச் சீமான்; பிரபு! விரும்பிக்க அவன் மொழியின் சைனியத்தில் உரிமை வேட்கையின் காரணமாகப் பணி புரிய வந்தான்.

"அரை நாழிகைப் போதாகிறது, பிரபோ?"

"என்ன விஷயம்?"

"நாளையப் போர் பற்றிய விளக்கங்களைக் கூறாமலேயே கூடாரம் நோக்கி வந்துவிட்டீர்களே!"

"நாளைக்குப் போர் இல்லை."

"என்ன? நாளைக்கு-"

"நாளைக்கு மட்டுமல்ல; இன்னும் பதினைந்து தினங்களுக்குப் போரில்லை."

"காரணம்?"

"யசோதரன் மாண்டுவிட்டார்!"

"மாண்டுவிட்டாரா?" - ரகுநாதன் குரலில் ஏக்கலிப்பின் எதிரொலி கேட்டது. அதன் உண்மை அப்போதைக்குச் சத்ரபதிக்குத் தெரிய வேண்டுமே! அது ஒரு நீறுபூத்த நெருப்பின் கதை!

ரகுநாதன் பேச்சைத் தொடர்ந்தான்: "பிரபோ! யசோதரன் மாண்ட இந்தச் சமயத்தில் மேலும் தாக்குதல்களைத் தொடுத்தால்தான் செஞ்சிக் கோட்டையை எளிதில் பிடித்துவிட முடியும். இதை விட்டு நாம் கால தாமதம் செய்தால் பிறகு, இஸ்லாமியப் படைகள் மேலும் குவியத் தொடங்கிவிடுமே!"

"பாதகமில்லை. பீஜப்பூரில் இருந்தோ, - தில்லியிலிருந்தோ உடனடியாகப் படை வந்து சேர இயலாத



காரியம். அப்படி வந்தாலும் இந்த வழியாகத்தான் செல்லவேண்டும்!"

"போரை ஏன் நிறுத்த வேண்டும் என்றுதான் எனக்குப் புரியவில்லை."

"புரியும்படி சொல்லுகிறேன் கேள்; நீ ஓர் இந்துவாகப் பிறந்தும் அதன் தருமத்தை நினையாமல் பேசுகிறாய். கணவனை இழந்த நிலையில் இருக்கிறாள் யசோதரன் தேவி. அவனுடைய ஈமக் கடன் முடியும் வரையில் நாம் காத்திருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்."

தளபதி ரகுநாதனுக்கு உண்மை புரிந்துவிட்டது. மகாராஷ்டிர அரசரின் மிகப் பெரிய அறத்தைத் தாங்கிய நல்ல உள்ளத்தை ரகுநாதன் எப்போதோ புரிந்துகொண்டிருந்தான். அறத்துக்காக உயிரையும் தியாகம் செய்யக் கூடியவர்; அது விஷயத்தில் கடுமையானவர் என்பதை அவன் அறிந்ததுவே! இந்தக் கட்டம் மேலும் அவனுடைய கடமை நெஞ்சில் உயர்வை எழுப்பியது. அவன் விடைபெற்று வெளியேறினான்.

பக்கத்தில் சற்றுத் தள்ளியிருந்த தன்னுடைய கூடாரத்தை அடைந்தது முதல் அமைதியற்ற நிலையில் காணப்பட்டான் ரகுநாதன். அவனுடைய சிந்தனையில் பலவிதமான போராட்டங்கள்!

பொழுதும் விடிந்தது. இன்னும் பதினைந்து தினங்களுக்குப் போரில்லை என்ற செய்தியை வீரர்களுக்கு அறிவித்துவிட்டுக் கூடாரத்துக்குத் திரும்பினான் தளபதி ரகுநாதன். அவனுள்ளத்தில் யசோதரன் தேவி நர்த்தனம் புரிந்தாள்.

சில ஆண்டுகளுக்கு முன்னம் ரகுநாதன் பீஜப்பூருக்குச் சென்று தங்கவேண்டி நேரிட்டது. அப்போது ஒரு கலையரங்கின் நிகழ்ச்சியின்போது யசோதரன் தேவியைச் சந்திக்க நேர்ந்தது. தேவியின் கட்டழகில் கருத்தைப் பறி கொடுத்த ரகுநாதன், தான் ஒரு பிரபு குமாரன் என்ற செல்வாக்கில் தேவியைச் சிறையெடுக்க முயன்றான். அந்த

முயற்சி அவனுக்குப் படுதோல்வியைத் தந்தது. முடிவாக ஒரு நாள் தேவியையும், யசோதரனையும் விருந்துக்கு அழைத்தான். அதையே வாய்ப்பாகக் கொண்டு தன் கருத்தைத் தனித்த முறையில் தேவியிடம் வெளியிட்டான். கிடைத்த பலன்?

காறியுமிழ்ந்த எச்சில்தான்!

இன்று வரைக்கும் அந்த நிகழ்ச்சி நெஞ்சிலிருந்து அகலவேண்டுமே! மகாராஷ்டிர சிங்கம் சத்ரபதி சிவாஜி, தமிழகத்தை நோக்கிப் பயணமான போது, செஞ்சியில் யசோதரன் தேவியைச் சந்திக்கமுடியும் என்பது ரகுநாதன் சிஞ்சித்தும் எதிர்பாராதது.

இடையில் நடந்த கதையே வேறு.

சத்ரபதி சிவாஜி தமிழகப் போர்ப் பயணத்தை மேற்கொண்டுவிட்டார் என்ற செய்தி தில்லி பாதுஷா ஔரங்கசீப்புக்குத் தெரிந்துவிட்டது. அப்போது தமிழகத்தில் முகமதியர்களுடைய ஆட்சி தலைவிரித்தாடிய நேரம். அந்தப் பொல்லாத நேரத்தை முறியடிக்கப் புறப்பட்டுவிட்டார் சத்ரபதி சிவாஜி.

அச்சமயம் செஞ்சியில் பிரதிநிதியாக இருந்து ஆண்டவன் அம்பர்கான். அவனுக்குச் சிவாஜி என்றால் சிம்ம சொப்பனம். இந்த நிலையில் அம்பர்கான், சிவாஜியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள நேரிடும் என்று முன் கூட்டியே தெரிந்துகொண்ட பீஜப்பூர் சுல்தான், தில்லிக் கட்டளையை மேற்கொண்டு தன்னுடைய நண்பன் யசோதரனை அனுப்பி வைத்தான். பீஜப்பூர் சுல்தான் எண்ணியது வீண் போகவில்லை. அம்பர்கான் பயந்தோடிவிட்டான்... யசோதரனே, செஞ்சோற்றுக் கடனையாற்றி வீர சொர்க்கம் புகுந்துவிட்டான்.

கிழக்கு வானில் நான்கு முறை கதிரவன் உதயம் கண்டான். ஐந்தாம் நாள்-



கூடாரத்தில் அலைமோதிய நிலையுடன் அங்குமிங்குமாக அடிபட்ட புலிபோலத் துடிபட்டுக் காணப்பட்டான் ரகுநாதன். ஆமாம்; நேற்று அவன் ஓர் ஓலை எழுதி யசோதரன் தேவிக்கு அனுப்பிவைத்திருந்தான். அதில், இப்போதும் முன்பு ஏற்பட்ட அதே ஆசை கொஞ்சமும் தணியவில்லையென்றும், மனம் வைத்தால் இதே செஞ்சியை கணவன் மனைவியாக நின்று கோட்டையில் ஆளலாம் என்றும், வீணில் கைம்மை நோன்பு நோற்பதோ அல்லது கைவிலங்குடன் மகாராஷ்டிர வீரர்கள் மத்தியில் நிற்பதோ தேவையற்றவை என்றும் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தான். ஆனால் கிடைத்த பதில்?

ஓலையை இரண்டு துண்டாகக் கிழித்துத் திருப்பியனுப்பியிருந்தாள் யசோதரன் தேவி. அந்த அவமானம்தான் ரகுநாதனை எரிமலையாக்கிக் கொண்டிருந்தது. வெகுவாகத் தன்னை அடக்கிக்கொண்டு மறு நாள் மீண்டும் ஓர் ஓலை எழுதினான்:

'தேவி, உன்னுடைய துக்க நிலையை உத்தேசித்துத் தான் ஈமக் கடன் முடியும்வரை போர் தொடுக்காமல் பார்த்துக்கொண்டு வருகிறேன். இதிலிருந்து என்னுடைய பெருந்தன்மையை நீ உணர்ந்தால் போதும். அழகு மலர்களைக் கூந்தலில் செருகி அணி செய்வதுதான் புத்திசாலித்தனம். இன்னும் ஒன்பது தினங்கள் இருக்கின்றன. நன்கு சிந்தித்துப் பதில் எழுதலாம். உன் அழகின் அடிமை.

- ரகுநாதன்'

ஓலைக்கான மறு மொழி மறு தினம் கிடைத்தது:

'அழகு மலர்களைக் கூந்தலில்தான் செருகி அணி செய்ய வேண்டும் என்பதில்லை. ஆண்டவனுக்கு அர்ச்சித்தும் வழிபடலாம் அல்லவா? என் பிணத்தைக்கூட உன்னிடம் ஒப்படைக்கச் சொல்லமாட்டேன். உன்னால் அந்த உத்தம மாவீரரான சத்ரபதியும்கூட, என் உள்ளத்தில் சிறப்பிழந்து

போய்விட்டார். காமுகனாக என்னைச் சந்திப்பதைவிட, தர்மவீரனாக என்னைக் களத்தில் சந்திக்க முயலுவாய் என்று எதிர்பார்க்கிறேன்.

-யசோதரன் தேவி'

தளபதி ரகுநாதனின் சிந்தனையும், உணர்வும் தணலில் அகப்பட்ட மூங்கில் புதர்போல வெடிபட்டன.

எல்லையில்லாத் துன்பங்களை இதயத்தில் புதைத்து, சமக் கடன்களை முடித்தாள் யசோதரன் தேவி! அன்றையப் பொழுது சாய்ந்து மறுநாள் உதயம் கண்டால் போர் முகம் நோக்கி அவள் புறப்பட்டாக வேண்டும். கணவருடைய குறிக்கோளை, செஞ்சோற்றுக் கடனை நிறைவேற்றி வைக்க வேண்டும்! அதற்கான முன்னேற்பாடுகளைக் கவனித்திருந்தாள். அன்று படை வீரர்களைப் பார்வையிட்டாள். முக்காலும் முகமறிய வீரர்களை அந்தப் படையில் காட்டித் தந்தனர் அவர்களுக்கான கட்டளைகளை விடுத்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பினாள். அன்றிரவு முழுதும் கண்மணிகளுக்கு மேல் இமைத் திரைகள் எப்படித் தழுவ முடியும்? "தாயே, சக்தி வடிவே! போரில் வெற்றி காண்பது என்பது உன் அருளால்தான் முடியும்! ஆனால் தோல்வி காணப்போனால் என்னையும் வீர சொர்க்கத்துக்கு அழைத்துவிடு! பகைவர் முன்னிலையில்-அதிலும் அந்த பாதகன் முன்னிலையில், என்னைக் கைவிலங்குடன், காட்சியளிக்கச் செய்யாதே!"

யசோதரன் தேவியின் வேண்டுகோள் அந்த இறைவியின் திருச்செவிகளில் நிச்சயம் பட்டிருக்க வேண்டும்!

மறுநாள்-

இரு முனைச் சேனைகளும் ஒரு முனையில் சந்தித்தன. செஞ்சிப் படைகளுக்கு மஞ்சள் இறந்த கொஞ்சுமொழிப் பாவை யசோதரன் தேவி தலைமை தாங்கினாள். அவள் ஆரோகணித்திருந்த உயர்நிலைக் குதிரை கனைப்புக் குரல்,



விடுத்து, கம்பீரமாகக் களத்தை வலம் வந்தது. அவள் கையில் ஏந்திய வீர வாள் குருதிக் காவியமியற்றியது.

அவளுடைய அந்த வீரத்தைத் தொலைவில் நின்று கவனித்த சத்ரபதி சிவாஜி மெய்ம்மறந்து போனார், மனத்தளவில் பாரதப் பெண்மணிகளின் வீரத்தைப் பாராட்டிய வண்ணம் கூடாரம் நாடிக் குதிரையைச் செலுத்தினார். போரில் பங்கு கொள்ள அவர் விரும்பவில்லை. ஒரு பெண்மணிக்கு நேரே வாள் பிடித்துக் களம் நோக்க அவர் விரும்பவில்லையோ என்னவோ?

ரகுநாதன்தான் போர்க்களத்தில் பேயாட்டமிட்டான். எப்படியும் செஞ்சிப் படையை முறியடித்து, யசோதரன் தேவியை உயிருடன் சிறைப்பிடிக்க வேண்டும் என்பது அவனுடைய ஆசை! ஆகவே, வீராவேசம் கொண்டு வாளைச் சுழற்றினான்.

அந்தி சாய்ந்ததும் அன்றையப் போர் முடிந்தது. பெரும்பாலும் செஞ்சிப் படைகளுக்கே சேதம் கண்டிருந்தது. மகாராஷ்டிர வீரர்கள் நாளைப் போர் முகத்தில் வெற்றி விழிகளைத் திறந்துவிடுவோம் என்ற திடமான நம்பிக்கையுடன் எக்காளமிட்டனர். அவர்களுடைய அந்த நம்பிக்கை நிறைந்த எக்காளம் வீண் போகவில்லை.

மறுநாள் போர்க்களத்தில் அந்தி சாய்வதற்குமுன், கோட்டையைப் பற்றி விட்டனர் மகாராஷ்டிர வீரர்கள். கோட்டையைப் பறிகொடுத்த யசோதரன் தேவி, உடலில் ஏற்பட்ட காயங்களில் குருதி வடியச் சிறைப்பட்டாள். அவளைச் சிறைப்பிடித்த தளபதி ரகுநாதன் இலவெறி கலந்த காமச் சிரிப்புடன், 'அழகைச் சிறைப் பிடித்தாக வேண்டும் என்ற முயற்சியால்தான் இந்தப் போர் இரு தினங்களாக நடை பெற்றது. அது தேவையில்லை என்று என்னவிருப்பேனாலும், தேற்றே செஞ்சியின் கதையை முடித்துக் கொண்டு இராயவேலூர் நோக்கிப் பயணப்பட்டு

ருப்போம். தேவி! இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடவில்லை. நீயாக வருவாய், என்று எதிர்பார்த்தேன்; நானாக வரவேற்றுக்கொண்டேன்'' என்று கூறிப் பக்கத்திலிருந்த சிப்பாயிடம் ஏதோ இரகசியமாகச் சொன்னான். அந்தச் சிப்பாயும் தலைக்கு இரண்டு வீரர்களை அழைத்துக்கொண்டு யசோதரன் தேவியை இழுத்துச் சென்றான். அப்போது அந்த இரண்டு வீரர்களில் ஒரு வீரனுக்கு ஏற்பட்ட துடிப்பை என்னவென்று சொல்வது! அவன் தன்னை அடக்கிக் கொண்டவனும் யசோதரன்தேவியை மலங்க மலங்க நோக்கினான்.

வானத்தில் வைரமணிகள் கண் சிமிட்டும் நள்ளிரவில் நிலவு தாண்டவமாடியது. கோட்டையுள் ஒரே பேராரவாரம்.

அரண்மனையுள் சத்ரபதி சிவாஜி ஆலோசனையுடன் கூடிய கவலை நிறைந்த நடை பழகினார். சுற்றிலும் அளவுக்கு மீறிய வெளிச்சம்? ஏன் இத்தனை விளக்குகள்?

சற்றைக்கெல்லாம் அவ்விடத்தை நாடி ரகு நாதன் வந்தான். அவனுக்கு விளங்கவில்லை. வெற்றி கண்ட பிறகு நள்ளிரவு ஆலோசனை ஏன்! ஒருவேளை, தன்னிடம் தனியான நன்றி செலுத்தத் தலைவர் அழைத்து வரச் சொன்னாரோ?

''வணக்கம் பிரபோ!''

''வாருங்கள் ரகுநாதரே! இப்படி அமருங்கள். உங்கள் வெற்றியை நள்ளிரவில் பாராட்ட வேண்டும் என்று ஆசைப் பட்டேன். அதனால்தான் அழைத்து வரச் சொன்னேன்.''

''மெத்த மகிழ்ச்சி பிரபோ!''

சிவாஜி பொருள் நிறைந்த பெருமூச்சொன்றை உதிர்த்தார். ''ரகுநாதரே! அந்தப் பரிதாபத்துக்குரிய கைம்பெண் யசோதரன் தேவி என்னவானாள்?''



ஒரு கணம் ரகுநாதனுடைய முகத்தில் வியப்பு விளையாடியது. ஆயினும் அதனை வெளியாக மறைத்துக் கொண்டு, ''போர்க்களத்தில் மாண்டுவிட்டாள்போல் தெரிகிறது, பிரபோ!,' என்றான்.

''அப்படியா? நீங்கள் கவனிக்கவில்லை?''

''இல்லை ''

''அது குற்றமல்லவா?''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை. எனக்குத் தோன்றியது வெற்றி ஒன்றுதான்!''

''இது உன்னால் கிடைத்தது என்று நினைக்கிறாயா? ஒரு சாதாரணச் சிப்பாய்கூட, சிவாஜியின் படைக்குத் தலைமை தாங்கும் தகுதியுடையவன் என்பதை மறந்துதான் பேசுகிறாயா?''

ரகுநாதனுக்குப் பொறி கலங்கிவிட்டது.

சிவாஜி மேலும் சொன்னார்: ''ரகுநாதா! தோல்வி கண்டு திரும்பும் ஒரு படையின் தளபதியைக் கூட நான் மன்னித்து விடுவேன். ஒரு பெண்ணின் பாவத்தைச் சுமக்குமளவுக்கு அறம் வழுவிய தளபதியை என்னால் மன்னிக்க முடியாது.''

விருட்டென்று எழுந்த சத்திரபதி சிவாஜி நேரே தனி யறை யொன்றுள் நுழைந்தார். சற்றைக்கெல்லாம் யசோதரன் தேவியும், களத்திலே துயர துடிப்புக் கண்ட அந்த வீரனும் வெளிப்பட்டனர். அவர்களைக் கண்ட தளபதி ரகு நாதன் அரண்டு மருண்டு போனான். ''நீயா! நம்பியவனைக் காட்டிக் கொடுக்கலாமா?''

வீரன் விசித்திரமாகச் சிரித்தான்.

மேலும் அரண்டான் ரகுநாதன்.

''ரகுநாதா! நான் யாருக்குக் காட்டிக் கொடுத்தேன்? நீதான் உன்னை எனக்குக் காட்டிக் கொடுத்தாய்!'' என்று

கூறியவண்ணம் சிப்பாயின் புனைவடிவத்தைக் கலைந்து வெளிப்பட்டார் சத்ரபதி சிவாஜி!

அடுத்த கணமே "பிழை பொருத்தருள வேண்டும் பிரபோ! காமுகனாய் - கண்ணிழந்தவனாய்-கசடனாய் நடந்து கொண்டேன்!" என்று கூறிய வண்ணம் அட்டங்கமும் நெட்டங்கமாய் தரையில் படவிழுந்து பணிந்து எழுந்தான் தளபதி ரகுநாதன்.

"அனைத்தும் அறிவேன், ரகுநாதா! அறிந்துதான் இந்த நாடகம் ஆடினேன். இந்துக்கள் தெய்வத்தை வணங்குவதாய்ச் சொல்லும்போது வேடதாரிகளாகி விடுகிறார்கள். உனக்கு இந்தத் தெய்வக் குற்றத்துக்கான தண்டனையை வழங்கப்போகிறேன்!"

"ஏற்கச் சித்தமாக இருக்கிறேன் பிரபோ!"

"நாளைய முதல் நீ எந்த அழகுக்கு அடிமையாக ஆசைப் பட்டாயோ அந்த அழகுக்கே உண்மையான அடிமையாக்குகிறேன். யசோதரன் தேவியின் இந்தப் போர்க்காயங்கள் ஆறும்வரை நீ குற்றேவல் புரிந்து அடிமையாகப் பணி செய்து என் அழைப்புக்குப் பிறகு திரும்ப வேண்டும். இடையில் உன் காமுகச்செயல் தலைதூக்குமானால் - அப்படித் தூக்காமலிருக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன்- ஒரு வேளை நிகழுமானால்... செஞ்சிக் கோட்டையிலே உன்னுடைய தோலுரித்த உடல் தொங்கவிடப்படும்! நீ செய்த குற்றத்துக்கு இந்தக் கழுவாய் மிக எளிதானது!"

சிவாஜியின் கண்கள் யசோதரன் தேவியை நோக்கின. "தாயே! செஞ்சியை உங்களிடமே ஒப்படைக்கிறேன். தில்லிக்கு அடிமையாகவல்ல; என் பார்வையின் கீழ் சுதந்திரமாக ஆள நான் ராயவேலூர் விடுதலை நோக்கி நாளைக்காலை பயணமாகிறேன். விடை கொடு தாயே!"



"அண்ணா!" என்றாள் யசோதரன் தேவி இதயத்தின் அடித்தளத்தில் ஓர் இந்து மகளின் பாசம் சுரக்க. அவளுடைய கரங்கள் கூப்பி நிற்கின்றன. கண்ணிமைகளில் ஆனந்த நீர்த் திவலைகள்!

எதிரே-

கைகட்டி, வாய் புதைத்துத் தலை குனிந்து நின்றான் அழகின் அடிமை ரகுநாதன்.

1968

# அந்தரங்கம்

குடவாசலில் கதிரவன் இறங்கிக் கொண்டிருக்கிறான்; மேகக்கூட்டங்கள் கனகத் திருமுழுக்குச் செய்கின்றன.

தொழுகை முடித்தெழுந்த மாமன்னர் ஔரங்கசீப் மேலைவானைக் கூர்ந்து கவனிக்கிறார். இன்று ஏன் வானத்தில் என்றுமில்லாப் புதுக்கோலம்.

தொலைவில் தபதியாறு மாலை மயக்கம் கண்டு அமைதி நடை பழகிக் கொண்டிருக்கிறது. சிற்றலைகள் மோதி 'களுக்' கென்று சிரிக்கிற போதெல்லாம் ஹீராபாயின் நினைவு எழும். அந்த அடிமைப் பெண்ணை அங்குதானே முதன் முதலில் சந்திக்க நேர்ந்தது?

அவள் சொன்ன அந்தப் பதில்?

இதோ, இதமாகத் தொடுகிறதே இந்தக் காற்றைப் பற்றித்தான் கேட்டார்.

"எட்டிய தொலைவில் விந்திய மலை இருந்தாலும், எட்டாத தூரத்திலிருக்கும் குமரி முனைக் காற்றுக்கே ஒரு தனியான காவிய சுகம் உண்டு."

—ஹீராபாயின் இந்த அனுபவம் நிறைந்த இனிய பதில் சாந்தமாக நின்று காதலை ஈர்த்துவிட்டது. ஒளி நிறைந்த கண்களும், ஒடிந்து மடியில் கட்டிக் கொள்ளுகிற கொ



போன்ற ஒல்லிய உடலும், ஒசிந்த நடையும், துல்லிய முகத்தில் எடுப்பாய்த் துலங்கும் நாசியும், வெள்ளிய முல்லைப் பல்வரிசையும், விவேகம் நிறைந்த நாவும், செவ்விய வாயும், செந்தளிர் மேனியும், அவ்விய மற்ற ஆதுர நெஞ்சமும் ஔரங்கசீப்பைக் கவர்ந்துவிட்டன என்றாலும் ஆச்சரிய மில்லை. ஆனாலும் கேள்விப்பட்டதில் அவள் அடிமைப் பெண்ணாக இருக்கிறாளே!

இருக்கட்டுமே; வங்கக் கடலை நமக்குப் பிடிக்கவில்லை என்பதால் அங்கு தோன்றி, மேற்கில் விழுகிற சூரியனை வெறுத்தா விடுகிறோம்?

"ஔரங்கசீப் உண்மையிலேயே பெரிய மேதை. தர்ம ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் காணுகிற புத்திசாலிகளுக்குத்தான் அவன் புலனாவான்!"

நியாயமான முனகல்.

மேன் மாடத்தை விட்டுக் கீழே இறங்கி வந்தார். எப்படியும் ஹீராபாயை நாளைய உதயத்தின் போது அழைத்துக்கொண்டு புறப்படவேண்டும்.

பதினேழாம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் ஆலம்கீர் ஔரங்கசீப் என்றால், நடுங்காத நாயகரில்லை; பதுங்காத பகைவர்களில்லை; ஒதுங்காத உல்லாசபுரி வாசிகளில்லை. இருபத்து மூன்றாண்டு வட நாட்டு ஆட்சி வாழ்க்கைக்குப் பிறகு நிரந்தரமாகத் தென்னாட்டு வாழ்க்கைக்குத் திரும்பி இருந்தார். காரணம்?

சிம்ம சொப்பனம் போல் முளைத்துவிட்ட சிவாஜி!—சைத்தான்!

—ஔரங்கசீப்பின் மனத்துள்ளிருந்து புறப்படும் சிவாஜி என்ற பெயருக்கான வசை மொழிதான் சைத்தான்!

புர்ஹான்பூரிலிருக்கும் பெரிய தாயாரைக் கண்டு சில நாள் தங்கி, சிந்திக்க வந்த இடத்தில்தான் சித்திரப்பாவை யனைய ஹீராபாயைச் சந்திக்க நேர்ந்துவிட்டது.

"அரண்மனையில் எத்தனையோ அடிமைப்பெண்கள்!" கலீல் உல்லா கவலையுடன் கூறினார். அவருக்கு ஹீராபாயை இழக்கத் துளியும் மனமில்லை. அந்த அரண்மனையிலேயே அவள் ஒருத்திதான் அழகு தேவதை-அறிவுப் பொக்கிஷம்!

"பெரியப்பா! ஔரங்கசீப் மனந்தளவுக் கலைஞன். கலை மக்களைச் சோம்பேறிகளாக்கி விடுகிறது என்பதனால் புறத்தளவில் வெறுக்கிறான். ஹீராபாய் ஆயிரம் அடிமைப் பெண்களுள் ஒருத்தியானாலும் ஆயிரமாயிரம் நட்சத்திரங்களுள் ஒரு நிலவு. பெரியப்பா! நான் ஷாஜஹானின் மகன்; அழகுக்குக் கோயில் கண்டவனுடைய குமாரன். ஏன்! அழகின் குமாரன். ஹீராபாயின் அறிவு என்னைக் கவர்ந்துவிட்டது!"-திட்டவட்டமாகக் கூறினார் ஔரங்கசீப். ஆயினும் புர்ஹான்பூர் சிற்றரசர் கலீல் உல்லாவுக்கு மனம் நிறைவு காணவில்லை. அந்தக் கிழவரால் ஹீராபாயை இழக்க முடியவில்லை. ஆனால், அரசி...அதாவது ஔரங்கசீப்பின் பெரியம்மா...

ஔரங்கசீப்பின் பகையைச் சம்பாதிக்கவேண்டாம், என்று எடுத்துச் சொன்னதன் பேரில் கிழவர் வாய்மூடி மௌனம் சாதிக்க நேர்ந்துவிட்டது. கண்களில் மட்டும் நீர் சொட்டுச் சொட்டாக இறங்கியது.

"ஹுஜூர்! ஏன் அழ வேண்டும்?" அனைவரும் சென்றுவிட்டபிறகு அங்கே வந்தாள் ஹீராபாய்.

சுற்றுமுற்றும் நோக்கினார், கிழச்சிற்றரசர் கலீல்உல்லா. "ஹீரா! ஔரங்கசீப் உன்னை விடமாட்டான் போலிருக்கிறது!"

"நீங்கள் ஒப்புக்கொண்டீர்களா?"

"சத்ரபதி சிவாஜியின் சிம்ம சொப்பனமாக விளங்குகிற ஆலம்கீர் ஔரங்கசீப் முன்னே நான் எம்மாத்திரம்!"

"எனக்குப் பயமாக இருக்கிறது."

"பயப்பட அவசியமே இல்லை; அவன் மிகவும் நல்லவன்!"



"எதை வைத்து?"

"அவன் ஒரு குரான் மனிதன்!"

"நீங்களும்தானே ஓதுகிறீர்கள்?"

"ஓதுவதுபடி நிற்பவன்; நின்றபடி வாழ்வையும், அதனுள் அடங்கும் அவனுடைய ஆட்சியையும் செப்பனிட விரும்புகிறவன்."

"பூ...இவ்வளவுதானா?"

"ஹீரா! அவன் மது அருந்தாதவன் இது ஒன்று போதுமே!"

"போதும்."

ஹீராபாய் பெருத்த சிந்தனையுடன் அந்த இடத்தை விட்டகன்றாள்.

இரவு அந்த அரண்மனையில் ஒளிய இடமில்லாமல் தவியாய்த் தவித்தது. அந்த அளவுக்கு வெளிச்சம் கரை புரண்டது. முகலாய ஆட்சியின் லந்தர் விளக்குகளின் ஒளிக் கோலத்தைப் பற்றி இன்றைக்கெல்லாம் வருணிக்கலாமே!

நடுமாடத்து நிலா முற்றத்தில் ஔரங்கசீப் அமர்ந்து கொண்டிருந்தார். அவர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது பேரழகி ஹீராபாயை!

சற்றைக்கெல்லாம் காற்சதங்கை கலீரிட நடந்துவந்தாள் ஹீராபாய். அவளுக்கு மட்டும் ஔரங்கசீப்பின் அழைப்புக் கிடைத்ததில் ஆனந்தம் இல்லாமல் போனது என்ன? முகலாய சாம்ராஜ்யத்தின் ஒளிவிளக்கு, நிழல் தேடி வருகிறது என்றால் எந்தப் பெண்தான் மறுப்பாள்?

அதுவும் ஹீராபாய் கேவலம் அடிமைப் பெண்! ஆனாலும் ஏதோ ஒன்று அவளுள் முள்ளிரித்துக் கொண்டிருந்தது. அந்த அந்தரங்கத்தை யாரறிவார்?

பொற்சிலைபோல் எதிரே வந்து நின்ற ஹிராபாயைக் கண்கொள்ளுமட்டும் கவனித்துக் கொண்டார் ஔரங்கசீப்; "ஹிராபாய், இப்படி என் எதிரே தைரியமாக உட்கார்!"

"பரவாயில்லை."

"அதனாலென்ன; இக்கண முதல் அடிமைப் பெண் அல்ல; ஆலம்கிரின் அந்தரங்கக் காதலி."

"பெருமையடைகிறேன்."

"ஹிராபாய்! என்னை உனக்குப் பிடிக்கிறதல்லவா?"

"இல்லை."

அரண்டு மருண்டு அண்ணாந்து கவனித்தார் ஔரங்கசீப்: "இல்லையா?"

"பாதுஷா! சொல்கிறேனே என்று கோபித்துக் கொள்ளக் கூடாது."

"சொல், சுகுமாரி!"

"நீங்கள் மதுவிற்குரியவர்; நான் மதனுக்குரியவள்!"

"மன்மதனைப் பற்றி எனக்குத் தெரியாது; வேண்டுமானால், அவனை எனக்குச் சீடனாக அனுப்பி வை. நான் அவனுக்குச் சிலவற்றைக் கற்றுக் கொடுப்பேன்."

"அவனுக்கு நீங்கள் என்ன கற்றுக்கொடுப்பீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் உங்களுக்கு ஒன்றைக் கற்றுக் கொடுப்பேன்."

"என்ன?"

"என்னைப் பொறுத்தவரை மதுதான் மன்மதன்."

"எனக்கு அது சைத்தான்."

"அதனால்தான் உங்களை எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னேன்."

"ஹிரா!"



"ஆலம்கீர்! இப்படி அழைப்பதற்காக என்னை மன்னியுங்கள். நான் இளமையை ஆவேச உணர்வோடு அனுபவிக்க வேண்டும் என்று கற்பனை செய்து வருகிறவள். நீங்களோ பெரிய பக்திமான். பொருத்தமில்லை."

"நீ என்ன சொல்லுகிறாய்?"

"ஆலம்கீர்! நீங்கள் நெஞ்சுவரை மதுவை அருந்துங்கள். அந்த நெஞ்சில் என் இதயத்தைப் புதைப்பேன்."

"ஹிரா! மொழி என் இரண்டாவது பகைவன்; ஆனால் மதுதான் என் முதல் பகைவன்!"

"தவறு; மதுவை முதல் நண்பனாகப் பெறுங்கள். மொழியின் பகையை எளிதில் வென்றுவிடலாம்."

"அது எப்படி?"

"என்னையே வென்று விடுகிறீர்களே!"

"நீ அடிமைப் பெண்!"

"பெண்தான் அடிமை; அழகு உங்களை அடிமையாக்கி விட்டதல்லவா?"

"அறிவை மெச்சுகிறேன்."

"அது வெளிப்பட்டால் ஒன்று நீங்கள் ஞானியாகிவிடுவீர்கள்; அல்லது நான் பிணமாகி விடுவேன்."

"நீ என்ன சொல்கிறாய்?"

"இனிமேல்தானே சொல்லப் போகிறேன்."

"நான் மதுவை அருந்தித்தான் ஆகவேண்டுமா?"

"நான் கட்டாயப்படுத்தவில்லையே? நான் தேவைப் படத்தான் வேண்டும் என்றால், நீங்கள் ஒரு கோப்பை மதுவை அருந்தித்தான் தீரவேண்டும்."

"பிடிவாதம்!"

"பலாத்காரத்தால் என்னை உங்களால் அவ்வளவு எளிதில் அடைந்துவிட முடியாது."

"பயமுறுத்துகிறாய்!"

"நான் ஔரங்கசீப்பல்ல!"

ஔரங்கசீப் இந்தப் பதிலைக் கேட்டுக் கடகடவென்று நகைத்தார். பிறகு சில கணங்கள் சிந்தனையில் ஆழ்ந்தார். கூடத்தின் ஒரு மூலையில் ஜாடி நிறைய இருந்த மது, அவருடைய கண்களில் பட்டது.

கோப்பையை எடுத்து மதுவை நிரப்பினார் ஔரங்கசீப். அந்த வெகுட்டலான நெடி குடலைக் குமட்டியது.

மதுக் கோப்பையை கையில் ஏந்திய வண்ணம் ஹீராபாயின் அருகேவந்தார். "ஹீரா! உன் அழகுக்காகவும், அறிவுக்காகவும் மதுவென்ன, என் பிறவிப் பகைவன் சிவாஜியிடம் அடிமையாகவும் சித்தமாயிருக்கிறேன். உன்னை அடைவதில்தான் பொன்னுலகம் இருப்பதாக உணர்கிறேன்."

கோப்பையைப் பரபரப்புடன் வாய் அருகே கொண்டு சென்ற தருவாயில்—

வேகமாக அருகே வந்த ஹீராபாய் வெறி கொண்ட பெண்ணரசிபோலத் தாவித் தட்டிவிட்டாள். கீழே விழுந்த கோப்பை உடைந்து சிதறியது. மது தரையில் சிந்தி நாற்றத்தை எழுப்பியது.

"ஏன் தடுத்தாய்?"—ஔரங்கசீப் கடுமையான பார்வையுடன் கேட்டார்.

"மன்னிக்கவேண்டும் பிரபோ! நான் உங்கள் அடிமை. எனக்காகத் தாங்கள் எதையும் செய்யத் துணிந்ததை எண்ணிப் பெருமையடைகிறேன். கேவலம் என்னுடைய உணர்ச்சிகளுக்காக, இதுவரை தாங்கள் காத்த விரதத்தைக் கைவிடுவதா? இதோ நான் இருக்கிறேன்."



ஹீராபாயின் இந்தப் பதிலைக் கேட்டுப் பெரிதாகச் சிரித்தார் ஔரங்கசீப்!

"பேதைப் பெண்ணே! உனக்காக நான் என் விரதத்தைக் கெடுத்துக்கொள்வேனா என்ன? நீ எப்படி இருக்கிறாய் என்று சோதித்துப் பார்த்தேன். நீ தட்டிவிடவில்லை என்றாலும் நான் குடித்திருக்க மாட்டேன், ஒன்றை மட்டும் உறுதியாக நினைத்துப் பார்த்தேன். உன்னை ஓர் அழகி என்பதனால் நான் நேசிக்கவில்லை. ஓர் அறிவாளி என்பதனால் நேசித்தேன். என்னைக் குடிக்கவிட்டு நீ வேடிக்கை பார்த்திருப்பாயேயானால், உன்னைவிட படுமுட்டாள் வேறு யாருமல்ல என்ற முடிவுக்கு வந்திருப்பேன். நீ புத்திசாலி. சிவாஜியை எப்படி வெற்றிகொள்வது என்பது பற்றிச் சிந்திக்கவந்த இடத்தில் உன்னைக் கண்டேன். வெற்றி கொண்டேன்."

"பகதூர்ஷா! இது ஒரு வெற்றியாகாது. சத்ரபதி சிவாஜியை நீங்கள் வெற்றி காண்பதுதான் சரித்திர வெற்றி. அதற்கு ஒரே ஒரு வழியிருக்கிறது."

"என்ன?"

"வீர சிவாஜி மகா ஒழுக்கசீலர்! வைரத்தை வைரத்தால்தான் வெட்டமுடியும்! ஓர் ஒழுக்கசீலரை இன்னொரு ஒழுக்க சீலரால்தான் நியாயமான வெற்றி கொள்ள முடியும்."

"ஓகோ! இப்போது நீ கூறப்போவது...!"

"பெண் குலத்தைத் தாய்க் குலமாக மதிப்பது இந்நாடு; சிவாஜி அந்தப் பண்பால் மக்களைக் கவர்ந்து வருகிறார்; நீங்களும்—"

"ஓ......புரிகிறது ஹீராபாய்; புரிந்துவிட்டது! நீ என் அந்தரங்க காதலியாக இருக்கவேண்டும் என்பதல்ல; அந்தரங்க ஆலோசகியாக இருக்கலாம் அல்லவா?"

ஹீராபாய் தன் அந்தரங்க வெற்றியை மனத்தில் வாழ்த்திக்கொண்டவளாய் தலைவணங்கினாள். அவளுடைய உதடுகள் சங்கீதமாய் இசைத்தன.

"வாழ்க, அபுல்முஸாபர் முஹையுதீன் முகமது ஒளரங்கசீப் பகதூர் ஆலம்கீர் பாதுஷா காஸி!"

அம்மம்மா; எத்தனை நீண்ட பெயர்! ஒளரங்கசீப்பின் சரித்திரமே நீண்டதுதானே?

1971

# குருவின் ஆணை

செந்தூரச் சிரிப்புடன் வந்தூர்ந்து வையத்தின் ஒரு பாதியை வெண் ஒளியால் குளிப்பாட்டிய செங்கதிரோன், மறு பாதியில் செயலாற்ற மாலைப் போதை மாலையாக அணிந்து மறைந்து கொண்டிருந்தான்.

தக்கணத்தின் அப்போதைய தனிப் பெரும் அரண்மனை, விளக்குக் கோலம் பூண்டு விளங்கத் தொடங்கியது. காவற்காரர்கள் தத்தம் பணியில் கவனம் செலுத்தத் தொடங்கினர். சாதவாகன மரபின் உதயரேகை படர்ந்த கல்விக் காலமாயிற்றே அது. அந்தப் புதிய காலத்தின் அரசனாக உதயமான சதகர்ணி, அகால மரணமடைந்துவிட்டது பேரிழப்பாக இருந்தது. அது முதலே அரசி நாகனிகை செங்கோலோச்சி வந்தாள். அவளுக்குத்தான் எத்தனை எத்தனை வேலைகள். இருக்காதா? பெற்றெடுத்த பிள்ளைகள் இருவரைப் பேணி வளர்க்க எத்தனை ஆண்டுகள் எவ்வளவு துன்பங்களை மேற்கொண்டிருப்பாள்? வேதஸ்ரீயும், சக்திஸ்ரீயும் தக்க வயதையும் அடைந்துவிட்டனர். மூத்தவனான வேதஸ்ரீக்குப் பட்டத்தைக் கட்ட வேண்டியதுதான் பாக்கி. ஆனால் அவனோ...

என்ன சொல்ல? எதைச் சொல்ல?

ஆசையாகவும், அருமையாகவும் பெற்றெடுத்த இரு குமாரர்களையும் இரு கண்மணிகளாகவே பாவித்துப் பெயரிட்டுப் பாதுகாத்து வளர்த்துவிட்டான். பெரியவனை வேதத்திலும், தத்துவத்திலும் உயர்ந்தோனாக்கவும், சிறியவனைச் சகல சக்திகளுக்கும் உரியவனாக்கவும் பெயரிட்டு, பெருமுயற்சியில் ஈடுபட்டான். பட்டபாடு வீண் போகவில்லை. ஆனால் கெட்ட கேடுதான் கேட்பதற்கே நாணமாக இருந்தது.

வேதஸ்ரீ, வேத தத்துவங்களை உணர்ந்து அமைதிக்கு அடிகோலாமல், புயலுக்கு புனையல் சூட்டினான். ஆனால் சக்திகளைப் பெற்ற மாவீரன் சக்திஸ்ரீயோ, புயலைப் புறக்கணித்து அமைதிக்கு ஆலவட்டம் வீசினான். இந்த ஏறுமாறான நிலை அந்தத் தாயுள்ளத்தைக் குளவியாக நின்று கொட்டியது. வேதஸ்ரீ பட்டத்துக்குரியவனாயிற்றே! இப்பேர்ப்பட்டவன், கொட்டத்தின் குரங்காக மாறி, அழகான பெண்களைக் கண்டுவிட்டால் பூமாலையாகப் பிய்த்தெறியும் பித்தனாக அலைகிறானே!

புலிவடிவாய் அமைந்த அந்த ஆசனத்தில் சிந்தனையே தவமாகக் கொண்டு அமர்ந்திருந்த அரசி நாகனிகையை, அவைக்குரவர் பிரம்மகோஷருடைய பாதக் குறடு விழிக்கச் செய்தது.

"வாருங்கள், சுவாமி!"

அரசி இன்முகமாக இல்லாவிட்டாலும், இன் சொல்லால், வரவேற்றாள்.

"நாகனிகை! நீ வீணில் உன்னை நீயே அழித்துக்கொள்ளப் பார்க்கிறாய். எப்போதும் வேதஸ்ரீ பற்றிய கவலையிலேயே மூழ்கி இருந்தால் அரசகாரியங்களைக் கவனிப்பது எப்படி? நம்முடைய பலவீனத்தைத் தெரிந்து கொண்டே சகர் மரபினர் எப்போது நேரம் வாய்க்கும் என்று காத்துக் கொண்டிருக்கின்றனர்."



அவைக்குரவர் அமைதியாக இப்படிச் சொன்னாலும் இதயத்துள்ளே வேதஸ்ரீ பற்றிய நடத்தை கொந்தளிப்பை எழுப்பிக் கொண்டுதானிருந்தது.

"எனக்கென்னமோ, வேதஸ்ரீ உருப்படுவான் என்று தோன்றவில்லை. பட்டத்துக்குரியவன் அவன்தானே!" என்றாள் நாகனிகை.

"உண்மைதான். அவன்தான் தட்டுக் கெட்டுத் திரிகிறானே? இளையவனான சக்திஸ்ரீக்குப் பட்டம் கட்டிவிடுவது சிலாக்கியமாக எனக்குப் படுகிறது. அவனுடைய சக்தியால்தான் சகரை அடக்க முடியும்!"

அரசி நாகனிகை வெறுப்பார்ந்த புன்னகை பூத்தாள்.

"சுவாமி, சின்னவனுக்குப் பட்டத்தைக் கட்டிவிட்டால் எந்தக் கணத்திலும் அவனை வேதஸ்ரீ கொன்றுவிடுவான்!"

"இதுவும் சிந்திக்க வேண்டிய ஒன்றுதான்."

"எனக்குப் புரிகிறது."

"என்ன புரிகிறது? சொல் நாகனிகை..."

"நீங்கள்தானே அவனுக்கு ஆசான்?"

"ஆமாம்."

"திருத்தி ஆட்கொள்ள முயலுங்கள். இல்லையென்றால் கொன்றுவிடுங்கள்! இதற்குமேல் புரிவதற்கு ஒன்றுமே இல்லை!"

அவைக்குரவர் பிரம்மகோஷர் அரண்டு மருண்டு அரசி நாகனிகையை ஆச்சரியத்தோடு நோக்கினார்.

வேதஸ்ரீயின் விஷயத்தில் விடிவெள்ளி என்றைக்கு முளைக்குமோ, அரியணையில் என்றைக்கு உதயசூரியன் போல் அமர்ந்து அவன் ஒளிப் பரப்புவானோ என்று

தக்காணத்து மக்கள் தனியாய்த் தவித்து எதிர் பார்த்தனர். தெற்கே சேர சோழ பாண்டியர்களைப் பற்றிய கவலை அம்மக்களுக்கு என்றுமே இருந்ததில்லை. அமைதியான மன்னர்கள் அவர்கள். தங்களை மீறியாரவர்களை அவர்கள் என்றுமே பகைத்ததாக ளவர். எனவே அவர்களுடைய கவலைகளெல்லாம் வடக்கே முரட்டு மிலேச்சர்களான சகர்களைப் பற்றிய பயத்திலேயே இருந்து வந்தது. இந்நிலையில் பெண்ணொருத்தி ஆட்சியாக வேறு தக்காணமிருந்து வந்தது. தலையெடுத்த சாதவாகன மரபு நிலைகுலைந்து போகுமோ என்று குலைநடுங்கிக் குமுறினர். பட்டத்துக்குரிய வேதஸ்ரீதான் பாலைனொருவனாக இருக்கிறானே!

அப்போதுங்கூட வேதஸ்ரீ விலை மாதர் வீதியில் இளமையை விலை பேசிக்கொண்டிருந்தான். அவனைத் திருத்தித் தடுத்தாட்கொள்ள அந்த ஆண்டவனாலும் முடியுமோ முடியாதோ என்று அலுத்துக் கொண்டனர் சில மதிநிறைந்த பெரியவர்கள்.

வைகறைப்போது, இதமான மெல்லொளி பரப்பிக் குளிர் செய்துகொண்டிருந்தது. இளமைக்கு வலிமை தந்து முறைமைக்கு அரண்மனையை நாடிப் புறப்பட்டான் வேதஸ்ரீ. அவனுடன் ஆத்ம நண்பனாக இருந்த வஜ்ஜிர பாகுவும் தன்னுடைய குதிரையை அவிழ்த்துக்கொண்டு புறப்பட்டான். இளவரசன் வேதஸ்ரீ கெட்டதற்கே வஜ்ஜிர பாகுதான் காரணம் என்று பலர் நினைத்தாலும், அரசமாதா நாகனிகை மட்டும் அவ்வாறு நினைக்கவில்லை. தம்முடைய புதல்வனை ஏவும் ஒரு குற்றேவல் கணையாகவே வஜ்ஜிர பாகுவை மதித்தாள். உண்மையும் அதுதான்.

குதிரைகளை அவிழ்த்துக்கொண்டு இருவரும் சற்றுத் தூரம் வரை கால்நடையாக நடந்துவந்தனர்.



ஏதையோ கவனித்துத் திடுக்கிட்டவன் போல வஜ்ஜிர பாகு கேட்டான், "இளவரசே, கழுத்திலிருந்த நவரத்தினக் கண்டிகை எங்கே?"

வேதஸ்ரீ புன்னகையுடன், "இரவு அந்த விழியழகி விலாஸவதிக்கு அன்புப் பரிசாகக் கொடுத்துவிட்டேன்" என்றான்.

திடுக்கிட்டான் வஜ்ஜிரபாகு "இளவரசே! இப்படிச் செய்வது கூடாத ஒன்று. அது உங்கள் அன்னை அன்பாக அணிவித்த மாலை. அதனைக் கொடுக்கலாமா? எத்தனை விலையுயர்ந்தது?"

வேதஸ்ரீ கடகடவென்று சிறப்பிலாத சிரிப்பை உதிர்த்தான். "முட்டாளே! இந்த நவரத்தினக் கண்டிகைக்கு எப்படியும் ஒரு விலையுண்டு; ஆனால் விலாசவதியின் இளமைக்கு விலையே கிடையாது. அவள் நடந்துகொண்டவிதமிருக்கிறதே அந்த அன்புக்குப் பரிசே கிடையாது. இந்நிக்கும் அவளுடைய திருமேனிக்கு இந்தத் தக்காணத்தைத் தாரை வார்த்தாலும் போதாதே."

வஜ்ஜிரபாகு வாயை மூடிக்கொண்டான். பேச என்ன இருக்கிறது?

இருவரும் கொஞ்சதூரம் நடந்து சென்று பிறகு, குதிரைகளில் ஏறிக்கொண்டு விரையத் தொடங்கினர்.

சோலையாற்றின் கிளை நதியாகப் பிரிந்து தன்னிய நடைபயின்று சலசலத்துக் கொண்டிருந்த அந்தச் சிற்றாற்றின் கரையில் பல பெண்கள் நீராடுவதும், நீர்மொண்டு செல்வதுமாக இருந்தனர். எப்போதும் வேதஸ்ரீ அந்தக் காட்சியைத் துய்ப்பது வழக்கம். அவர்களுள் தன கண்களுக்குக் கட்டழகியாக விளங்குபவளை எப்படியும் சிறையெடுத்து விடுவான்.

சிறோடு அலைபாயும் நதியில் நீராடும் நீள்விழியாள்களுள் ஒருத்தியாக நீந்தி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாள்

நீலாயதாட்சி. அவளுடைய இளமை கொழிக்கும் தேனுடல் மீது வேதஸ்ரீயின் நெருப்புக் கண்கள் மொய்த்துவிட்டன. நெடுமூச்செறிந்த இதயமோ நெறிபிறழ்ந்து வெறிசுழித்துத் தறிகெட்டது.

"வஜ்ஜிரபாகு!" என்று ஓசை நீள அமைத்துச் சப்புக்கொட்டிக் கொண்டான். வஜ்ஜிரபாகுவுக்குப் புரிந்துவிட்டது.

"இன்றைய என் விருந்துக்கு அவள் எப்படியும் பரிமாற வேண்டும். உடனே கவனித்து ஏற்பாடு செய்."

இளவரசன் வேதஸ்ரீ, குதிரையைச் செலுத்திக்கொண்டு அரண்மனைக்குப் போய்விட்டான்.

அரண்மனையடைந்ததும் பொங்கு புனலாடி, புதிய ஆடையுடுத்திப் புத்துணர்வுக்கு மதுமாந்தி, நடுமாடக் கூடத்துச் சித்திரவறையான தன்னறை நாடிச் சென்றான் வேதஸ்ரீ. அப்படி அவன் செல்வதை அன்னை நாகனிகை கவனிக்கத்தான் செய்தாள். அவனிடம் சென்று பேசவோ, அழைத்துக் கண்டிக்கவோ அருவருப்பாக இருந்தது எத்தனையோ முறை இப்படிப் பேசிக் கண்டித்தாய்விட்டது; மயிரிழையையும் நேராக்கலாம்; அவனுடைய மனத்திழையை நேராக்கவே முடியாது.

அரசி நாகனிகை உண்டு முடித்து மனவேதனையுடன் மஞ்சத்தில் சாய்ந்தாள். அப்போது அரக்கப் பரக்க ஓடோடி வந்தார், அவைக் குரவர் பிரம்மகோஷர். "நாகனிகை, வந்தது மோசம். பெரிய மோசம்."

அதிர்ச்சியுடன் மஞ்சத்தை விட்டெழுந்த நாகனிகை, "என்ன குருசுவாமி! என்ன மோசம் வந்துவிட்டது?" என்றாள்.

"வேதஸ்ரீ, நீலாயதாட்சியைச் சிறையெடுக்கத் துணிந்துவிட்டான்."



"அப்படியா? அவள் எப்படி அவனுடைய கண்களில் பட்டுவிட்டாள்? அப்படிப் படக்கூடாது என்றுதானே தனிமையில் அவளை வாசம் செய்ய விட்டோம்! அரண்மனை வசதியிருந்தும், பாவம், அவளை ஒரு சாதாரணக் குடி மகளைப் போல் வாழ விட்டோமே! அப்படியும் பட்டுவிட்டாளா?"

"ஆம், நாகனிகை!"

"உங்களுக்கு இது நிச்சயமாகத் தெரியுமா?"

"தெரிந்துதான் ஓடிவந்தேன். வஜ்ஜிரபாகு நீலாயதாட்சியைப்பற்றி அறிய முனைந்திருக்கிறான். அப்படி முனைந்தபோது அவள் என்னுடைய மகள் என்று தெரிய வந்திருக்கிறது. உடனே வஜ்ஜிரபாகு பயந்து ஓடிவந்து என்னிடம் உண்மையைச் சொல்லிவிட்டான்!"

"அப்படியா?"

நாகனிகை வேகமாக விரைந்து சென்று சித்திரவறையினுள் நுழைந்தாள். அங்கே வேதஸ்ரீயைக் காணோம். சற்று முன்புதான் அவன் வெளியே புறப்பட்டுச் சென்றான்.

"குருஸ்வாமி! அவன் வெளியே சென்றுவிட்டான்!"

"இப்போது என்ன செய்வது, நாகனிகை?"

"நீலாயதாட்சியை உடனடியாக அழைத்து வந்து என்னிடம் சேர்த்து விடுங்கள்!"

"அப்போதுமட்டும்?" பிரம்மகோஷர் ஏளனமாகச் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள் சுவாமி?"

"நாகனிகை! ஒரு நாள் காக்கமுடியும். இல்லை, ஒரு திங்கள் காக்க முடியும். ஆனால், பலநாளும் காக்க முடியுமா? ருசி கண்ட பூனை ஒரு நாளைக்கு இல்லாவிட்டாலும் மறு நாளைக்குப் பாலுறியை உருட்டித்தான் தீரும்!"

"அந்நாளா! என்ன முடிவு? நீங்களே சொல்லுங்கள்!"

"சொல்லுகிறேன், நாகவல்லி! கேள். எனக்கு ஒரு மகள் பெரிதல்ல! இந்த நாட்டுக்கு ஓர் அரசன் பெரிது! நாட்டுக்காக அவளையே நான் செய்யப்போகிறேன்!"

"புரியவில்லையே குருநாதா!"

"அன்று நீ என்னிடம் ஒரு முடிவைச் சொன்னாய். நினைவிருக்கிறதா?"

"இருக்கிறது!"

"அதுதான் முடிவு! நான் நிறுத்த வேண்டியதில்லை; என் மகளை நிறுத்தட்டும். குருவின் மகள் என்பதைச் சந்தர்ப்பம் நோக்கிப் புரியச் செய்ய வேண்டும். அப்படியும் ஞானம் பெறுமல் அவன் பெண்டாளச் சென்றானேயானும் அவனுடைய ரத்தத்தாலேயே அவனுடைய வாழ்வை முடித்து விடத் தீர்மானித்துவிட்டேன். என் பெண்ணும் ஏனைய பெண்களுடைய வாழ்வு நிலைப்பதோடல்லாமல், இந்தச் சாதுவான மரபு, ஆட்சியும் நிலை பெறட்டும்!"

ஆவேசம் கொண்டவர் போலக் கூறி நிறுத்தினார் அவைக் குரவர் பிரம்மகோஷர். அவர் நாகவல்லியும் எதுவும் மறுத்துப் பேசவில்லை. குருதேவரின் திட்டம் அவளுக்கும் நியாயமாகவே தெரிந்தது. பாசம் பெரிதல்ல; நாடுதான் பெரிது!

விண்ணிலே நட்சத்திரங்கள் பயிராயின. அந்தரங்க காவல் காத்துக் கலை எறியும் பெண்போல நிலவுநீ ஆட்சி செய்து கொண்டிருந்தாள்.

நீலாயதாட்சியின் இல்ல வாசல் கதவுகள் திறந்தன. முத்துப் பல்லாய் திறந்தது. லேசான புன்னகை "வாருங்கள்!" என்று இளவரசனுக்கு அழைப்பு விடுத்தது. நீலாயதாட்சியை ஆவலோடு நோக்கினான் வேந்தன்.



கதவும் தாளிடப்பட்டன; காலம் முடிந்தது. புன்னகை புதைந்தது.

"உன் பெயரென்ன, பெண்ணே?"

"நீலாயதாட்சி."

"நீதிநிறைக்கும் கனமான பெயர்."

"அப்படியா?"

"ம்..."

"நீலாயதாட்சி, வா, இப்படி உட்கார்."

"பொறுங்கள், பால் கொண்டு வருகிறேன்."

நீலாயதாட்சி எழுந்து சென்றும், அவளுடைய பின்னழகைக் கண்டு ஆனந்தித்த வேந்தனின் கண்கள், மெல்ல திரும்பி அறையை நோட்டம் விட்டன.

கண்கள் ஏன் நிலைசெற்று அலைகின்றன?

சுவரில் ஓர் நிலைக்கண்ணாடி மாட்டப் பெற்றிருந்தது. அது ஒரு கலையுடையதாயிற்று! சுவரில் குருவாகப் பிரம்மகோஷரின் படம் மாட்டப்பட்டிருந்தது. இவருடைய சித்திரம் இங்கு எப்படி வந்தது?

தன்னுடைய போலவே கமகமத்த பால் கொண்டுவந்த நீலாயதாட்சியை அன்போடு வினவினான் வேந்தன்.

"நீலாயதாட்சி, இந்தப் படம் இங்கு ஏன் இடம் பெற்றிருக்கிறது?"

"ஏன்? உங்கள் குருவின் படம் அல்லவா?"

"ஆமாம்."

"என் தந்தையும் அவர்தான்."

மனக்குறும்பின் எல்லையைக் கண்டு தெரிந்த அவளுடைய கண்ணாடியில் பளீர் பளீர் என்று அறைவதுபோல்

இருந்தது. இச்சை இத்தனை நாட்களாக அவனைக் காமப் பிச்சையெடுக்கச் செய்திருந்தாலும், படித்த அறிவு இப்போது அவனை மடித்து நிறுத்தியது. என்ன இருந்தாலும் குரு புதல்வி அல்லவா?

'உண்மையில் அவள் எனக்கு உட்பட்டு குருவின் பெயரைக் கெடுப்பதானால், கொலை செய்துவிட்டு மரண தண்டனையேனும் ஏற்பேன்! எனக்குக் களங்கம் ஏற்படுவதைப்பற்றிக் கவலையில்லை; என் குரு நாதருக்கு அது ஏற்படக் கூடாது!'

"என்ன சிந்திக்கிறீர்கள்?"

"எனக்கு இணங்குவது பாவம் என்று உனக்குப்படவில்லை?"

"இல்லை!"

எத்தனையோ பெண்களின் கற்பைச் சூறையாடிய வேதஸ்ரீ முதல் தடவையாக வெருண்டான், பெண்ணினத்தின் மேல். குருவின் புதல்வி கேவலம் இப்படி அயலான் இன்பத்துக்கு உடனே பணிபவளா?

அவனுள் ஒரு முடிவு அரும்பியது.

"நிலாயதாட்சி! நேரமாகிறது! வா, மஞ்சம் வீணில் உறங்குகிறது. அதனை விழிக்கச் செய்வோம்!"

வேதஸ்ரீ தன்னுடைய இடக் கரத்தால் நளினமான நிலாயதாட்சியின் இடையைப் பற்றி, முகத்தை அருகே கொண்டுபோய் இதழமுதம் பருகுபவன் போல் பாவனை செய்தான். ஆனால் அவனுடைய பெண்ணிச்சைப் பலவீனம் முன்னம் எண்ணியதைக் கடுகளவு மறக்கச்செய்துவிட்டது. அதன் காரணமாக வலக்கரம் உருவத் துடித்த கட்டாரியை உருவவில்லை. சோதிப்பதன் மூலம் அவளைத் தீர்த்துக்கட்டி விடுவதென்றே முடிவு செய்திருந்தான். ஆனால், ஆண்டு அனுபவித்த அவனுடைய பலவீனம் கடுகத்தனை வென்று



விட்டது. அந்தக் கடுகத்தனை நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நிலாயதாட்சி தன்னுடைய கட்டாரியை எடுத்து இளவரசனுடைய மார்பில் ஆழச் செருகிவிட்டாள்.

பதறித் துடித்தான். குருதி குபுகுபுத்தது. "ஐயோ! நிலாயதாட்சி என்னைப்புரிந்துகொள்ளாமல் இப்படிச் செய்துவிட்டாயே? நான் உன்னைச் சோதித்துக் கொல்ல நினைத்தேன் குரு புதல்வி! ஆனால், என் பலவீனம் என்னைப் பழி வாங்கிவிட்டது. ஆயினும், நான் உன்னைப் பெண்டாளச் சத்தியமாக நினைக்கவில்லை. பரவாயில்லை. இந்தப் பாவி என்றாவது ஒருநாள் இப்படிச் சாகப் போகிறவன்தான். ஆனால் இன்று ஒரு கற்பரசி, அதுவும் என் குருபுதல்வியின் கையால் சாக நேரிட்டது பெரும் பாக்கியம்."

நிலாயதாட்சி விம்மிவிம்மியழுதாள். வேதஸ்ரீயின் தலை சாய்ந்தது.

1964.

# முதலும் வட்டியும்

பீரங்கிகளின் கர்ஜனைத் துடிப்போடு விளையாடிய மாவீரன் நெப்போலியன், மார்பகத்தே கையளவே நின்று துடிக்கும் இதயத்தோடும் விளையாடியவன். இல்லையென்றால் வாழ்வின் முடிப்புக்களைக் கணக்கெடுத்து வரையறுத்து இருக்க முடியாதே!

கார்சிக்கா தீவில் பிறந்ததிலிருந்து கனல் கக்கும் புரட்சிக்கிடையே கைப்பற்றிய பிரான்சு நாட்டுத் தலைவனாவது வரை அவனுடைய வாழ்வில் எத்தனை சுவை மிக்க கதைகள்; எத்தனை எத்தனை சுடர் விட்ட நிகழ்ச்சிகள்! அத்தனைக்கும் ஒளிச் சரமாய் அமைந்துவிட்டாளே அந்தக் கிழவி.

அன்னை லதீதாரா மோலினியிடம் காணாத அன்பு-அரவணைப்பு-என், படிப்பினை, ஒரு சாதாரணக் கிழவியிடம் கண்டுவிட்ட மன நிறைவு...

ஓ...!

பரிவாரங்களுடன், நிறைந்த நெஞ்சோடு பாரிஸ் நகரை நோக்கிப் பயணமாகிக் கொண்டிருந்தான்.



வாடர்லூ போரில் அவமருந்த அவனது நெஞ்சு, இன்று தான் ஆறுதலடைந்தது போன்ற ஒரு நிறைவு...

பிரெய்ன் நகரை நோக்கிச் சென்றபோது புரிந்து கொள்ளாது தவித்த பரிவார நெஞ்சங்களில் திரும்பும் போது ஆழப் பதிந்துவிட்டான் நெப்போலியன். இவன் சரித்திரத்துக்கு உரியவன்தான்!

இதே பரிவாரங்கள் பிரெய்ன் நகர் நோக்கிச் செல்லும் போது...

ஒருவரோடு ஒருவர் முனகிக் கொண்டதென்ன? முகம் சுளித்ததென்ன? வந்த காரியம் முடிந்ததும் தலைநகர்நோக்கி திரும்ப வேண்டியதுதானே! ஏன் பிரெய்ன் நகர் நோக்கிச் செல்ல வேண்டும்?

படைக்குத் தலைமை பூண்டு எதிரிகளைத் தொடை நடுங்க விரட்டவல்ல வீரத் தலைவர்கள்தாம் அவர்களும்! ஆயினும் ஏன் என்று கேட்கும் துணிவு யாருக்கு உண்டு? நெப்போலியன் என்றால் நெஞ்சில் ரோமம் முளைத்தவனு விற்றே!

பரிவாரங்கள் பிரெய்ன் நகரையடைந்தன. அன்று முழுவதும் அங்கேயே ஓய்வு காண ஆணையிட்டான் அஞ்சா நெஞ்சு படைத்த அரிமா நெப்போலியன்.

அப்போது பகற்பொழுது நடை கடந்த நேரம். மாளிகையின் உச்சியில் நின்றுகொண்டு பிரெய்ன் நகரைப் பார்வை விட்டான். இளமைக் காலத்தில் கல்வி பயின்ற இடமல்லவா அது!

நெப்போலியனுடன் படித்தவர்கள் அப்போது பெரும் செல்வக் குடியினராக இருந்தனர். மன்னனாக வந்திருக்கும் நண்பன் நெப்போலியனை, மனத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாக வைத்துக் காண வந்தனர். உடன்படித்த நண்பர்களேயானாலும் கிடைத்தது உதாசீனம். அவனறியாத மனித நெஞ்சங்களா?

ஆகா! அந்தக் காலத்தில்...

பசியைப்பற்றித் தானறிந்துகொண்டது போக, பசியே தன்னையறிந்த அந்தக் காலத்தில்...

கிழவி பழம் விற்பாள்; இந்தப் பணக்காரப் பிள்ளைகள் கிண்டலும் கேச்சலுமாகப் பணத்தை அள்ளிக் கொடுத்து பழம் வாங்கித் தின்பர். நெப்போலியன்...

பரிதாபமாக நின்று வேடிக்கை பார்ப்பான். அவனுடைய பால்வடியும் ஒளி நிறைந்த முகம் கிழவிக்கு எதைத் தோற்றுவித்ததோ!

"ராஜா! பழம் வேண்டுமாடா? வேண்டுமானால் வாங்கிக் கொள்."

"காசு இல்லை பாட்டி!"

"நான் காசு கொடுக்கச் சொல்லவில்லையே! உனக்கு காசு கைநிறைய என்று கிடைக்கிறதோ அன்று இந்தக் கிழவியை மறக்காமல் கொண்டு வந்து கொடு!"

"தினம் தினம் கொடுப்பியா பாட்டி?"

"எப்போது வேண்டுமானாலும் வந்து வாங்கிக்கொள். நீ என் பேரன் மாதிரியடா, ராஜா!"

ராஜா என்று அந்தக் கிழவி எந்த வேளையில் சொன்னாளோ—

இன்று நெப்போலியன் பிரான்சு நாட்டின் ராஜா...

ஆனால்—

கிழவியைப் பேரனாகவே சந்திக்க வந்திருக்கும் ஒரு சாதாரண நெப்போலியனாகவே அவன் தன்னை எண்ணிக் கொண்டான்.

இருள் இழை பின்னி, ஒளியைப் பூவாகச் சூடிக் கொண்ட நேரம் வந்தது. அதற்குள் அந்தக் கிழவி எங்கே



க்கிறாள் என்ற தகவலை ஒற்றர்கள் கொண்டு வந்து கொடுத்தனர். அது நெப்போலியன் கைக்குச் சென்றது.

குறிப்பிட்ட ஒரு சிலரை மட்டும் உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டான் நெப்போலியன். என்ன வியப்பான தோற்றம் இது! மன்னன் நெப்போலியனா? எளிமை நிறைந்த இந்த மாறுவேடம் எதற்கு? பிரிட்டிஷ் சேனைத் தலைவன் வெல்லிங்டனோடு போராடியபோதுகூட விரும்பாத மாறு வேடம் கேவலம் இந்தப் பிரெய்ன் நகரில் இடம் பெறுவானேன்?

ஐம்பது குதிரைகள் பின் தொடர ஆனந்தக் களிப்புடன் முன்னே புரவியைச் செலுத்திக் கொண்டிருந்தான்—பதினாறு புரவிகள் பூட்டிய சிவிகை ரதத்தைப் புறக்கணித்துப் புறப்பட்ட படைக்களப் புலி நெப்போலியன்.

பிரெய்ன் நகரத்தின் தென் கோடி. இடப் புறத்தே வெட்ட வெளியும், வலப் புறத்தே அங்கொன்றும் இங்கொன்றுமாக நெட்ட நெடிய வளர்ந்த மரங்களும். அவற்றினூடே சின்னஞ்சிறு வீடுகளுள் ஒன்றில் வசித்து வந்தாள் அந்தக் கிழவி.

வாசற்படியில் குதிரைகள் வந்து நிற்கும் குளம்படிச் சத்தம், அந்த வயது கவிந்த மூதாட்டிக்குக் கேட்டிருக்க வேண்டும். கையில் லாந்தர் விளக்குடன் வெளியே வந்து நின்று கவனித்தாள். அதற்குள் நெப்போலியன் குதிரையை விட்டிறங்கிப் பல கணங்கள் உற்று உற்று நோக்கினான். வயதின் கோடுகள் மூதாட்டியின் முகத்தில் நன்றாக அரங்கேறியிருந்தன. அதிகமாகப் பழுத்துத் தொங்கிய சதை—கன்னத்தில். இதற்குள் அனைவருமே குதிரையை விட்டு இறங்கிவிட்டனர். கிழவி லாந்தரைத் தூக்கி ஆன்றுந்து நோக்கினாள். இரண்டு நெஞ்சங்களில்தாம் எத்தனை ஆயிரம் அடிப்புக்கள்!

"யார் நீங்கள்?"—கிழவி கேட்டாள். நெஞ்சுள் ஏதோ ஒன்று கனமாக அடைப்பது போன்ற உணர்வு. எப்போது வனுக்கும்தான். யார் நீங்களா? இது என்ன? அடையாளம் தெரியவில்லை! பிழைத்தோம்.

"பாட்டி! நாங்கள் மன்னர் நெப்போலியனின் படை வீரர்கள்!"

நெப்போலியன்...

அந்தப் பெயர்-வீரச் சொல்-'முடியாது' என்ற சொல்லை அகராதியிலிருந்து எடுத்துவிட்ட முத்தான எழுத்துக்கள்—

நெஞ்சுள் புதையப் புதைய ஆப்பிள் பழத்தின் இனிப்பான சுவைபோலிருக்கிறது!

சிரிக்க முடியாமல் சிரித்துக் கிழவி சொன்னாள்: "நெப்போலியன் வந்திருப்பதாக மத்தியானம் பழக் கடை டைதிருந்தபோது கேள்விப்பட்டேன். நீங்கள் இங்கே எதற்காக வரவேண்டும்?"-இனிமை நிறைந்த பிரெஞ்சு மொழி, கிழவியின் உதறுபடியான சாரீரத்திலும் இனிக்கத்தான் செய்தது. அடுத்து அவள் கேட்டாள்: "கே கே ஒத்தர் நோ(ம்)?" (உன் பெயர் என்ன?)

"மோ நோ(ம்)?"-(என் பெயர்?)

கிழவி தலையசைத்தாள்.

"சாபோலன்!" பொய்யான ஒரு பெயரைஉடனடியாகச் சொல்லத் தேடும்போது அருமை நண்பன் சாபோலன் பெயர் வந்துவிட்டது. அதையே சொன்னான்.

ர-ஜூர்!" (வணக்கம்)

"போ-ஜூர்!"

"எங்கே வந்தீர்கள்?"

"பாட்டி! எங்கள் மன்னர் உங்களுக்குக் கடன்காரராம். அந்தக் கடனை அடைத்துவிட்டு வருமாறு எங்களை அனுப்பினார்!"



கிழவி 'பகபக'வென்று சிரித்தாள்.

"என்ன? மாவீர மாமன்னன் இந்தக் கிழவிக்குக் கடன்காரரா? எவன் சொன்னான்?"

"நெப்போலியன் சொன்னார்!"

"அதிகமான போர்க்களங்களைக் கண்டதால் மூளை எதுவும் கோளாறு கண்டு விட வில்லையே?"

"நெப்போலியன் மூளை எப்போதுமே அலமாரியின் இழுப்பறை போன்றது. நினைவுகளை ஒவ்வொரு 'ட்ரா'க்களில் வைத்திருந்து, தேவைப்பட்டபோது திறந்து எடுப்பவர். இனியொரு முறை அப்படிச் சொல்லாதே பாட்டி!"

"நீங்கள் தவறான முகவரிக்கு வந்து தறுதலையான கதையை அளக்கிறீர்கள். மன்னன் எங்கே? நான் எங்கே? நெப்போலியன் மான உணர்வுடையவர். உடலைச் சரித்திரத்திற்கும், உள்ளத்தை மனிதர்க்கும் அளித்துவிட்டவர். அப்பேர்ப்பட்ட தூயவர் இந்த ஏழைக் கிழவியிடம் கடன் படுவதா? யாரோ அவரைக் களங்கப்படுத்தவேண்டும் என்று இந்த நாடகம் ஆட உங்களை ஏவி இருக்கிறார்கள். போய் விடுங்கள்!"

கிழவி விருட்டென்று வீட்டுள் சென்று கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டாள். கண்களில் நீர்த்திவலைகள் முத்தாக அரும்ப நெப்போலியன் உடன் வந்தவர்களுடன் மாளிகை நோக்கிப் புரவியைச் செலுத்தினான்.

அன்றிரவே புறப்பட வேண்டிய நெப்போலியன், அன்றிரவும் தங்கினான்.

மறுநாள் புலரி நிர்வாணமாகப் பூத்தது. கிழவியிட தோற்றுவிடக் கூடாதே என்று பிரார்த்தனை செய்தான் நெப்போலியன்.

நேற்றைய இரவு போல் அவன் மாறுவேடம் தாங்கவில்லை. ஐம்பது குதிரைகளே போதும் என்று எண்ண

வில்லை. அரச கோலத்துடன் பரிவாரங்களுடன் பயண மானான். கிழவியைச் சந்தித்து விட்டு அப்படியே பாரிஸ் நோக்கிப் பயணமாக வேண்டியதுதான்.

வழி நெடுக பிரெய்ன் நகர மக்கள் கூடி மாவீர இளை ஞான நெப்போலியனைக் கண் குளிர மனம் மகிழக் கண்ட னர். உடன் படித்த நண்பர்கள் உருக்கம் கலந்த களிப்புடன் கவனித்தனர். பரிவாரங்களுடன் பதினறு குதிரைகள் பூட்டிய சிவிகை ரதத்துடன் கிழவியின் வீட்டு வாசற்படிக் குச் சென்று நிறுத்தினன்.

இசை முழக்கத்துடன் பரிவாரம் வருவதைக் கேட்டு கிழவி, பழக்கூடையுடன் அவசர அவசரமாக வெளியே வந்தாள். வியாபாரத்துக்காக அவள் புறப்பட்டுக் கொண் டிருந்தாள்.

வாசற்படியில் நெப்போலியன் நிற்பதைக் காணக் காண...

'போ—ஜூர்' 'வணக்கம்' சொல்ல வாய் வரவில்லை.

"பாட்டி! என்னை நினைவிருக்கிறதா? போ ஜோர்(ம்) நெப்போலியன் போனபார்ட்!"

"போ-சிச் மிஸ்யே!"

"நான் மன்னன்; ஆனல், உனக்குப் பேரன்!"

"இந்தக் கிழவியின் வீட்டைத் தேடி வருவானேன்?"

"பாட்டி! நேற்றிரவு கூட கடனை ஆள் வசம் கொடுத் தனுப்பினும் வாங்க மறுத்துவிட்டாயாமே!"

"ஆள் வசம் கொடுத்தனுப்பினும் நெப்போலியன்? நீதானே வந்தாய்? என் பேரனை எனக்குத் தெரியாதா?" பாசத்தால் கிழவி உணர்ச்சி வசப்பட்டுவிட்டாள். நெப் போலியன் கடகடவென்று சிரித்தான்.

"பின் ஏன் தெரியாதவன் போல நடந்து கொள்ள வேண்டும் பாட்டி?"



"இப்போதும் அப்படி நடந்து கொள்ளத்தான் நினைத் தேன். உன் அரசத் தோற்றம் என்னை மெய் மறக்கச் செய்துவிட்டது. நெப்போலியன், என் பேரனே! நான் சாவதற்குள் உன்னை ஒரு முறை பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன். இனி இப்போதே நான் சாகவும் சந்தோஷப்படுகிறேன்!"

"நானும் உன் கடனை அடைத்துவிட்டுச் சாகவேண்டும் என்றுதான் பிரார்த்தனை புரிந்து வருகிறேன்."

"கடனு?"

"ஆமாம்; என் படிப்புக் காலத்தில் நீ எனக்கு எவ் வளவோ பழங்களைக் கொடுத்து இருக்கிறாய்! 'உன்னுல் கொடுக்க முடிந்தபோது கொடு' என்று சொன்னும். இப்போது கொடுக்க முடிந்தது; கொண்டு வந்தேன்!"

கிழவி வெகு நேரம் வரை நெப்போலியனை உற்றுக் கவனித்தாள்.

"ஏன் பாட்டி, என்னை அப்படிப் பார்க்கிறாய்?"

"ஒரு மன்னன் கேவலம் இந்தக் கிழவியிடம் கடன் பட்டான் என்ற வெட்கம் உனக்கில்லையா?"

"இல்லை!"

"எனக்கிருக்கிறதடா நெப்போலியன், எனக்கிருக் கிறது. என் பேரனை மன்னன் என்று சொல்லத்தான் நான் ஆசைப்படுகிறேன். கடன்காரன் என்று சரித்திரம் சொல்லி விடக்கூடாதே! அதனால்தான் இரவு மறுத்தேன். உன்னைக் கண்டு விட்டதில் மகிழ்ச்சி. போதும் என்றாய்விட்டது. ஆனல், மன்னன் கோலத்தில் இப்போது கண்டுவிட்டேன். இதுவே நான் பெற்ற பேறு. போய் வா, ராஜா!"

ராஜா...

மீண்டும் அந்த இனிமையான சொல்..

"பாட்டி! நெப்போலியன் மனச் சாட்சிப்படி ஒரு கடன்காரனுய் சாகக்கூடாது. சரித்திரப்படி அவனும் ஒரு மனிதன் என்பதை நிரூபிக்க வேண்டும். இந்தா பெற்றுக் கொள்!"

"முடியாது!"

"என் அகராதியில் இல்லாத சொல்லைச் சொல்லி என்னை அவமானப்படுத்தாதே பாட்டி! பெற்றுக் கொள். வாட்டர்லூ போரில் கிடைத்த சிறுமையை விட இது ஒன்றும் குறைந்ததல்ல. நானும் மனிதன். எனக்கும் தோல்வியுண்டு. ஆனல், உன்னிடம் தோற்றதாக என் மனச் சாட்சியான சரித்திரம் வேண்டாம். பெற்றுக் கொள்."

பண முடிப்பு கிழவியின் கையில் இடம் பெற்றது. "பாட்டி! வட்டியும் முதலும் இது! முதலை நீ நிர்மானிக்கலாம். வட்டி நான் நிர்மானித்தது. சௌக்கியமாக இரு!"

நெப்போலியன் விடை பெற்றுத் திரும்பினுன். இசை முழங்கியது. பயணம் நீண்டது. முன்னம் வாடர்லூ போரில் அமைந்த அவனது நெஞ்சு இன்றுதான் ஆறுதலடைந்தது போன்ற ஒரு நிறைவு...

\- 1969

# உயர்ந்த மனிதன்

இராப் போதையில் அரண்மனை நித்திரை மயக்கம் கொண்டு நிம்மதியாய் உறங்கியது. அலைமோதிய நிலையுடன் தீபங்கள் அழிந்து பட்டு வரும் விஜயநகரத்தின் கதையைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. மன்னர் அச்சுத தேவராயர் மட்டும் விழி மறந்த நித்திரைக்கு விளக்கம் புரியாமல் கலக்கமே வடிவாகச் சாளரத்தை நோக்கி நடந்தார். தென்திசை விசாலமாகத் தெரிந்தது. மன்னர் அடிக்கடி நெற்றியைச் சுழித்துக் கொள்வதையும் பெருமூச்சு பறிவதையும் படுக்கையில் இருந்தவாறே கவனித்த அரசி திருமலாம்பாள், மெல்ல எழுந்து அருகே வந்தாள். கால் சதங்கையொலி கேட்டுத் திரும்பிப் பார்த்தார் அச்சுத தேவராயர். அவருடைய முகத்தில் பாவிதமான சிந்தனைக் கோடுகள். செவ்விய தீப ஒளியில் அவை சிக்கல்கள் பலவற்றை எடுத்துக் காட்டுவன போலத் தென்பட்டன.

இரவின் மூன்றும் யாமத்தை அறிவிக்கக் கோட்டை மணி ஓசை எழுப்பியது.

"பிரபு! ஒரு வாரமாகவே இப்படித் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தால் உங்கள் உடம்பு என்னாவது?" பணிச்சாரிய சரிசவம் அன்பாகச் சொற்களில் வெளிப் பட்டது.

சிவந்திருந்த கண்களில் கனிவைத் தேக்கிப் பட்டத்தரசியை நோக்கினார் அச்சுத தேவராயர். உதடுகளில் வெறுமையாகப் புன்னகை நெளிந்தது. சற்றே தோள்களை அசைத்துக் கொடுத்துப் பட்டத்தரசியின் அருகே வந்தார்.

"திருமலா! தூக்கம் கெடுக்கும் அரசியல் பிரச்னைகள் சாகும்வரையில் தொடர்ந்து வந்துகொண்டிருப்பன. ஆட்சியிலிருப்பவர்களுக்கு அது ஒரு காச நோய் போன்றது. நான் இப்போது துக்கப்பட்டுக் கொண்டிருப்பது நம்முடைய விசுவநாதனைப் பற்றி! மூர்த்தியம்மாளை மணக்க முடியாது என்று எவ்வளவு மூர்க்கத்தனமாகச் சொல்லி விட்டான்."

ஏளனமாகச் சின்னஞ்சிறு சிரிப்பொன்று திருமலாம்பாள் நெஞ்சத்திலிருந்து உதிர்ந்தது.

"பிரபோ! எனக்கும் அதுதானே புரியவில்லை. விசுவாசம் நிறைந்தவன் விசுவநாதன் என்று நாமெல்லாம் நினைக்கப் போக, இப்படி மன்னருடைய அன்புக் கட்டளையை ஒரு முறைக்கு இருமுறை புறக்கணித்துவிட்டானே! ஒரு விஷயத்தை நானும் மறந்தேன்..."

"என்ன திருமலா!"

"நானுங்கூட ஓர் ஓலை எழுதி யனுப்பிவைத்தேன்."

"அப்படியா!"

"ஆமாம்; 'மன்னித்து விடுங்கள்' என்று மறுத்து எழுதி விட்டான்."

அச்சுத தேவராயர் அகத்தில் தீ மூண்டது.



"செருக்கேறிவிட்டது. திருமலா! மதுரை மாநகரை அவனிடமிருந்து பறிக்க எவ்வளவு நேரம் பிடிக்கும்? மறந்து, பதிகெட்டு, மதோன்மத்தம் பிடித்து நடக்கிறான். நாளையே அந்த ராஜப்பிரதிநிதி பதவியைப் பிடுங்கி நம் சேவப்பனுக்குத் தருகிறேன்."

கண்கள் கனன்று மீசை துடித்தது அச்சுத தேவராயருக்கு.

திருமலாம்பாள் அமைதியாகச் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"கோபம் எரிக்கும்; குளிர வைக்காது. ஏனென்றால் அதற்குச் சிந்தனை கிடையாது."

"என் கோபத்தை மீண்டும் தூண்டுகிறாய்."

"இல்லை, குளிர வைக்கிறேன். பிரபோ! தமிழ் மக்கள் விசுவநாதன் மீது எவ்வளவுக்கு அன்பு செலுத்துகிறார்கள் என்பதைத் தெரிந்துமா இப்படிப் பேசுகிறீர்கள்! ஒரு தெலுங்கன் ஆள்கிறான் என்பதையே மறந்து 'விசுவநாத நாயக்கன் வாழ்க' என்று கோஷமிடுகிறார்கள். அந்த நாட்டுக்காக அவன் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறான். தந்தையென்றும் பாராமல் சிறைப்பிடித்தவனல்லவா? நேர்மையைப் பொறுத்தமட்டில் அவன் பரிபூரண மனிதன்."

அச்சுத தேவராயர் சற்றே அமைதி கண்டார்: "எல்லாம் அந்தத் தளவாய் அரியநாத முதலியாரிடம் பயின்ற குணங்கள். குருகாணிக்கையாக அவன் தமிழகத்தைக் கோயிலாகக் கொண்டுவிட்டான்."

"நல்லதுதானே! நம் மூர்த்தியம்மாளை மணக்க மறுத்து விட்டான் என்பதாலேயே அவனுடைய முக்கிய குணங்களை புறக்கணிக்கக் கூடாது."

"மணப்பதால் அவனுக்கென்ன நஷ்டம்?"

"வாழ்க்கை என்பது அவனுக்குச் சொந்தமானது. வேறு முடிவு காணச் சிந்தியுங்கள்:"

"முடிவு காண்பதென்ன? கண்டாய்விட்டது. செவப்புக்கு மூர்த்தியம்மாளைக் கொடுக்க முடிவு செய்துவிட்டேன்,"

திருமலாம்பாள் திகைத்தாள்.

"சின்னஞ்சிறு பதவி வகிப்பவனுக்கா?"

"இல்லை; திருமணச் சீதனமாகத் தமிழகத்தின் தஞ்சைப் பகுதிக்கு அவனைப் பிரதிநிதியாக்கத் தீர்மானித்துவிட்டேன்."

"சிந்தித்துத்தானே முடிவு...?"

"முடிவு, முடிவுதான்! பரந்த தமிழகத்துக்கு ஒரே ஒரு பிரதிநிதி போதாது."

ஒருபுறம் மகிழ்ச்சியானாலும் மறுபுறம் வேதனையாகத்தான் இருந்தது திருமலாம்பாளுக்கு! மெல்லத் கணவரை அழைத்துக்கொண்டு நித்திரை வாயிலைத் திறக்க முனைந்தாள்.

இதயச் சிறகின் இறகுகள் ஒவ்வொன்றும் உதிர்வன போல் ஓர் உணர்வு; மயக்கம் கண்டாள். மூர்த்தியம்மாள். இரத்த ஓட்டம் நின்று, உறைந்தது. நாளங்கள் தடுமாற நாடிகள் துடித்தன. கனவில் வண்ண ஓவியமாகத் தீட்டி வந்த விசுவநாத உருவம் அழிந்துபட்டதில் அவளுக்கு ஓர் அலைமோதல், எப்படியும் மன்னர் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தத் திருமணத்தை முடித்துவிடுவார் என்றுதான் நம்பினாள். ஆனால் செவப்ப நாயக்கனுக்கு வாழ்க்கைப்பட நேர்ந்துவிட்டதே!



முடிவாகத் தமக்கையிடம் சென்று வாதிட்டுப் பார்த்துவிடுவதென்று மேன் மாடம் நோக்கி நடந்தாள். அவளுக்கு மட்டுந்தானா இந்த அலைமோதல்? அரசி திருமலாம்பாளுக்கும் இருக்கத்தான் செய்தது. உடன் பிறந்த தங்கையல்லவா? தன்னைப் போல் ஒரு மன்னனுக்கு வாழ்க்கைப்படாவிட்டாலும், தமிழகத்தின் முடிசூடா மன்னன் போல் ஆட்சி புரியும் விசுவநாத நாயக்கனுக்காவது வாழ்க்கைப்படட்டும் என்று ஆசைவைத்தாள். ஆசைகள் மனிதரோடு பிறக்கலாம். நிறைவேற்றி வைப்பது காலத்தோடு பிறப்பதல்லவா? இல்லையென்றால் விதி என்ற சொல் அர்த்தமில்லாமல் போய்விடுமே!

"அக்கா!"

தமக்கை மூலம் செவப்பன் திருமணத்துக்குப் பிறகு தஞ்சைப் பதியாகிறார் என்பதை அறிந்து தன்னை மறுத்த மதுரைப் பிரதிநிதி விசுவநாத நாயக்கனைப் பழி வாங்கிவிட்டதாகவே பூரித்துக் கொண்டாள்.

திருமண நாள் நிச்சயிக்கப்பட்டது.

சிற்றரசர்கள் பலர் வருகை தந்தவண்ணம் இருந்தனர்.

பொழுது விடிந்தால் திருமணம். மதுரையிலிருந்து விசுவநாத நாயக்கனும் வந்துவிட்டான். விஜய நகரமே கோலாகலத்தில் மூழ்கியிருந்தது.

தலைநகரை அடைந்ததும் முதற் கண்ணாக மன்னர் அச்சுத தேவராயரைக் கண்டு காணிக்கை செலுத்தி வணங்கினான் விசுவநாத நாயக்கன். மன்னர் தன்னை அலட்சியமாக வரவேற்றதை அவனும் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் அவன் செவப்ப நாயக்கனைக் கண்டு உள்ளப் பூரிப்புடன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான். இதனை யாருமே எதிர்பார்க்கவில்லை. தனக்குப் போட்டியாக ஒரு பிரதிநிதி

தமிழகத்துக்கும் அமையப் போகிறான் என்பதையறிந்தும் அவன் மீது சிறிதும் மனக் குரோதம் கொள்ளாதது பலருக்கு வியப்பைத் தூண்டியது.

ஏன்? சேவப்ப நாயக்கனே ஒரு கணம் மருண்டு தனக்குள் அதுவரையில் கல்லாய் அழுத்திப் பாரமாகத் தெரிந்த அச்சம் அகல நோக்கி அமைதி கண்டான்.

பொழுதும் விடிந்தது: பொற்றுமி எரியது! அழுது வடிந்த மூர்த்தியம்மாளும் அகமகிழ்ந்து முகம் மலர்ந்தாள்.

காலைக் கிளையிலிருந்து நாணிதழ்கள் எழு, சருகாய் உதிர்ந்து பறந்தன

காலைக் கதிரவன் இதமான வெப்பத்துடன் பயணமாகிக் கொண்டிருந்தான். விசுவநாத நாயக்கனும் சற்றைக் கெல்லாம் சந்தனத் தமிழ் மணக்கும் மதுரைக்குப் பயணமாக ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

மன்னர் அச்சுத தேவராயரிடம் சொல்லிக்கொண்டு புறப்பட அரண்மனையை அடைந்தான். திருமணச் சந்தடி இன்னும் ஓயாமல்தான் இருந்தது.

விசுவநாத நாயக்கனைக் கண்டதும் முகத்தைச் சுளித்துக் கொண்டார் மன்னர். வந்தது முதல் அவர்தான் வாய் திறந்து இன்னும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே!

“மன்னர் பெருமானே! விசுவநாதன் விடைபெற வந்திருக்கிறேன்.”

“ம்ம்...!”

விசுவநாதனுடைய கண்கள் கலங்கிவிட்டன. விசுவநாதனின் அகத்தை விக்கமுறச் செய்துவிட்டது. ஆனாலும் அடக்கிக்கொண்டான். மாமன்னர் கிருஷ்ண தேவராயரால் வளர்க்கப்பட்ட அன்பு மகன் அல்லவா விசுவநாத நாயக்கன்!



துக்கத்தை அடக்கிக் கொண்டு மேலும் சொன்னான், “மன்னர் பெருமானே! சேவப்பன் என்று தஞ்சைக்கு வருகிறான் என்பதை முன்கூட்டி அறிவித்தால் தக்க சிறப்புக்களுடன் நானே அவனை வரவேற்று ஆவன செய்வேன்.”

சிறு அதிர்ச்சியுடன் அச்சுத தேவராயருடைய கண்கள் அண்ணாந்து அவனை நோக்கின. அருகில் இருந்த அரசி திருமலாம்மாள் அதைக் கவனித்தாள். அவளுடைய கண்களில் நீர் நிறைந்துவிட்டது. விசுவநாதன் பேரில் அவளுக்கு அளவு கடந்த அன்புண்டு. அவள் கேட்டாள்:

“விசுவநாத நாயக்கரே! நான் ஒன்று உங்களைக் கேட்கலாமா?”

“கேளுங்கள் தாயே!”-நெஞ்சு மேலும் விம்மியது விசுவநாத நாயக்கனுக்கு!

“முடிந்துபோன விஷயமானாலும் மூர்த்தியம்மாளை நீர் மறுத்ததற்கான சரியான காரணம் மன்னருக்குத் தெரிய வேண்டியது அவசியமில்லாவிட்டாலும், எனக்குத் தெரிந்தே ஆகவேண்டும்!”

ஒரு கணம் விழித்தான் விசுவநாத நாயக்கன்.

“சொல்லித்தானாகவேண்டுமா, தாயே?”

“நிச்சயமாக!”

“தாயே! முதலில் இப்படி அழைக்கிற ஒரு புனிதமான சொல் என் நாவிலிருந்து நழுவிவிடும்.”

“ஏன்?”

“நான் மூர்த்தியம்மாளை மணந்தால், மன்னர் எனக்குச் சகலையாகிவிடுவார். நான் அவரைத் தெய்வமாகவே வணங்க ஆசைப்படுகிறேன். நீங்கள் எனக்கு மதனியாகி விடுவீர்கள். எப்படிப் பார்த்தாலும் தாய் ஸ்தானம்

தாழ்ந்துவிடுகிறது. உறவால் மதிப்புக் குறைவதைவிட உள்ளத்தால் மரியாதைகள் பெருகி நிற்கவேண்டும் என்பதாலேயே மறுத்தேன். இத்தனைக்கும் மேலாகத் தமிழ் மக்கள் இந்த இளம் பெண் திருமணத்தை வைத்து எல்லா எது எதற்கோ ஆசைப்படுவதாகத் தரக்குறைவாக எண்ணி விடக் கூடாதல்லவா?''

விசுவநாத நாயக்கனுடைய கண்களில் நீர் தாரையிட்ட வண்ணம் இருந்தது.

''விசுவநாதா!'' என்று உணர்ச்சி பொங்க அழைத்தவாறு அவனை அன்புடன் அணைத்துக்கொண்டார், மன்னர் அச்சுத தேவராயர்.

''விசுவநாதா! நீ ராஜப் பிரதிநிதி மட்டுமல்ல, உண்மையான ராஜ விசுவாசியுங்கூட. நான் உன்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அதனால் நீ என்னிலும் மேம்பட்டவன்!'' என்றார்.

''மன்னவா!''

''பரிபூரணமாகச் சொல்லுகிறேன். இப்போது சொல்! தமிழகத்துக்கு நீ ஒருவனே போதும் என்று நினைக்கிறேன். தஞ்சை சேவப்பனுக்குத் தேவைதானா?''

''தேவைதான்! தஞ்சைக்கு மட்டும் சேவப்பன் தேவை என்பதில்லை; எனக்கும் ஒரு துணைவன் தேவைப்படுகிறான்!''

''ஆந்திர சாம்ராஜ்யத்தைவிட உன் இதயம் விசாலமானது. தெலுங்கினமே உன்னைக் கண்டு பெருமைப்படுகிறது.''

சிரம் தாழ்த்தி வணங்கினான் காவிரியின் நீர் பருகி, மதுரையின் மணம் நுகர்ந்து கன்னித் தமிழின் சுந்தக்கண்டுச் சுவை கண்ட சுந்தரத் தெலுங்கன் விசுவநாத நாயக்கன்.



# கணையாழி

ஒரு குடை நிழற் கனவு; ஓயாத சிந்தனையில் மாளாத பேரலைகள்.

தன்னிழலே பொன்னிழலாய்த் தரணி மக்கள் கருத எண்ணிக் கண்ணிமையில் கனவுகளைக் கூடுகட்டி நிறுத்திக் கற்பனையில் ஒப்பனையாய்க் களைமுடன் கூர்ந்து கவனித்தார். சமுத்திரமே தம் பெயராய்-தம் பெயரே சமுத்திரமாகக் கொண்ட 'விச்சாவி தௌலித்திரன்' சமுத்திரகுப்த மகாசக்கரவர்த்தி.

அறிவாகிய வீணையின் ஆயிரமாயிரம் நரம்புகள் தெறித்தன! வீரக் கண்களிலே ஒலி மிதக்கும்! நோக்குதல் வானமளாவியது; சிந்தனை ஆகாயமாக விரிந்தது!

'இதுவன்றோ உலகத்து ஒரு குடை!'—

நீலப் பந்தலைப் போல் எல்லையிலா நீள் வானம். வைரமணிப் பொட்டுக்கள் உலகத்து ஓயாத கதைகளை ஒளி நகை சிந்திப் பேசின. கன்னி நிலா சக்கரவர்த்தியின் கவனத்தைக் கவர்ந்தாள். அடுத்து அவருடைய கவனத்தைக் கவர்ந்தது அந்தக் கணையாழி. அதன் கதைதான் எத்துணை சுவை மிக்கது! ஏன்? சோகம் மிக்கது!

"சக்ரவர்த்தி...!"

எங்கிருந்து கேட்கிறது இந்தக் குரல்? குரலா அது? அணுக்கமாகச் சுருதி சேர்க்கப்பட்ட தமிழகத்துச் செங்கோட்டியாழின் மதுரவொலியல்லவோ கேட்கிறது! சமுத்திரகுப்த மகாசக்ரவர்த்தி இசைநயவண்ணம் மீண்டும் வானத்தை அண்ணாந்து கவனித்தார். அங்கே தன்னொன்ற வெண்ணிலவு இல்லை. பெண்ணொன்ற பொன்னுருவம் காட்சி தந்தது. சக்கரவர்த்தியின் திருவாய்: "தேன்மொழி!" என்று மலர்ந்தது. அப்படி மலர்ந்து இதழ் விரிக்கும்போதுதான் அந்த 'ழ'கரம் பட்டபாட்டினைப் பார்க்க வேண்டுமே!

மீண்டும் அதே குரல்: "சக்கரவர்த்தி!"

வெறும் மயக்கம்தான். ஆயினும் மகத மகாசக்கரவர்த்தி சமுத்திரகுப்தர்; "தேன்மொழி" என்று மறுமுறையும் அழைக்கத் தவறவில்லை. அவரா இப்போது அழைத்தார்? மனம்! மனமென்ற சாட்சிக்காரன். மனிதருடைய பழையனவும், புதியனவுமான நிகழ்ச்சிகளையும், சொற்பரிமாற்றங்களையும் மறந்துவிடாமல் நினைவுபடுத்தும் மாயவித்தைக்காரனுமிற்றே அவன்.

"சொல், தேன்மொழி!"

"காதல் எப்போது வளர்கிறது?"

"காதலி கோழையாகாத வரையில்..."

"அது செத்துப் போய் விடுகிறது என்றால்...?"

"காதலன் கோழையாகிவிட்டான் என்றுதான் பொருள்!"

"என் காதலர் மாவீரர்; இல்லையா?"

ஆண் உள்ளத்தில் ஒரு தடுமாற்றம்; ஆயினும் ஒரு தேற்றம். அதனூடே எழுந்த மறுமொழி: "சாதாரண மாவீரனல்ல, தேன்மொழி! உலகத்தையே தன்னுடைய ஒரு குடை நிழலில் கொண்டு வரக்கனவு காணும் ஒரு சக்கர



வர்த்திக்கு இருக்க வேண்டிய வன்மை பொருந்திய மாவீரம் எனக்கும் இருக்கிறது!"

"அப்படியென்றால் என்னுடைய காதலை நெஞ்சோடும், இதய நிறைவோடும் வாழ்த்திக் கொள்ளுகிறேன்...!"

கனவு கலைகிறது; நினைவு மலர்கிறது. சொன்ன சொற்களை எண்ணிப் பார்க்கிறார் மாவீர சமுத்திர குப்தர். தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளுகிறார்: 'நான் மாவீரன் தானா?'

மீண்டும் கனவு மலர்கிறது; நிலவு மறைகிறது.

"பிரபோ! நான் தமிழகத்து மங்கை. காவியம் கண்ட மண்ணில் உதயமானவள்; காதலுக்குக் கற்புக்கும் பேரிலக்கியம் கண்ட மொழிப் பூமியில் பிறந்தவள்; 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற பண்பினைப் பேசும் வாய்கள் என்னைப் பெற்றெடுத்தன. என்னைக் கைவிட்டு விட மாட்டீர்களே!"

"சத்தியமாகக் கைவிட மாட்டேன். இதோ அதன் சாட்சியமாக என் கணையாழி!"

"அப்படியென்றால் என்னுடைய இந்தக் கணையாழியை நீங்கள் அணிந்து கொள்ளுங்கள். என்னுடைய இனிய நினைவை இது எப்போதும் தங்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும்!"

கூ...குக்கூ......

"அந்தக் குயிலின் இசையைக் கேட்டீர்களா?"

"கணையாழி மட்டுமல்ல; எங்கெல்லாம் குயில்கள் கூவுகின்றனவோ, அங்கெல்லாம் அவற்றின் குரலினைத் தோல்வியுறச் செய்ய வல்ல தேன்மொழியின் காதற்குரலும் நினைவுக்கு வரும் என்பதை அந்த ஒற்றைக் குயில் நினைவூட்டுகிறது கண்ணே!"

"நாளை தாங்கள் வடக்கு நோக்கிப் புறப்படப் போகிறீர்கள் அல்லவா?"

"புறப்பட்டே ஆக வேண்டும்!"

"மகிழ்ச்சியோடு சென்று வாருங்கள். தயவு செய்து இந்த இரவிலேனும் உண்மையைச் சொல்லுங்கள். தாங்கள் ஒரு பிரபுக் குமாரர் தானா?"

"........"

"உண்மையைத் தவிர வேறெதையும் கண்டறியாதவள் கேட்கிறேன். உண்மையைச் சொல்லுங்கள்!"

"உம்—உண்மையைத் தவிர—உண்மையைத்தான் தேன் மொழி!"

"என்ன அலட்சியமான குரல் இது? தமிழகத்துப் பெரும்பாலான நாவுகள் உண்மை என்ற ஒரே இசையை முழக்கும் நரம்பற்ற பேரியாழ்."

"அங்கே 'பெரும்பாலான' என்ற ஒன்றும் தொக்கி நிற்கிறதல்லவா?"

"நிற்கிறது! மறுக்கவுமில்லை. அதை வெளிநாட்டவரின் இறக்குமதியான விஷம் போல் நினைத்து வாழ்பவள்!"

கடகட வென்று சிரிப்பொலி.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"உன்னுடைய தாயகத்துப் பற்று என்னைச் சிரிக்கச் செய்கிறது!"

"சிரித்த தாங்களே பிறகு சிந்திக்கவும் செய்வீர்கள்! நீங்கள் யார் பிரபோ?"

"தேன் மொழி! இது பரம ரகசியம். மனத்தோடு பூட்டி வை. உன்னை நம்பிச் சொல்லுகிறேன். நான் மகத சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி சந்திரகுப்த மகாராஜாதி ராஜனின் இளம் புதல்வன். நானே மகத மகாசக்கர வர்த்தி!"



தன்னிலைமைகள் கிட்டாதப் படபடக்கின்றன; கரு விழிகள் மாறுதல் மறுக்கின்றன.

கனவு மறைகிறது நிலவு தோன்றுகிறது. அதே படபடப்பு. அதே மருட்சி; சக்கரவர்த்திக்கும்.

மயக்கத்திலிருந்து விடுபட்ட மகாசக்கரவர்த்தி சமுத்திரகுப்தர், மனத்தைப் பிசைந்துகொண்டார். யாரோ அரசன்? யாரோ வீரன்? இல்லை...இல்லை... யாரோ ஒன்...?

குப்த மாதேவி குரல் கொடுத்தாள். சிந்தனை கலைந்தது. அலைகள் ஓய்ந்தன. அமைதி. [illegible] தேவியின் அழைப்பு. அந்திரவு, அவர்களுக்குத் தேவையான இரவு. பொழுது விடிந்தால் போர்ப் பயணமாயிற்றே!

கி. பி. நான்காம் நூற்றாண்டின் மறுபாதியைத் தாண்டிய காலம் அது.

மகதப் பேரரசைக் கட்டி யாண்டவர்களுள், வீர வெண்புகழை நிறுவி, நிலையான வாழ்வை அமைத்து, தர்மச் செங்கோலோச்சி வந்த மகாசக்கரவர்த்தி சமுத்திர குப்தர், வாழ்வில் [illegible] போரில் வெற்றியே. போர் என்பதே அந்நாளில் போற்றத்தக்க தாகியம்; புனிதம் நிறைந்த செயலுமாகும். போர் மறுத்தார்; யார் மதித்தார்?

தந்தையார் சந்திரகுப்தருடைய வரலாறே வான் மதியில் எழுதியதுதானே? ஓர் 'வலிமையான கோமா மரபைச் சார்ந்த சந்திரகுப்தர், லிச்சாவியரின் மகளான குமாரதேவியை மணந்ததன் காரணமாக மகதத்தைக் கைப்பற்ற முடிந்தது. அதன் பின்னர் தானே நீண்டகாலம் ஆட்சிசெய்ய நினைத்தார். அதற்கேற்ப மகனும் வீரப் புதல்வனாக விளங்க நேரிட்டது. எனவே, இளம் வயதில் வீர சாகஸ அனுபவம் கிடைக்கட்டும் என்ற துணிவான

நினைவுடன் சமுத்திரகுப்தரை நாடு நாடாகப் பயணஞ் செய்து திரும்பும்படி ஆணையிட்டார். இது இளமைத் துடிப்பு நிறைந்த சமுத்திரகுப்தருக்குத் தித்திக்கச் செய்தது. பிற்கால போர்ப் பயணத்துக்கு இந்தச் சுற்றுலா பயன் மிக்கதாக அமையும் என்று எண்ணிச் சமுத்திரகுப்தர் சில துணைவர்களுடன் யாத்திரைக் கிளம்பினார். அப்படிச் சுற்றுப் பயணம் செய்து, தமிழகத்தை அடைந்தார். கல்வியில் கரையிலாக் காஞ்சிமாநகரம் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. அத்துடன் காதலையும் கவர்ந்தாள் தேன்மொழி. ஒரு பிறைகாலம் காஞ்சியில் தங்கி ஏற்பட்ட காதலும் கணையாழியும், மகதம் திரும்பியதும் மறந்தே போயின. காரணம் மகத சக்கரவர்த்தி சந்திரகுப்தர் மரணப் படுக்கையில் கிடந்தார். மணிமுடி தலையிலும், செங்கோல் கரத்திலும், உடனடியாக இடம் பெற நேர்ந்துவிட்டது. எந்தவிதமான ஆலோசனைக்கும், அவகாசத்துக்கும் இடமில்லாமல் திருமணம் முடிந்தது. தந்தையார் மறைந்தார். ஆட்சிப் பொறுப்பும், அண்டைப் பகைவர்களை அடக்கும் நினைப்பும் ஆண்டுகளை விழுங்கத் தொடங்கின; நினைவுகளை அலறச் செய்தன; இளமை மாறியது; முதுமையும் ஏறிக்கொண்டேயிருந்தது.

ஒரு வழியாக மகத எல்லைகள் நிறைவாக விரிந்தன.

குப்தமா-தவியும் கருவுற்று, குழவியீன்று, அதற்குப் பாட்டனாரின் பெயரைச் சூட்டி, இப்போது கல்வி, கலை, வீரம் பயிலும் நிலைமைக்கும் ஆளாக்கிக் கொண்டிருந்தாள். இந்தத் தருணத்தில்தான் வாகாடகர்களும், நாகர்களும் வகையாகத் தொல்லை கொடுக்கத் தொடங்கினர். எனவே, அவர்களை அடக்கி, அப்படியே தென்னாடு வரை போர்ப் பயணம் நடத்தித் தம் கனவை அரங்கேற்ற நாளும் குறிப்பிட்டு விட்டார். அந்த நாள் -

உதய சூரியன் பொற்சுடர் பரப்பினான். பார்ப்பவர் வியக்க விழாக் கோலம் பூண்டது பாடலிபுத்திரம் தலை



நகர்வாழ் மக்களெல்லாம் தவமிருந்து பெற்ற மகாசக்கரவர்த்தியை வாழ்த்தி வழிகூட்டக் குழுமியிருந்தனர். பாதையோரங்களில் நீளக் கயிறு கட்டியிருந்தது. அந்தக் கயிற்றெல்லைக்குள்தான் மக்கள் நின்று வேடிக்கை பார்க்கவேண்டும். தவறிக் கயிற்றைத் தாண்டிவிட்டாலோ; கிடைப்பது மரண தண்டனை. இது அக்கால வழக்கு.

போர்ப் பயணம் தொடங்கிற்று. மகத மக்கள் கைகொட்டி ஆர்ப்பரித்தனர். கடல் போன்ற மக்களையும் சேனைகளையும் கண்ட மகாசக்கரவர்த்தி சமுத்திரகுப்தரின் மடல் விரித்த இதயத்தில் அடலழிக்கும் யானை வெறி போர்ப் பிளிறல் செய்தது.

பயணம் நீண்டது. வழி நெடுக கணையாழியும் கண்ணுமாகவும், கவனமும் போர்க்களமாகவும் அம்பாரியில் வீற்றிருந்தார் மகாசக்கரவர்த்தி. அணித்தே வந்த யானையின்மீது அவைக் கவிஞர் அரிசேனர் ஏடும் எழுத்தாணியுமாகக் காட்சி தந்தார்.

முதற்களம் நாகர்ப் போர்க்களமாக இருந்தது.

“சமுத்திரகுப்தா! வெற்றி! முதல் வெற்றி! கணபதி நாகன் கண் மூடினான்; நாகசேனன் தடுத்துப் போராடினான்; அச்சுதன் அழிந்துபட்டான். வாகாடகனை வாளுக்கிரையாக்க வழியனுப்பப் பயணம் தொடரட்டும்!” என்று எக்காள முழக்கம் செய்தார் கவிஞர் அரிசேனர். அவருடைய முழக்கம் வீண் போகவில்லை. வாகாட மன்னன் பிருதிசேனன் தோல்வி கண்டான். அவன் மட்டுமா? மற்றப் பகுதியை ஆண்டு வந்த மகேந்திரனும், காண்டாவனத்தரசன் வியாக்ரராஜனும் சரணாகதியே அடைந்தனர். கடைசியாகப் படைப் பயணம் தமிழகத்தை நோக்கியது.

'நகரேஷு காஞ்சி' என்று மகாகவி பாரவியால் புகழப்பட்ட காஞ்சியை நோக்கிக் குப்தப் படைகள் வருகின்றன என்ற செய்தி காட்டுத் தீயைப் போல் நாலு திசைகளிலும்

பரவியது. பல்லவ வேந்தன் விஷ்ணுகோபன் ஒருகணம் பதறிப் போய்விட்டான். ஏனைய சேர சோழ பாண்டியர் களை உதவிக்காக அழைத்தான். சேரன் விலகிவிட்டான்.

மகத மகாசக்கரவர்த்தி சமுத்திரகுப்தர் போர் வெறி கொண்டு வடக்கு நாடுகளை வீழ்த்தி, முடிவாகத் தமிழகம் நோக்கி வருகிறார் என்ற செய்தியறிந்தது முதல், ஆத்திர மும் ஆவேசமுமாக அலைமோதிக் கொண்டிருந்தாள் தேன் மொழி! அவரை எப்படியும் சந்திக்க வேண்டும்; வீரத்துக் கும் கோழைக்குமுள்ள வித்தியாசத்தை அறியவேண்டு மென்று பற்களைக் கடித்தாள்; இதயம் துடித்தாள்; கண்ணீர் வடித்தாள்.

கனல் கக்கும் கண்களுடன் காத்திருந்த தமிழ்ப் படை களுடன், நிலைவெடுத்து ஓடிவரும் குப்தப் படைகள் கொல் லேறு ஏரிக் கரையில் கலந்தன. போரொலி பேரொலியாய் வானையும், வையத்தையும் அதிரச் செய்தது. வெற்றி யாருக்கு? தோல்வி யாருக்கு?- என்று சொல்ல முடியாத அளவில் அன்றையப் போரும் ஓய்ந்தது. மஞ்சள் பூசிய மாலைக் கதிரவன் கொஞ்சு மொழி பேசும் கூடத்தின் போர் கண்டு அஞ்சினான்; குட திசையில் அயர்ந்தான்.

முணு முணுக்கு இரகசியம் போல் மினுமினுத்தன தூண்மனைகளில் ஏற்றி வைத்த குப்த விளக்குகள். வண்ணத் துகில் மனையில் எய்யனச் சுழற்றி கண்டு வாடிய முகத்துடன் படுத்திருந்தார் குப்த மகா சக்கரவர்த்தி. திரும்பிய திசை தோறும் தேன்மொழியின் திருமுகந்தான். அவளுடைய பசுமை நிறைந்த வண்ண நினைவுகள் இதயத்தை அலைக் கழிக்கச் செய்தன; உடலை நெருப்பாகக் கொதிக்கச் செய் தது. வந்து சென்ற கனிருடனும்கூட அவர் வார்த்தை யாடச் சம்மதிக்கவில்லை. போர் வெறியோடு உடல் வெறியும்-உள்ளத்து வெறியும் கலந்துகொண்டன போலும்!

தேன்மொழியை நினைக்க நினைக்கத் தேகம் முழுவதும் தவிப்பு கண்டது. அவள் இருக்கிறாளோ, செத்தாளோ?



எவனுடனாவது வாழ்ந்தாளோ, தொலைந்தாளோ? இப் போது அவளுடைய நினைவே கூடாத ஒன்று. இனி விருக்கும் போர்ச் செயல் புறமுதுகு காட்டிவிடக் கூடாது! இந்த நேரத்தில் தேன்மொழியின் சிந்தனை வந்ததுமல்லா மல், தேகத்தில் ஒரு தளைமெழுச்சி; ஒரு தாகத் தவிப்பு; ஒரு போதைக் கிறக்கம் ஏற்படுவானேன்?

"யாரங்கே?"

பணியாளன் வந்து பணிந்து நின்றான்.

"நமது சேரநாட்டுப் பிரதிநிதியை நான் அழைத்த தாகச் சொல்!"

பணியாளன் சென்றான். சற்றைக்கெல்லாம் சேரப் பிரதிநிதியாகவும், போர் வழிகாட்டியாகவும் சேர மன்னன் அனுப்பிவைத்த சற்குண சங்கரன் உள்ளே நுழைந்து தலை தாழ்த்திப் பணிந்தான்.

கழுத்திலிருந்த வைரமணி மாலையைக் கழற்றி எறிந்த குப்த மகாசக்கரவர்த்தி மொழிந்தார்: "சற்குண சங்கரன்! இரவு எனக்கு அமைதியைத் தரவில்லை. தமிழர்களை வெல் வதற்கு எனக்குப் பரிபூரண அமைதி தேவை. உன் ஆட்களை ஏவி, நல்லதொரு விலைமகளை அங்கு அழைத்துவர ஆணை யிடு!"

சற்குண சங்கரன் விழித்தான்.

"ஏன் தயக்கம்?"

"புத்தர்சேரிப் பகுதியைத் தவிர்த்தால் விலைமகள் வாழும் பகுதி இருக்கிறது. அங்கு போய்த் திரும்புவது என்பது..."

குப்த மகாசக்கரவர்த்தி புலியாக உறுமினார்:

"மறுத்துப் பேச இது நேரமில்லை. நீ எங்கு செல் வாயோ, எனக்குத் தெரியாது. சக்கரவர்த்தி நான். எனக்

ஏற்ற தகுதியான ஒரு பெண்- அதுவும் தமிழ்ப் பெண்ணாகத் தேவை. வஞ்சம் தீர வேண்டும்; நெஞ்சில் அப்போதுதான் போர்த் திட்டம் நிறைவேறும். செல்; நிற்காதே! கால தாமதமாகவும் வராதே!”

மேற்கொண்டு எதையும் பேச முடியாத சத்ருண சக்கரன், குழம்பிய மனத்துடன் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான்.

தங்கக் குவளையில் மதுவை நிரப்பி நிரப்பித் தாக சாந்தி செய்துகொண்டிருந்தார் சமுத்திரகுப்த சக்கரவர்த்தி. சற்றே தொலைவில் கொல்லேறு ஏரி சலனமற்றுக் காட்சி தந்தது. வானத்திலே அதே வைரமணிப் பொட்டுக்கள்; வலம் வந்த கன்னி நிலா!

உடலின் வெப்பத்தைத் தணிக்கவல்ல ஒண்டொடி ஒருத்தி, பொற்கொடியாய் அசைந்து வர, போதைக் கண்ணுடன் கவனித்துக் கொண்டிருந்தார் மகாசக்கரவர்த்தி. போர்ப் பயணங்களில் சக்கரவர்த்திகளுக்கு இப்படியான போதை தரும் விளையாட்டுக்கள் சர்வ சாதாரணம். வட தேசத்து மன்னர்கள் விலை மாதர்களை உடன் அழைத்துச் சென்றதையும், தமிழ் தேச மன்னர்கள் மனைவிமார்களைக் கொண்டு சென்றதையும் வரலாறு வாய் கூசாமல் செப்புகிறதே!

சற்றைக்கெல்லாம் சத்ருணன் உள்ளே நுழைந்தான்.

“சக்கரவர்த்திகள் ஆணையை நிறைவேற்றி விட்டேன்!”

“அப்படியா மகிழ்ச்சி. நீ போகலாம்; அவளை வரவிடு!”

ஜல்...ஜல்...ஜல்...ஜல்...

பாதச் சிலம்பு பண்ணிசை பாடியது. அந்த இசை எப்போதோ கேட்டுப் பழகியது போலிருந்தது மகா சக்கரவர்த்திக்கு! சில்லென்ற காற்றின் வருகை!



நீடு துயில் நீங்கப் பாடிவரும் வெண்ணிலவு நுரைத் திரையைக் கிழித்துக்கொண்டு முகம் காட்டுவது போல, துகில்மறைவின் திரைச் சேலையை விலக்கிக் கொண்டு துள்ளி வரும் புள்ளி மானென்ன உள்ளே நுழைந்த அந்தப் பெண்ணணங்கு கொள்ளை அழகை அள்ளிச் சொரிந்தாள். அவளைக் கண்ட சமுத்திரகுப்தர் திகைப்புக் கடலில் மூழ்கினார்.

போதைக் கிறக்கம் புதையுண்டு போக எழுந்தார்; விளக்கின் திரியை மேலும் ஏற்றினார்; ஒளியின் வேகம் மேலும் பரவியது.

ஆர்ந்த மதி சோர்ந்துபட, கனன்ற கண்கள் மருண்டு காண, “தேன்மொழி!” என்று அழைத்தார். சொல்லில் தடுமாற்றம்.

“ஆமாம்; தேன்மொழிதான்!” அவள் அதற்கு மேல் எந்தவிதமான மறுமொழியையும் கூறவில்லை.

எதிர்பாராத இந்தச் சந்திப்பு சக்கரவர்த்தி சமுத்திர குப்தரை எண்ணக் கடலில் மூழ்கடித்து, மூச்சுத் திணறலுடன் கூடிய திக்குமுக்காடலை உண்டுபண்ணி விட்டது. தேன்மொழி இன்னும் உயிருடன் இருக்கிறாளா? அதுவும் இந்த நிலையிலா இருக்கவேண்டும்? கடவுளே...! விலைமாதாய் விலக்குற்றுப்பட்டு விரயத்தைத் தேடியலையும் வீணுருவாக வல்லவோ வந்து நிற்கிறாள்? இவள் பேசிய காதல் காவியம் என்ன? கற்பிலக்கணம் என்ன? வீர காதை என்ன? அத்தனையும் பொடிந்து தூள் தூளாய்ப் போய்விட்டனவா? ஐயகோ! என் கண்களை என்னால் நம்ப முடியவில்லையே! எனக்காக வாழாவிட்டால் போகிறது! இன்னொருவனுக்காக-ஒருவனுக்கு ஒருத்தியாகவாவது வாழ்ந்திருக்கலாமே! நான் மறந்து வாழ்ந்துவிட்டேன்; இவள் துறந்து-கற்பைத் துறந்தா வாழ வேண்டும்? இதுவா, தமிழகத்துப் பண்பு? சீ, சீ! கேவலம்! கேவலம்!

கனன்ற உடலிலே தண்ணிய குளுமை! எதிர்பார்த்த பெண்ணாசையில் புதிர் எழுப்பிய கேள்விக்குறி! ஆசை தானாகத் தணிந்தது: தலை நாணலாகக் குனிந்தது. அதற்கு மேலும் சக்கரவர்த்தியால் பொறுமையாய் இருக்க முடியவில்லை. பெண்ணும் வேண்டாம்; மண்ணும் வேண்டாம். இந்த நிலையில் எந்தப் பெண்ணைத் தெய்வமகளாக இதயத்தில் நிறுத்திப் பூசனைக்குரியவளாக நினைத்து வந்தோமோ அவளை பலிபீடத்துக்குரியவளாக எதிரே வந்து நிற்கும் நிலையில்—ஓர் இன்ப வெறியா? சே, போ!

விரலிலே காதல் விளக்கம் பேசிக் கொண்டிருந்த கணையாழியை நோக்கினார். அது பேசிய கதைகள்தாம் எத்தனை! எத்தனை! கணையாழியைக் கழற்றினார். "நான் எதிர்பார்க்கவில்லை!"

"நானும்தான் எதிர்பார்க்கவில்லை!"

"அதாவது...சக்கரவர்த்தியே கிடைப்பாரென்று?"

"ம்...சக்கரவர்த்தி பெண் லோலனாக இருப்பார் என்று!"

எண்ணம் கூசியது; இதயம் குறுகியது. சீற்றத்துடன் சக்கரவர்த்தி சொன்னார்: "உன்னிடம் அதிகமாகப் பேச நான் விரும்பவில்லை. இதோ, உன்னிடமிருந்து பெற்ற அவமானச் சின்னம்!"

கணையாழியைச் சுழற்றி வீசி எறிந்தார். "எடுத்துக் கொண்டு சென்றுவிடு!"!

சக்கரவர்த்தி சந்திரகுப்தரின் இந்த அலட்சியம், தேன்மொழியைச் சந்நதக்காரியாக மாற்றிவிட்டது. "இதைப் பெறத்தான் வந்தேன்; இந்த உடலை விலைபேச வரவில்லை, மகத மகாசக்கரவர்த்திகளே! நான் விலைமகள் என்று தாங்கள் கருதுவீர்களேயானால் அது உங்கள் குற்றம். ஒரு தமிழ் மகள் எப்படி வாழ்வாளோ அப்படித்தான் இன்றுவரை வாழ்ந்து வருகிறேன். மாவீரச் சக்கரவர்த்திக்



காதலர் வருவார் வருவார் என்று யுக யுகாந்திரமாகவும் காத்திருந்து நோன்பு நோக்க முடிவு செய்த வாழ்க்கை என் சோக வாழ்க்கை!"...தேன்மொழியின் கண்கள் கலங்கி விட்டன. விம்மிய மார்பகமும், கேவிய ஓசையுமாக மீண்டும் பேச்சைத் தொடர்ந்தாள்:-"கங்கைதான் தாயது என்கிறீர்கள்; ஆனால் அதன் கரையில் வாழ்பவர்களெல்லாம் தூயவர்களாக இருக்கமுடியாது என்பதை நிரூபித்து விட்டீர்கள். காவிரியாள் அணைத்துச் செல்லும் கன்னித் தமிழ் நாட்டில் பிறந்தவள் நான். சென்னிமேல் வைத்துக் கூத்தாடும் செந்தமிழ்ப் புனிதம் எங்களைச் சார்ந்தது என்பதை தாங்களாகவே எடுத்துக் காட்டிவிட்டீர்கள். போர் வெறி கொண்டு தாங்கள் வரும் வருகையைக் கேள்விப்பட்டு எதிர்பார்த்தேன். சக்கரவர்த்திகளே! இந்த உடல் இன்றளவுக்கும் மாசுபடவில்லை. நாளை அது தீயில் பட்டுவிடும். அதற்கு முன்...அதற்கு முன்...தங்களைச் சந்திக்க முயன்றேன். அதன் பயனாகத் தாங்கள் போர் வெறியுடன் பெண் வெறியும் கொண்டு தமிழ்மகள் ஒருத்தியைப் பலி கேட்டு அனுப்பிய ஆணை விதி வசமாகச் சந்திக்க நேர்ந்தது. என் காதலர்—நாவலந்தீவின் மகாசக்கரவர்த்தியின் உடலில் விலைமகளின் களங்க ரத்தம் கலக்கக் கூடாதே என்ற நற்பண்புடன் நானே வந்தேன். இது தவறு? தங்களைக் காதலித்ததற்காக இதைவிட ஒரு பெரிய தியாகம் என்னால் செய்துவிட முடியாது. ஆனால், தாங்களோ, பண்பிலா முறையில் கணையாழியைச் சுழற்றி எறிந்தீர்கள். உண்மைதான். மாசு படிந்த—சொன்ன சொல் தவறிய—ஏன்? தங்கள் வாக்குப்படி கோழையான தங்கள் விரலிலே அது இடம் பெற்றிருக்கத் துளியும் அருகதையில்லை! நான் போகிறேன்!"

அவள் திரும்பினாள், புனலாடிய விழிகளைத் துடைத்த வண்ணம்!

"நில்...!"

முகத்தை மட்டும் திருப்பினான்.

"என்னுடைய கணையாழி எங்கே?"

"இந்த என் முயற்சிக்குத் துணை புரிந்த ஒரு கேவலமானவனுக்குப் பரிசாகத் தந்துவிட்டேன். அதற்குரிய முடிவு அதுதான்!" மேலும் அங்கே நிற்க விரும்பாத தேன்மொழி மயான நினைவு கொண்டவளைப் போல் நெடும் பயணம் செய்து கொண்டிருந்தாள்.

மனமென்ற அந்தச் சாட்சிக்காரன் கன்னங்களில் 'பளார், பளார்' என்று வலிமை கொண்டு அறைவது போலத் தெரிந்தது சக்கரவர்த்திக்கு. அவர் மயங்கிக் கூனிக் குறுகி அப்படியே அயர்ந்துவிட்டார். கண்களிலே நீர்க் கரை புரண்டது. தெளிவற்றிருந்த இதயக் கோயிலில் யாரோ-யாரோ என்ன- தேன்மொழி அகல்விளக்கொன்றை ஏற்றி, ஏற்றி வருவதாகத் தெரிந்தது.

பொல்லென்று விடிந்தது பொழுது.

அங்கே...

போருக்கென இறக்கப்பட்ட தண்டோரா, தடையமோ எதையும் காணோம். ஒரே மயான பூமிபோலக் காணப்பட்டது.

கொல்லென்று சிரித்தது; அலைக்கரம் தட்டியது, கொல் லேறு ஏரி.

- 1965

# தாது கோபுரம்

அரண்மனை அல்லோல கல்லோலப்பட்டது. எங்கும் சோகக் குழப்பம்! எவர் முகத்திலும் சோர்ந்த குமுறல்! திசைக்குத் திசை வீரர்கள் பறந்த வண்ணம் இருந்தனர். 'என்ன நடந்ததோ? ஏது நிகழ்ந்ததோ?'-எவர் நாவிலும் இதே சொற்கள்!

ஏற்கனவே உடல் நலிவால் படுக்கையில் கிடந்த ரோகணத்து மாமன்னர் கமுனு எதைப் பற்றியும் அதிகமாகக் கவலைகொண்டு மேலும் உடலைச் சலிப்பாக்கிக் கொள்ளாதவராய், அடிக்கடி சாளரத்தை நோக்கிய வண்ணமாக இருந்தார். ருவான் வெலிசயா எனப்படும் தாது கோபுரத்தின் நிர்மாணத் தொடக்கத்திலேயே அவருடைய கவனம் இருந்தது. அரண்மனையிலோ, வேட்டைக்குச் சென்ற இளவரசன் சாலியைக் காணோம் என்ற குழப்பம்! குமுறல்!

மிருகம்தான் அடித்துப் போட்டுவிட்டதோ அல்லது திசை தெரியாத இடத்தில் திணறிக் கொண்டிருக்கிறானோ? விளையாட்டுப் போல ஒரு தினமா, இரு தினங்களா?

பத்து நிமிஷங்களுக்கு மேலாகிவிட்டன. இனியும் தாமதித்தால் பயனில்லை என்று கருதிய தீசன், நாலு வீரர்களை அழைத்துக்கொண்டு தாமே புறப்பட ஆயத்தமானார்.

"அண்ணா!"

மன்னர் கமுனு மெல்லத் திரும்பிப் பார்த்தார். அவருடைய அழகிய வதனம் வறண்டிருந்தது. துன்பத்தின் ரேகைகள் பூரண முற்றுகையுடன் காணப்பட்டன. கண்களில் மாவலி கங்கை பிரவாகம் எடுத்தது. இலேசான பெருமூச்சு!

"கவலைப்படாதீர்கள் அண்ணா! எப்படியும் சாலியைக் கண்டுபிடித்து அழைத்து வருகிறேன்!"-தம்பி தீசன் தேற்ற வேண்டுமே என்று வலுவான சொற்களை அழுத்தமாகச் சொன்னார். ஆனால் மன்னர் கமுனு?

புன்னகையில் சுவடாய் தவழ அவலமாக நோக்கினார். "எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை, தம்பி!"

"எனக்கு நிறைய இருக்கிறது, அண்ணா! ஏதோ திசை தெரியாத இடத்தில் திண்டாடிக்கொண்டு இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். எப்படியும் கண்டுபிடித்து அழைத்து வருவேன்!"

அருமைத் தம்பி தேற்ற வேண்டுமே என்று தேற்றுகிறான். ஆனாலும் அவனைத் தடுப்பானேன்? சென்று பார்த்துவிட்டுத்தான் திரும்பட்டுமே! "தம்பி! ருவான் வெலியா எப்படி இருக்கிறது? என் மூச்சிருப்பதற்குள் அந்தத் தாது கோபுரத்தைக் கட்டிக் காண்பித்து விடுவாயா?"

தீசனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. இளவரசனைக் காணாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் அண்ணன் ருவான் வெலிசயாவெனும் தாது கோபுரத்தின்மீது அக்கறை காட்டுகிறாரே!



தம்பியின் இந்தச் சிந்தனையைப் புரிந்துகொண்ட ரோகணை மன்னர் கமுனு, மெல்லச் சிரித்த வண்ணம், "தம்பி! இந்தப் பிறவியில் எனக்குள்ள கடைசி ஆசை நீ நினைப்பது போல் சாலியல்ல! அவனில்லாவிட்டால் இந்தப் பரந்த ரோகணத்தை ஆள நீ இருக்கிறாய்! அவனிருந்தாலும் கூட உனக்குப் பின்தான் இந்த நாட்டை ஆள வேண்டும் என்பது என் விருப்பம். இதனைப் பிரகடனப்படுத்தவும் இருந்தேன். தீசா! உன் அண்ணன் வீரத்தால் சாதித்துப் பெறவேண்டிய புகழனைத்தையும் பெற்றுவிட்டது. ஆனால் என் இதயம் குளிரப் பௌத்தத்துக்கு நான் செய்யவேண்டிய ஒரே தொண்டு இந்தத் தாது கோபுரம்-ருவான் வெலிசயா! அதனை விரைவில் முடித்து எனக்குக் காட்டு! அப்போதுதான் என்னுடைய ஆத்மா சாந்தி அடையும்!"

என்ன மறுமொழி கூறுவதென்றே புரியாமல் நின்றார் தீசன். ருவான் வெலிசயாவின் வேலையே இப்போதுதான் தொடக்கம் பெற்றிருக்கிறது. முடிவு பெற ஆண்டுகள் பலவானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையே!

"விரைவில் கட்டி முடிப்பேன், அண்ணா! எனக்கு விடை கொடுங்கள்!" என்றார் தீசன். மன்னர் கமுனுவும் தலையசைவின் மூலம் விடை கொடுத்து அனுப்பி வைத்தார்.

இலங்கை வரலாற்றில் தனிப் பெரும் புகழாசனத்தில் வீற்றுச் செங்கோலோச்சியவர் மன்னர் கமுனு. இவரைத் துஷ்ட கமுனுவென்றும் வரலாறு கூறுகிறது. முழுக்க முழுக்க முந்திய பகுதியில் தமிழர்களை இலங்கையை விட்டு விரட்டியடிக்க முனைந்ததால் 'துஷ்டகமுனு'வென்று தமிழர்களாலும் பிந்திய பகுதிகளில் தாம் ஒரு தீவிர பௌத்தன் என்பதையும் மறந்து, கண்டி கதிர்காமக் கடவுளுக்குத் திருப்பணிகள் பல செய்ததால் 'துஷ்ட கமுனு' என்று சிங்களவர்களாலும் தூற்றுதலுக்கு ஆளான 'துஷ்டப் பட்டம்' அது!

ரோகணத்தின் தலைநகரான மகாகமை ஒரு நிலையான அமைதி பெற்றதென்றால், அது மன்னரின்-கமுனுவின்-வீரச் சாதனைதான். அத்தகைய வீரம்தான் இப்போது படுக்கையில் சாய்ந்து கிடந்தது. வயதான கோளாறு என்று சொல்வதற்கில்லை. வயதில் சாதித்த வீர சாகசச் செயல்களின் தளர்ச்சிக் கோளாறு என்று வேண்டுமானால் சொல்லலாம்! காலம் சென்ற அவருடைய வீரத்தாய் விகாரமா தேவிதான் பௌத்த மதப் பற்றுக்கொண்டு மகன் கமுனுவை எப்படியெல்லாம் ஆட்டி வைத்தாள்! சங்க காலத்திலேயே தமிழர், சிங்களவர் என்ற இன வெறி தலைதூக்கியாடியதை 'மகாவம்ச'த்தைக் கேட்க வேண்டுமே!

கணத்துக்குக் கணம் புன்னகையும், கவலையுமாகக் காணப்பட்ட மன்னர் கமுனு இளமை வாழ்க்கையை ஒரு கணம் எண்ணிப் பார்த்து நெடிதான ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தினார். அவருடைய பகை நிறைந்த கண்களைத் திறந்து பண்பான படிப்பினையைப் போதித்தவாறே அவரிடம் தோல்வி கண்ட தமிழ் மன்னர் எராளச் சோழனும் மனுநீதி கண்ட சோழர்தானே! அவரை நினைக்க நினைக்கத் தமிழ்க் குடிக்கு ஏதேனும் செய்ய வேண்டும் போலத் தோன்றியது. கண்டி முருகனுக்குக் கடமையாற்றினார் ஆனால் மக்களுக்கு?

திடுமென்று அரண்மனையில் மகிழ்ச்சி நிரம்பிய எழுச்சிக் குரல் கேட்டது. மன்னர் கமுனு மெல்லச் சாளரத்தில் எட்டிப் பார்த்தார். தொலைவில் அரசத் தேர் வந்து கொண்டிருந்தது. மக்களின் குதூகல ஆரவாரத்தை நோக்குகையில் சாலி கிடைத்துவிட்டான் என்று ஊகிக்க நேர்ந்தது. மெல்லப் படுக்கையில் சென்று படுத்துக் கொண்டார்.

சற்றைக்கெல்லாம் இளவரசன் சாலியை அழைத்துக் கொண்டு அறையினுள் நுழைந்தார் நீசன். அவருடன் ரோகணத்தின் மதிமந்திரியான மகாதேரரும் நுழைந்



தார்... அவர் பௌத்த மதத் தலைமைப் பீடகனாளும் மன்னர் கமுனுவுக்காக எத்தகைய யோசனைகளையும் செய்ய வல்லவர். மன்னர் கமுனுவால் பௌத்தம்தான் எவ்வளவுக்குச் சிறந்துவிட்டது. உயர்ந்துவிட்டது!

மகன் சாலியைக் கண்ட மன்னர் கமுனு பொருள் நிறைந்த நோக்குடன் கவனித்தார். பிறகு தம்பியை நோக்கி, "எங்கு அகப்பட்டான்?" என்று விசாரணை செய்யலானார்.

நீசனும் பவ்வியமுடனும் அதே நேரத்தில் ஆத்திரம் கலந்த ஆவேசத்துடனும் சொன்னார் : "அண்ணா! சாலியின் புத்தி சகதியில் உழலத் தொடங்கிவிட்டது!"

கண்களைச் சற்றே அகல விரித்த கமுனு மன்னர், "என்ன நடந்தது தம்பி?" என்றார் வியந்த குரலுடன்.

"அண்ணா! 'காட்டில் வேட்டையாடப் போகிறேன்' என்று கூறி, ஒரு வேட்டுவப் பெண்ணைக் காதலிக்கத் தொடங்கிவிட்டான் சாலி! அவள் குலமென்ன? தம் மரபென்ன? மதமென்ன?"

"அப்படியா? என் சாலி! உன் சிற்றப்பன் சாட்டும் குற்றம் உண்மைதானா?"

"முழுக்கவும் உண்மை தந்தையே!"

"சாலி! மிகவும் துணிச்சல்காரன் நீ!"

"இல்லையென்றால் வேட்டுவப் பெண்ணை நான் காதலிக்க மாட்டேனே!"

"காதல் துணிச்சலைப் பெற்றவனிடமே காட்டுறாயா?"

"ஏன்? வள்ளி என்ற வேட்டுவப் பெண்ணைக் காதலித்த முருகனுக்குப் பணிகள் செய்ய, சிங்களவர் முன்பே துணிச்சலைக் காட்டிய உங்கள் மகன்தானே அப்பா நானும்?"

"அண்ணா! இருந்தாலும் இவனுக்கு இத்தனை நாவழுத்தம் கூடாது!" என்று குறுக்கிட்டார் நீசன். அவரைக் கையமர்த்திய மன்னர் கழுனு, "சாமி! காதலிக்கும் முன் சிந்தித்துத்தான் காதலித்தாயா?" என்றார் விளையமாக.

"காதல் என்பதே சிந்திப்பதுதான் தந்தையே! சிந்தியாதது காதலாகாது; காமம்!"

"உன் முடிவு?"

"அந்த வேட்டுவ மகளையே மணப்பேன்!"

"நீ அரியணைக்குரியவன்!"

"நான் அவளுக்குரியவனாகிவிட்டேன்; அரியணையைப் பற்றிக் கவலையில்லை. அதைத் துறக்கவும் சித்தமாயிருக்கிறேன்!"

"நல்லது!" என்று கூறிய மன்னர் கழுனு, தம்பி நீசனை நோக்கி, "தம்பி! அந்த வேட்டுவப் பெண் எங்கே இருக்கிறாள்?" என்றார் கடுமையாக!

"சிறைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறேன், அண்ணா!"

"அவள் மட்டும் தனியாகத்தான் இருந்தாளா?"

"உடன் அவளுடைய தந்தையையும் சிறைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறோம்!"

"இருவரையும் அழைத்துக்கொண்டு வா!"

சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த வேட்டுவப் பெண்ணும், அவளுடைய தந்தையும் அழைத்து வரப்பட்டனர். வேட்டுவப் பெண்ணைக் காண மன்னர் கழுனுவின் ரத்த நாளங்களில் வீணையின் ஒலிபோல் விண்ணென்ற நாதம் கேட்டது. இவள்தான் எவ்வளவு கொள்ளை அழகாக இருக்கிறாள்! தூயதான ஒரு தமிழச்சியின் தனிக் கோலம் அவளுடைய சந்தன மேனியில் கொலு வீற்றிருந்தது.



"பெண்ணே, நீ யார்?"-சோகமான மன்னர் நிதானமாகக் கேட்டார். ஆனால் அந்த வேட்டுவப் பெண் பளிச்சென்று பதில் சொன்னாள்: "இதோ நிற்கும் இவருடைய— என் தந்தையின் மகள்!"

அந்த உடல் நடுக்கிலும் கலகலவென்று நகைத்துவிட்டார் மன்னர் கழுனு. "பின் என் மகளென்று நான் குறிப்பிட்டேன்?"

"நல்ல வேளையாக அந்தப் பாவத்தை நான் செய்யவில்லை, மன்னர் பெருமானே!"

"என்ன? அரச குடியில் பிறப்பது பாவமா?"

"பின் இல்லையா? இல்லாவிட்டால் இதோ நிற்கும் இளவரசர் இப்போது என்னைக் கைவிட நேர்ந்திருக்குமா?" சாமி இடைப் புகுந்தான்: "நான் கைவிட்டு விடுவதாக யார் சொன்னார்கள்? சத்தியமாகக் கைவிடமாட்டேன்! நீ வணங்கும் அந்த முருகன் மீதும், நான் வணங்கும் புத்த பெருமான் மீதும் ஆணையிட்டுக் கூறுகிறேன். உன்னைக் கைவிட மாட்டேன்!"

வேட்டுவப் பெண்ணின் கண்களில் கலகலவென்று நீர் சுரந்தது. இதனைக் கண்ணுற்ற மன்னருடைய கண்களும் கலங்கத் தொடங்கின. ஆனால், தம்பி நீசன் மிகுந்த ஆவேசத்துடன் நிலைகொண்டிருப்பதைக் கண்ணுற்றுச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டார்.

"வள்ளி!"

"என் பெயர் அதுவல்ல!"

"நான் உன்னை அழைப்பது இப்படியாக இருக்கட்டுமே! ஏனென்றால் ஒருவிதத்தில் வள்ளியின் வாழ்க்கை உன் வாழ்க்கையாக அமைந்திருக்கிறது. ஆகவே, உன்னை வள்ளி என்றே நான் அழைப்பேன். வள்ளி! நீ உன் காதலைத் தியாகம் செய்வதுதான் நல்லது!"

"முடியாவிட்டா,

"உன் தந்தைக்கு மரண தண்டனை!"

"அவர் செய்த குற்றம்?"

"உன்னைப் பெற்றது!"

"இதனால் தாங்கள் அடையும் லாபம்?"

"உனக்கு ஏற்படக்கூடிய நட்டம்!"

"எனக்கு நட்டம் ஏற்பட்டதாக யார் சொன்னார்கள்? என் காதலர் மரண தண்டனை யடையவில்லையே!"

"தந்தையை விடக் காதலன் தான் பெரிதா?"

"இப்படிச் சொல்லுங்கள். ஒரு மகளுடைய வாழ்வை விடத் தந்தையின் உயிர் பெரிதல்ல!"

மன்னர் கமுனு ஒரு கணம் மலைத்துவிட்டார். "பெண்ணே! நன்கு பேசுகிறாய்!"

"இல்லை: நன்றாகப் பேசியிருந்தால், என்னைப் பெற்ற குற்றத்துக்காக என் தந்தைக்கு மரண தண்டனை அளிக்கப் போவதாகச் சொன்னீர்களே, அப்போதே பேசியிருப்பேன்!"

"என்ன பேசியிருப்பாய்?"

"தம்மை இளவரசர் என்று காட்டிக்கொள்ளாமல், என்னைச் சபண்டாண்ட மகனைப் பெற்ற பாவத்துக்காகத் தங்களுக்கு என்ன தண்டனை அளிப்பது என்று பேசியிருப்பேன்!"

நீசனுக்கு ஆக்ரோசம் வெகுவாகப் பொங்கி எழுந்தது. எவ்வளவு நெஞ்சழுத்தத்துடன் இவள் பேசுகிறாள்!

தம்பியின் உணர்ச்சி வயப்பட்ட வெச் சீற்றத்தைக் கைச் சமிக்ஞையால் அடக்கிய மன்னர் கமுனு, "வேட்டுவப் பெண்ணே! புத்திசாலித்தனமாகப் பேசுகிறாய் அல்லவா?" என்றார் குறும்பாக!



"என் பெயர் 'புத்தி' என்று வைத்திருந்தால் தங்கள் திருக்குமாரருடைய பெயரும் இணைந்து 'புத்திசாலி' என்ற சொல் அழகாக இருந்திருக்கும்!"

"அதிகப் பிரசங்கிப் பெண்ணே! நீ காதலித்த குற்றத்துக்காக உன்னைத் தண்டிக்கப் போவதில்லை. ஒரு மன்னன் முன்னால் அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசியதற்காகத் தண்டிக்கப் போகிறேன். உனக்குச் சிறைத் தண்டனை!"

"எனக்கு மட்டும் தானே?"

"உன் அப்பனுக்கும்!"

"அவர் எதுவும் பேசவில்லையே!"

"உனக்குத் துணை வேண்டாமா?"

"வேண்டாம்!"

"தனியாகவே சிறையில் இருப்பாயா?"

"என் காதலர் துணையிருக்கிறார்!"

"அவன் அரண்மனை மஞ்சத்திலிருப்பான்."

"ஆனால் என் நெஞ்சத்திலும் இருப்பார்!"

"அப்படியென்றால் தண்டனையை அனுபவி."

அதற்கு மேல் மன்னர் கமுனு எதையும் பேசிக் கொள்ளவில்லை. ஆத்திரமும், ஆவேசமுமாகக் காணப் பட்ட நீசன், வேட்டுவப் பெண்ணுடன் வெளியேறினார். அவனைப் பின்தொடர்ந்து மகாதேரரும் நடந்தார். அப்போது, "மகாதேரரே!" என்ற மன்னருடைய குரல் கேட்டுத் தயங்கி நின்றார் மந்திரியார். "உங்களுடன் கொஞ்சம் பேசவேண்டும்!"

மன்னரின் அருகே வந்து அமர்ந்தார் மகாதேரர்.

இளவரசன் சாலியின் காதல் செய்தி மகாகமை நகரம் முழுவதும் பரவியது. அரண்மனையில் காதுடன் காதுவைத்தாற்போல் பலர் பலவிதமாகப் பேசத் தொடங்கினர். இந்தப் பேச்சுக்களும், வாதங்களும் அடங்கவே பத்துத் தினங்கள் பிடித்தன. ஒருவாறு அமைதி கண்டார் நீசன். காணாமல் போன இளவரசனைக் கண்டுபிடித்தாய்விட்டது. இப்போது, ருவான் வெலிசயாவை மூன்று மாதங்களுக்குள் கட்டி முடிக்கவேண்டும் என்று மன்னர் உத்தரவிட்டிருப்பதாக மகாதேரர் சொன்னாரே, இது முடிகிற காரியமா?

ஆனால் சாலியோ பித்தம் பிடித்த நிலையில் ஊண் உறக்கமின்றி, உற்ற அலங்காரமின்றிப் பார்க்கப் பரிதாபமாக நடமாடிக் கொண்டிருந்தான். சிறைச்சாலைப் பக்கம் அவன் நெருங்காமல் இருக்கப் பலத்த காவல் போடப்பெற்றிருந்தது. சிறையில அந்த வேட்டுவப் பெண் அழுத கண்ணில் காதலைக் குளிப்பாட்டி, தொழுத கரங்களில் முருகனை வழிபட்டுத் தன்னைத்தானே கருக்கிக்கொண்டிருந்தாள். இவையெல்லாம் நீசனுக்கும் தெரியும். ஆனாலும் அந்தக் காதலை நிறைவேறவிடாமல் செய்துவிட வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார். அண்ணன் மகன்மீது அவருக்கு இருந்த பற்று, எதிர்கால நோக்கு அவரை அவ்வாறு செய்யத் தூண்டியது. மேலும் ஒரு தமிழ்ப் பெண்ணை மணப்பதா? சிங்களச் சிம்மாசனம் ஏற்பதா? கொடுமை! கொடுமையிலும் கொடுமை!

வெளியில் பாதக் குறட்டொலி கேட்டது. மகாதேரர் தான் வருகிறார். அவரை எழுந்து வரவேற்றார் நீசன். "வாருங்கள் மகாதேரரே! தங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!"

"என்ன நீசா; ஏதேனும் அவசரமான விஷயமா?"

அருகிலிருந்த பொன்னாசனத்தில் அமைதியாக அமர்ந்தார் மகாதேரர்.



"சுவாமி! மன்னருடைய ஆசை மேவிய ஆணையை எப்படி நிறைவேற்றுவது என்பதுதான் புரியவில்லை. ருவான் வெலிசயாவைக் கட்டி முடிக்க என்னதான் வேகமாக வேலைகள் நடைபெற்றாலும் இரண்டாண்டுகளாவது ஆகும். மூன்று மாதங்களுக்குள் கட்டிமுடிக்கவேண்டும்; கண்ணால் பார்த்து நிறைவடைய வேண்டும் என்கிறாரே அண்ணன்! அது முடிகிற காரியமா? தாங்களாவது எடுத்துச் சொல்வீர்கள் என்று அழைத்தேன்!"

முண்டிதத் தலையைத் தடவிவிட்டவண்ணம் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்த தேரர் தயங்கிய குரலில் சொன்னார்: "நீசா! உன்னுடைய நிலையில் நீ சொல்லும் காரணம் சரியே! ஆனால், மன்னர் என்ன நினைக்கிறார் தெரியுமா? இன்னும் மூன்று மாத காலத்துக்குள் தாம் இறந்துவிடக் கூடும் என்று உறுதியாக நம்புகிறார். ஜாதகத்திலும் மாரகம் வலிமையாகப் பேசுகிறது. ஆசையின் காரணமாகச் சிந்தையை இழந்திருக்கிறார். அத்துடன் சாலியின் பிரச்சினை வேறு!"

"சாலியின் பிரச்சினை என்னையும் பல சமயங்களில் வாட்டி வதைக்கத்தான் செய்கிறது. 'என்ன செய்வது? அவன் அந்த வேட்டுவப் பெண்ணை மறப்பதாகத் தெரியவில்லையே!"

"அவன் எப்படி இருக்கிறான்?"

"அவனும் அவன் நிலையில்தான் இருக்கிறான்!" என்ற நீசர் சட்டென்று ஏதோ முடிவுக்கு வந்தவராகக் காணப்பட்டார்.

அடுத்து அந்த வேட்டுவப் பெண்ணைச் சிறையிலிருந்து அழைத்து வரும்படி ஆணை பிறந்தது.

"பெண்ணே! காதலைத் துறப்பது அத்தனை சாத்தியமில்லை என்பதுதான் உன்னுடைய முடிவான வாதமா?"

நீசனுடைய நாவிலிருந்து சடச்சடச் சொற்கள் புறப்பட்டன.

வெறுமை நிறைந்த நகை புரிந்தாள் வதங்கி வற்றலாகி விட்ட அந்த வேட்டுவப் பெண். "பிரபோ! காதல் என்பது தாது கோபுரம் அல்ல! நினைத்தால் கட்டுவதற்கும், வேண்டாம் என்றால் இடித்துத் தள்ளுவதற்கும்! அது தெய்வ சிருஷ்டி!"

எந்த நோக்கத்துடன் அழைத்தோமோ அந்த நோக்கம் அந்த வேட்டுவப் பெண் வாயிலாகவே வெளிப்படக் கண்டு வியந்துபோனார் நீசன்! இதுவும் விதியின் சேட்டைதானா?

"பெண்ணே! நான் கட்டும் தாதுகோபுரத்தை மனத்தில் வைத்துத்தான் நீ பேசுகிறாய் என்று நினைக்கிறேன். தாதுகோபுரம் கட்டுவதென்பது அவ்வளவு எளிதா?"

"காதலிப்பதைவிட அது எளிதுதான்!"

"அப்படியென்றால் உன் காதல் நிறைவேற நான் ஒரு நிபந்தனை விதிக்கிறேன். கட்டுப்படுவாயா?"

"நிபந்தனையைச் சொல்லலாம்!"

"அதோ, நிர்மாணத் தொடக்க வேலைகள் நடைபெறும் நீ குறிப்பிட்ட அந்தத் தாது கோபுரத்தை மூன்று மாதங்களுக்குள் கட்டி முடிக்கவேண்டும் என்று மன்னர் ஆசைப்படுகிறார்; ஆணையிட்டிருக்கிறார்! நீ அதை நிறைவேற்றிவிட்டால் அடுத்துச் சாலியைக் கணவராக அடையலாம்!"

கொஞ்ச நேரம் அமைதியாக நின்றாள் வேட்டுவப் பெண்! "மன்னர் ஏன் இத்தனை அவசரப்படுகிறார்?"

"மரணத்தின் பயம்; சாவதற்குள் கண்ணால் கண்டு ஆத்ம நிறைவடைய வேண்டுமாம்!"

"மூன்று மாதங்களென்ன? மூன்று வாரங்களில் கட்டி முடிக்கிறேன். அதைக் கண்டு மன்னர் ஆத்மா நிறைந்துவிட்டது என்று சொன்னால் போதுமல்லவா?"



நீசனுக்கு ஆட்சி கண்டது. "பெண்ணே! நான் சொல்வது மிக உயரமான தாது கோபுரம்! சிங்களவர் பெருமையைப் பௌத்தத்தின் மூலம் ஸ்தாபிக்கப் போகும் ருவான் வெலிசயா!"

"புரிகிறது, பிரபோ! நன்றாகப் புரிகிறது. நீங்கள் நினைப்பது போலவே அந்த ருவான் வெலிசயாவைக் கட்டி முடிக்கிறேன். மன்னர் அதனைக் கண்டு ஆத்ம நிறைவு கண்டால் எனக்கு இளவரசரைக் கொடுத்து விடுவீர்களா?"

"வாக்குத் தவற மாட்டேன்!"

"புத்தபெருமான் மீது சத்தியம் செய்யுங்கள்!"

நீசன் அவ்வண்ணமே சத்தியம் செய்தார். பிறகு சொன்னார்: "நீ தவறிவிட்டால் சாலி, உன்னை வெறுக்குமளவுக்கு நடந்து கொள்வாயல்லவா?"

"அவ்வண்ணமே நடந்து கொள்வேன்!"

"உன் குலக் கடவுள் முருகன் மீது ஆணையிடு!"

வேலின் மேல் ஆணையிட்டாள் வேல் விழியாள் வேட்டுவப் பெண்!

ருவான் வெலிசயா வெகு வேகமாக எழத் தொடங்கியது.

தன்னின மக்கள் அனைவரையும் திரட்டி வந்து நீண்ட மரங்கள் பலவற்றை வெட்டிச் சாய்த்தாள் வேட்டுவப் பெண். அந்த மரங்களை அடுத்துச் சீவி நட்டு, மூங்கில்களாலும், பலகைகளாலும், தடித்த துணிகளாலும் தாது கோபுரத்தை உருவாக்கிச் சுண்ணாம்பு பூசித் தத்ரூபமாக நிர்மாணித்துவிட்டாள். மூன்றே வாரங்களில் ருவான் வெலிசயா முடிந்துவிட்டது அதனைக் காணக்காண வியப்பும் திகைப்பும் அடைந்தார் நீசன். இப்படி ஒரு திட்டத்தில் அது உருவாகும் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

மன்னர் இதனைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தார். மறுகணம் வேட்டுவப் பெண்ணுக்கு மரண தண்டனை விதித்தாலும் வியப்பதற்கில்லை.

பல்லக்கு ஆயத்தமானது. மன்னர் கமுனு அதில் அமர்ந்தார். பக்கலில் மகாதேரர் அமர்ந்தார். எண்மர் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு சென்றனர். உடன் திசனும் புரவியில் சென்றார்.

கால்பாக வழியைக் கடந்ததும் வானுற ஓங்கி எழுந்திருந்த ருவான் வெலிசாயவைப் பார்வையிட்டார் மன்னர் கமுனு! "ஆ! எத்தனை உயரம்! எத்தனை அழகு! என் வாழ்வின் கடமை முடிந்துவிட்டது. தேரரே! பல்லக்கை அரண்மனைக்குத் திருப்புங்கள்!" என்றார் பொன் மருவிய புன்னகையுடன்.

"கோபுரத்தைப் பார்வையிட வேண்டாமா?" திசன் வற்புறுத்தினார்.

"தேவையில்லை, தம்பி! உடல் என்னவோ செய்கிறது! இப்படியே அரண்மனைக்குத் திரும்பி விடுவோம். திசா! ருவான் வெலிசாயவால் என் ஆத்மா நிறைந்துவிட்டது. சாலி பற்றிய பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டால் நான் நிம்மதியாகச் சாகமுடியும்!"

தேரரைப் புன்னகையுடன் நோக்கினார் கமுனு. தேரரும் மெல்ல முறுவலித்தார்.

திசன் வேதனை கலந்த பொறுப்புடன் கூறினார், "அண்ணா! பிரச்னைக்கு வேறு வழியே இல்லை. அந்தப் பெண்ணை அவன் மணந்துதான் தீர வேண்டும்."

"நீயா இப்படிச் சொல்லுகிறாய்?"

"நானேதான் அண்ணா! முடிவு செய்துவிட்டேன்!"

"உன் முடிவு அதுவானால் என் ஆத்மா மேலும் நிறைவடையட்டும்!"

வேட்டுவப் பெண்ணை மணந்தான் [illegible] இளவரசன் சாலி. மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.



இதனால் அரசப் பதவியையே துறந்தான் சாலி. அரியணையில் அமர வேண்டியவன் திசன் என்று பிரகடனப் படுத்தினார் மன்னர் கமுனு!

மணமக்கள் மன்னரைக் கண்டு ஆசீர்வாதம் பெறச் சென்றனர். அவர்களிருவரை மட்டும் உள்ளே அனுமதிக்கும்படி ஆணை பிறப்பித்தார் சிங்கள மன்னர்.

இருவரும் பணிந்தெழுந்தனர். மன்னர் கமுனு புன்னகையுடன் சொன்னார்: "சோழன் மகளே! மனம் நிறைந்ததா?"

சோழ குமாரி சிரித்துச் சொன்னாள்; "பிரபோ! தங்கள் ஆத்மா நிறைந்ததாகச் சொல்லிய ஒரு பொய் மூலம், எங்கள் மனம்—மனம் நிறைந்தது. தாங்கள் ஆடிய இந்த நாடகத்தால் தங்கள் மனம் வெற்றி பெற்றதோ, என்னவோ? எங்கள் காதல் வாழ்வு பெற்றது!"

"சோழன் மகளே! உன் தந்தைக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றினேன். அவருடைய ஆத்மா வாழ்வில் சாந்தியடையும், அதுவே என் ஆத்மசாந்தியாகும். உனக்கு வாழ்க்கை அளிக்கும்படி தான் உன் தந்தை தோல்வி கண்டு உயிர் பிரியும் நேரத்தில் என்னிடம் வேண்டினார். ஆனால் உன்னை ஒரு வேட்டுவக் குலத்தில் வளர்க்கவைத்த பாவத்துக்காக என் மகனையே அளித்தேன். சிங்கள மரபைக் காக்க வேண்டுமல்லவா? ஆகவேதான் அரியணையைப் பிடுங்கிவிட்டேன்.

அதற்காக வருந்தாதே!"

"சிங்களப் பெருமா! எங்களுக்குள்ள அரியணை கானகத்தில் இருக்கிறது. அங்கே நாங்கள் தனி மாளிகை கட்டிக் கொண்டு அரசியல் தொல்லையற்ற வாழ்வில் நிலைப்போம்! ஆசி வழங்குங்கள்!"

"நிறைவான வாழ்வையும், நிறைவின்பமும் பெற்று நீடூழி வாழுங்கள்!" கமுனுவின் கண்களில் மகிழ்ச்சி நீர் கரை புரண்டது.

—1966

# தாய்

புகழ்பெற்ற மேவார் பேரரசு கலகலத்து நின்றது- ரஜபுத்திரர்கள் செய்வதென்னவென்று புரியாமல் திருதிருவென விழித்தனர்; திகைத்தனர். தலைநகரம் சித்தூர் எந்த நேரத்திலும் தவிடுபொடியாகலாம் என்று பலரும் எதிர்பார்த்தனர். காரணம் என்ன?

ஆட்சியில் நேர்ந்த அவலங்கள், முடிவில் அரசையே விழுங்க முயன்றன. மாவீரப் பேரரசரான ராணா சங்கராம் எப்படி யெல்லாம் வீரத்தாலும், விவேகத்தாலும் மேவாரைக் கட்டி யாண்டார்! வாழ்ந்து மறைந்தார்! இப்போது?

புலி வயிற்றில் பூனை பிறக்குமோ? பிறவாதோ? மாவீரர் வயிற்றில் மகா கோழை பிறந்துவிட்டான்! தலைமகன் விக்ரமஜித்தைத்தான் சொல்லுகிறோம். அவன் எதற்கும் லாயக்கற்ற மகா கோழையாக விளங்கினான். இன்னொரு புதல்வன் உதயசிம்மன். பால் மணம் மாறாத பச்சிளம் பாலகன்!

அதோ, பகதூர்ஷாவின் படைகள் மேலும் நெருங்கிக் கொண்டிருக்கின்றன! தலைநகருள் பெருங் கதவங்களை தடார்



தடார் என்று சாத்தப்படுகின்றன. அவர்களை எதிர்த்து நிற்க முடியாமல் தவியாய்த் தவிக்கிறாள் ராணி கர்ணாவதி—ராணாவின் பட்டத்தரசி. என்ன செய்வாள்? மகன் விக்ரமஜித்தின் மதிகெட்ட முறையால் பல பல ரஜபுத்திரப் பிரபுக்கள் உதவ முன் வராமல் ஒதுங்கி நிற்கத் தலைப்பட்டனர். ஆயினும் மக்களுக்கு நாட்டைக் காக்கவேண்டும் என்ற வீர உணர்ச்சி கடலாகப் பொங்கியது. பெரியவர்களையும், வீரர்களையும் மதிக்கத் தெரியாதவன் விக்கிரமஜித் ஆளும் நாட்டை எதிர்நோக்கி வரும் அந்நியப் புயல், கொடுமை வாய்ந்ததாயிற்றே!

எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை மெல்ல மெல்ல குறைந்தது ராணி கர்ணாவதிக்கு! ஆகவே புதிய ஒரு யுக்தி மூலம் தான் பகதூர்ஷாவின் படைகளை முறியடிக்க முடியும் என்பதைத் திட்டவட்டமாக நம்பினாள் மேவார் ராணி. உடனடியாகத் திறம்வாய்ந்த தூதுவன் ஒருவனை அழைத்தாள். அப்போது தில்லியை ஆண்டு கொண்டிருந்த சக்கரவர்த்தி ஹுமாயூனுக்கு ஒரு முடங்கல் தீட்டினாள். ஆமாம்; உதவிகோரி தான முடங்கல் தீட்டி தூதுவனிடம் கொடுத்து அனுப்பிவைத்தாள் அவளுடைய அந்த முடிவை அப்போது எதிர்த்தவர் பலர்; கடிந்தவர் சிலர். ஆயினும் மகனுடைய இந்தத் தவறான சூழ்ச்சியால், ஒரு குஜராத் அரசன் பகதூர்ஷாவிடம், மேவார் அடிமைப்படுவதைவிட, ஒரு தில்லிச் சக்கரவர்த்தியின் உதவி கோருவதில் குற்றமில்லை என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டாள் ராணி கர்ணாவதி!

முற்றுகை நீடித்துக்கொண்டே இருந்தது. தலைநகருள் மதில்களைத் தாண்ட முடியாமல் தவித்தன பகதூர்ஷாவின் படைகள். நாட்கள் செல்லச் செல்ல உணவுப் பிரச்னை மேலோங்கியது. இந்த நிலையில்தான், ராணி கர்ணாவதி கேட்டுக் கொண்டதற் கிணங்க, தில்லி சக்கரவர்த்தி ஹுமாயுன் பெரும்படை திரட்டிக்கொண்டு சித்தூரை

நெருங்கினர். சக்கரவர்த்தியின் படைகள் வருகின்றன என்று கேள்விப்பட்ட மாத்திரத்தில் குஜராத் படைகள் குலைந்து ஓட்டம் பிடிக்கத் தொடங்கின. கேள்விப்பட்ட ராணி கர்ணவதி பெரிதும் மகிழ்ந்தாள். பாவம்; மேவார் ராணி! அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. பகதூர் ஷாவின் படைகளை விரட்டியடித்துத் தலைநகருள் நுழைந்த டில்லி சக்கரவர்த்தி ஹுமாயுனின் போக்கு விசித்திரத்தையும், வேதனையையும் தரத்தக்கதாக அமைந்துவிட்டது. பகைதான் கொண்டுவந்த மேவார் எனக்கல்லவா ஆகு? ஆகவே இந்த ரஜபுத்திர அரசவின் சமாதானப் போக்கை நம்பாமல், அடுத்து அவர்களையே விரட்டியடித்து சித்தூர் கோட்டையில் பச்சைக் கொடியைப் பறக்கவிடத் துணிந்துவிட்டார் சக்கரவர்த்தி ஹுமாயுன். இந்த நிலை ரஜபுத்திரர் பலரை ஆத்திரப்படச் செய்தது. என்ன செய்து என்ன பயன்? மேவார் டில்லியின் கையில் சிக்கியது. செய்தியறிந்த ராணி கர்ணவதி தரையில் தூக்கி வீசிய மீனைப் போலத் துடிக்கலானாள். ரஜபுத்திரப் பெண்மணிகள் தன் குல மானத்தைக் காக்கத் தீக்குளிக்கத் தயாரானார்கள். கற்பில் சிறந்த குலமாம் தமிழ்க்குலத்துக்கு இணையான ஒரு குலம் ரஜபுத்திரக் குலமல்லவா!

கையிலே பச்சிளம் பாலகன் உதயசிம்மன். பகைவனோ அரண்மனையை நெருங்கி வந்துகொண்டிருக்கிறான். என்ன செய்வாள் ராணி கர்ணவதி? மூத்த புதல்வன் விக்கிரமஜித்தின் மீது அவளுக்கு முழுக்க முழுக்க நம்பிக்கை கிடையாது. பக்கத்திலிருந்த தாதிப் பெண் பன்னாவை நோக்கினாள். அந்தச் சமயத்தில் பன்னாதான் உற்ற துணையாக நின்றுகொண்டிருந்தாள்.

"பன்னா! இப்போது நான் உன்னைத்தான் தெய்வமாக நம்புகிறேன். அதோ அந்நியப் புலி அரண்மனையை நெருங்குகிறது. அந்தப் புலியின் சீறித் தவிக்கும் துரும்பாக நான் ஆகும் முன்னம் தீக்குளித்துவிட வேண்டும். ஆகவே,



உன் இளவரசனை உன்னிடம் ஒப்படைக்கிறேன். விக்கிரமஜித்தால் சீர்படாத மேவார், இந்தப் பாலகன் உதயசிம்மனாலாவது சீர்படட்டும். ஆகவேதான் இவனை உன்னிடம் ஒப்படைக்கிறேன். இவனைக் காப்பது உன் பொறுப்பு. நீ ஒரு தாதிப் பெண் என்பதற்காக நான் இவனை உன்னிடம் ஒப்படைக்கவில்லை. ஒரு தாய் என்ற முறையில்தான் ஒப்படைக்கிறேன். உன் குழந்தை வேறு, இவன் வேறு என்று பாராமல் வளர்க்கும் ஒரு நல்ல உள்ளத்திடம் ஒப்படைக்கிறேன். இந்தத் தாயின்—ஆமாம்; ராணியல்ல—தாயின் கடைசிக் கோரிக்கையை நிறைவேற்றுவாயா?"

"நிச்சயம் நிறைவேற்றுவேன் தாயே!" -பன்னாவின் கண்கள் பனித்தன.

"சத்தியம் செய் பன்னா!"

"அன்னை பவானி ஆணையாக ஏற்கிறேன்!"

"பன்னா நீ வாழ்க! உன் பெயர் சரித்திரத்தில் நிலைக்கட்டும்!"

ராணி கர்ணவதி, அதற்கு மேலும் தாமதிக்காமல் தீக்குளித்துவிட்டாள்.

மேவாரைப் பிடித்துக்கொண்ட டில்லி சக்கரவர்த்தி ஹுமாயுன் கெக்கலிக் கொட்டிச் சிரித்தார்! அந்தச் சிரிப்பு மட்டும் அதிக காலம் நீடித்து விட்டதா என்ன? முளைத்தான் ஷெர்ஷா! மூண்டது போர்! முடங்கிவிட்டார் ஹுமாயுன்! அந்த முடக்கத்தில் பிடித்த ஓட்டம், பாரசீக நாட்டில் போய் அவரைத் தஞ்சமடையச் செய்தது.

ஃ ○ ஃ

கி. பி 1555...

டில்லியைக் கைக்கொண்ட ஷெர்ஷா காலமானார். அவருடைய மக்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையால் நாடு கலகலத்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்

கொண்டு, பாரசீகர் உதவியுடன் படைதிரட்டி வரலானார் ஹுமாயுன். வெற்றி அவரை மிகச் சுலபமாக வரவேற்று விட்டது. மீண்டும் தில்லி சக்கரவர்த்தியானார் ஹுமாயுன்.

அதுவரை மலைக்காடுகளில் ஒளிந்து வாழ்ந்த விக்கிரமஜித், அதுதான் சமயம் என்றெண்ணி, தில்லி சென்று ஹுமாயுன் கழல் பணிந்தான். அவனுடைய வருகையை மதித்து, பட்டாக் கத்தியொன்றை இடுப்பில் அணிவித்து, மேவாரைத் தன்னுடைய ஆட்சியின் கீழ் ஆளுகை செய்யுமாறு பணித்தார் ஹுமாயுன்.

அழிந்துபட்ட சித்தூர் மீண்டும் அழகுபட நிமிர்ந்தது. தில்லித் திமிருடன் அரியணையில் அமர்ந்த விக்ரமஜித், எப்போதும் போலவே பிரபுக்களை மதியாமல் முரட்டாட்சியில் இறங்கினான். அந்தப்புரத்துத் தாதிகளுள் தலையானவளான பன்னா உதயசிம்மனைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள். அது விஷயத்தில் விக்ரமஜித் பெரிதும் அக்கறை காட்டினான் என்றுதான் சொல்லவேண்டும். அப்போது உதயசிம்மனுக்கு வயது நான்கு!

"பன்னா! உதயசிம்மனைக் கவனத்துடன் வளர்த்துவர மறந்துவிடாதே! நான்தான் என் தந்தையைப் போலத் தனிப் புகழுடன் கொடிகட்டி வாழ முடியவில்லையென்றாலும், அவனாவது அந்த வீர ரத்தத்துக்குப் புது விளக்கம் காட்டட்டும். அவன் காலத்தில் அவனுக்குத் தாயாக விளங்கப் போகிறவள் நீதான்!"

"ராணா! அவர் என்னைத் தாயாக மதிக்கிறாரோ என்னவோ! ஆனால் நான் அவரை மகனாக வரித்துவிட்டேன்! அந்த ராஜமாதாவுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றியே தீருவேன்!"

"மகிழ்ச்சி, பன்னா! மிக்க மகிழ்ச்சி!"

பிரபுக்கள் விஷயமாக ஒரு பெரும் ஆலோசனைக் குழுவொன்று கூட்ட வேண்டியிருந்ததால், அவ்விடத்தை விட்டகன்றான் ராஜா விக்ரமஜித்!



மேவார் பிரபுக்களுக்கு விக்ரமஜித்தைக் கட்டோடு பிடிக்கவில்லை. அவனை அரியணையிலிருந்து இறக்கிவிட்டு, அவனுடைய தம்பி உதயசிம்மனை உரிய வயதடையும் வரை ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தனர். முள்ளை முள் கொண்டே எடுக்கவேண்டும் என்பார்கள். அதன்படி, எந்தத் தில்லியின் ஆதரவால் இத்தனை அட்டகாசங்கள் நிகழ்ந்தனவோ, அந்தத் தில்லிக்கே ஒரு கூட்டறிக்கை அனுப்பி வைத்தனர். உரிய காலத்தில் பிரபுக்களின் வேண்டுகோளுக்குச் சாதகமாகப் பதில் கிடைத்துவிட்டது. பிறகு கவலை என்ன?

அரியணையிலிருந்து இறக்கப்பட்டான் ராணா விக்ரமஜித்! பிரதிநிதியாக வனவீர் என்பவரைத் தேர்ந்தெடுத்தனர். இந்த வனவீரும் வேறு யாருமல்லன்; விக்ரமஜித்தின் சிற்றப்பன் பிருதுவிராஜ் என்பவரின் புதல்வன்!

நீண்ட நாட்களுக்குப் பிறகு தன்னுடைய கனவு நிறைவேறியது கண்டு பெரிதாக மகிழ்ந்துபோனான் வனவீர்! எத்தனை காலம் வரை இந்தக் கனவை நனவாக்க அவன் பிரபுக்களிடமும் மற்றவர்களிடமும் பசுத்தோல் போர்த்த புலியாக நடந்துகொண்டிருக்கிறான்! உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்காயிற்றே அவன்! நீண்ட நாட்களாகத் தொடர்ந்துவரும் தலைமுறையை மாற்றி, தன் தரவழித் தலைமுறை மேவார் ஆட்சியில் அமரவேண்டும் என்று பல முயற்சிகளை மேற்கொண்டவன் அவன். அதற்கேற்ப, விக்கிரமஜித்தின் மனமும், வீரமும் பழுதுபட்டன. அவை வனவீருக்குச் சாதகமாக அமைந்துவிட்டன! ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமையில்லையேல் அனைவருக்கும் தாழ்வு என்ற அமரகவிக்கு இலக்காகத் தில்லியிலே ஷேர்ஷா ஒழிந்தான்! இதோ விக்கிரமஜித் அழிந்துகொண்டிருக்கிறான்!

* * *

ஒரு திங்கள் பொழுதை எப்படித்தான் பொறுமையாகக் கழித்தானோ வனவீர்! பிரபுக்களுக்கும் அவன்மீது

அழுத்தமான நம்பிக்கை ஏற்பட வேண்டுமல்லவா? இந்தப் பூனையும் பால்குடிக்குமா என்பதுபோல் நடந்துகொண்டாலும் உள்ளுக்குள் பெருத்த திட்டமொன்றை வகையாக வகுத்துக் கொண்டிருந்தான். எப்படியும் மேவார் அரசைத் தன்னுடையதாக்கிக் கொண்டு, தன் சந்ததிகளை அடுத்து ஆள வழி செய்ய வேண்டுமென்று அவன் பலவாறு திட்டங்களை உருவாக்கிக் கொண்டு வந்தான். அந்தத் திட்டத்தின் முதல் வெற்றியாக விக்கிரமஜித்தைக் கொலை செய்துவிட வேண்டும்! அவனை உயிருடன் உலவ விடுவது அத்துணை நலமாகப் படவில்லை வனவீருக்கு!

அரியணையிலிருந்து இறக்கப்பட்டாலும் விக்கிரமஜித்துக்குரிய சிறப்புக்கள் அரண்மனையில் எப்போதும் போலவே இருந்தன.

அன்றிரவு-

ஆத்மார்த்தமாக விருந்துண்ண அழைப்பது போல அழைத்தான் வனவீர். விக்கிரமஜித்தும் வனவீர் தன்னுடைய வலையில் விழ வருகிறான் என்று மனப்பால் குடித்த வண்ணம் விருந்தில் கலந்து கொண்டான். இருவரும் தனித்துத்தான் உண்டனர். ஏதோ சிரித்துப்பேசி மயக்கிக் கொண்டே வந்த வனவீர், திடுமென்று சற்றும் எதிர்பாராத வண்ணம் குத்துவாளை உருவி விக்கிரமஜித் மார்பில் பாய்ச்சிவிட்டான். "அம்மா!" என்ற அலறலுடன் தரையில் சாய்ந்தான் விக்கிரமஜித்! அவனுடைய ஆவி தாவை நோக்கிப் பறந்தது. அடுத்து இருக்கும் தடை...

விக்கிரமஜித்தின் தம்பி-நான்கு வயது பாலகன்-உதயசிம்மன்! அரியணைக்குரிய சின்னஞ்சிறு தடை...

அடப்பாவி, வனவீரா...! அந்தச் சிறுவனுக்காகத்தானே இவனைப் பிரதிநிதியாக அமர்த்தினர் பிரபுக்கள்! அந்தச் சிறுவனுக்கே உலை வைக்கக் கருதிவிட்டானே!



விக்கிரமஜித் கொலைபற்றி மிகத் திறமையாக மூடி மறைத்துவிட்டான் வனவீர்! தான் ஏதோ அன்பாக விருந்துண்ண அழைத்ததாகவும், தன்மீது பொறாமையும், வெறுப்பும் கொண்ட விக்கிரமஜித் தன்னைக் கொல்ல வந்ததாகவும், உயிரைக் காக்க உயிரை வாங்கவேண்டி ஏற்பட்டுவிட்டதென்றும் மழுப்பினான். முதலில் பிரபுக்கள் நம்பினாலும், போகப் போக வனவீருடைய அட்டகாசங்களைக் கவனித்து இடிவிழுந்து போயினர். வேட்டை நாய் என்று விலைபேசப்போய், அது பன்றியாக வந்து முடிந்த கதையாகப் போய்விட்டதே!

அதற்குமேல் வனவீர் சகல அதிகாரங்களையும் தன்னுடைய கைக்குள் வரவழைத்துக் கொண்டான். தில்லிக்குச் சாதகமாகப் பல தந்திரக் காரியங்களைச் செய்து சலுகைகளைப் பெற்றுவிட்டான். உதயசிம்மனை ஒழித்துவிட்டால் இனி எந்தவிதத் தடையும் ஏற்படுவதற்கில்லை!

மதுவை நெஞ்சுக்குழாய் வரை நிரப்பிக்கொண்டான் வனவீர். இடுப்பில் வாளை எடுத்துக் கட்டிக் கொண்டான். பணியாளன் ஒருவனை ஓங்கிக் குரல் விடுத்து அழைத்தான். "ஏய்...! இளவரசன் உதயசிம்மன் அந்தப்புரத்தில்தானே இருக்கிறான்?"

"ஆமாம், பிரபோ!"

"எந்த இடத்தில்?"

"பன்னாவின் அறையில்!"

"தாதிப் பெண்ணிடமா?"

"ஆமாம், பிரபோ!"

"நான் குழந்தையைப் பார்க்க வருவதாகச் சொல்!" என்று கூறிய வனவீர், "ஏன், உதயசிம்மா! நீயும் இன்றுடன் ஒழிந்தாய்!" என்று தன்னுள் தானே சொல்லிக்கொண்டு கெக்கலி கொட்டிச் சிரித்தான்.

அந்தப் பணியாளன் பதறியே போனான். அவனுடைய கால்கள் தள்ளாடித் தள்ளாடி நடந்தன. அவன் வேறு யாருமல்லன். தாதிப் பெண் பன்னாவின் கணவன்தான்!

* * *

செய்தியைக் கேள்விப்பட்டுத் துடியாய்த் துடித்து விட்டாள், பன்னா. செய்தியைக் கூறிவிட்டுக் கண்ணீர் மல்க எதிரே நின்றுகொண்டிருந்தான் கணவன். திறந்து கிடந்த சாளரத்தின் வழியாக வெயில் கடுமையாக நுழைந்து வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. இருளில் சிக்கிய நிலை போன்று என்ன செய்வதென்றே இருவருக்குமே புரியவில்லை. பொற்றொட்டிலில் அரசகுமாரன் உதயசிம்மன் ஆனந்தமாக நித்திரை செய்துகொண்டிருந்தான். வெளியில் பன்னாவின் மகன் தத்தித்தத்தி நடை நடந்து விளையாடிக்கொண்டிருந்தான்.

'நீ ஒரு தாதி என்ற முறையில் குழந்தையை ஒப்படைக்கவில்லை. ஒரு தாய் என்ற முறையில்தான் ஒப்படைக்கிறேன்.' கர்ணாவதி அன்று கூறிய சொற்கள் நினைவில் கொட்டமடித்தன. அந்த அரச மாதாவின் வாக்குறுதியைக் காக்கமுடியாமலே போய்விடும் போலிருக்கிறதே! ஐயகோ! இது என்ன கொடுமை?

பன்னாவின் சிந்தனையில் ஒரு மின்னல் பளிச்சிட்டது! ஆமாம்; அதைவிட வேறு வழியே இல்லை!

பொற்றொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த அரசகுமாரனைத் தூக்கி முத்தமிட்டாள். பிறகு அவன் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களைக் கழற்றினாள். கிழிந்த ஆடைகளை அணிவித்து கணவனிடம் கொடுத்து, "அரசகுமாரனை எவ்வழியிலும் காப்பது நமது கடமை! இவன் நமக்கு மட்டும் பிள்ளையல்லன்; நாட்டுக்கும் பிள்ளை. விரைவில்



கொண்டு போங்கள். யாருக்கும் இவன் அரச குமாரன் என்பது தெரியக்கூடாது!" என்றாள் படபடப்புடன்.

பன்னாவின் கணவன் விழியாக விழித்தான்.

"பன்னா! அரசர் வந்தால் என்ன பதில் சொல்வாய்?"

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். சொன்னதைச் செய்யுங்கள்!"

பன்னாவின் கணவன்-காவற் பணியாளன் உதயசிம்மனைத் தூக்கிக்கொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்றான்.

வெளியில் விளையாடிக்கொண்டிருந்த தன்னுடைய மகனை அழைத்து அரச ஆடையாபரணங்களை அணிவித்தாள் பன்னா! அவளுடைய கண்கள் பொங்கி வந்த நீரை, வெகுவாகப் பாடுபட்டு அடக்கிக்கொண்டன. ஆசை தீர முத்தங்களை வழங்கினாள். பிறகு பொற்றொட்டிலிட்டுத் தாலாட்டினாள். குழந்தையும் காணாத சுகம் கண்டு கண்ணுறக்கமடைந்தது.

திடும் மென்று ஒரு பேரிரைச்சல்...!

வனவீரன் சிரிப்பொலித்தான்...!

"பன்னா...? எங்கே உதயசிம்மன்?"

"பிரபோ! இளவரசன் தொட்டிலில் தூங்குகிறான். தூக்கத்தில் எழுப்பக்கூடாது!"

"உன்னை யார் எழுப்பச்சொன்னது? அவனை எழாமலே செய்து விடத்தானே நான் வந்திருக்கிறேன்!" என்று கூறிய வண்ணம் உள்ளே சென்று விக்கிரமஜித்தனைக் கொன்ற அதே குத்துவாளால், தொட்டிலில் உறங்கிய சிறுவனுடைய மார்பையும் பிளந்தான். பின்னர் மீண்டும் வெறிபிடித்த மனவுக்குச் சிரித்தான்; வெளியேறினான்.

அதுவரை அடக்கி வைத்திருந்த கண்ணீர், காட்டாற்றின் பெருவெள்ளம்போல மடைதிறந்து பொங்கி வழிந்தது. "மகளே!" என்று அந்தத்தாய் மனம் குமுறியது. ஆமாம்; தன் மகளையும் காப்பாற்ற முயன்றிருக்கலாம். ஆனால், வனவீர் துரத்திக்கொண்டே வருவானல்லவா? இப்போது அந்தப் பாதகன்வரை உதயசிம்மன் மாண்டுவிட்டது போலத்தானே?

தாயினும் மேலான தாயாக விளங்கிவிட்ட பன்னா, ராணி கர்ணாவதி கூறியதுபோல, சரித்திரத்தில் நிலைத்துவிட்டாள்!

-1966